www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 171

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 2 செவ்வாய்க்கிழமை (15/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


### வெடிபொருள் மீட்பு

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் இருந்து 3 கிலோமீற்றர் தூரத்தில் பற்றை ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6.25 கிலோ கிராம் சி-4 ரக வெடி பொருளை பொலிஸார் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர். மேலும் வெடி பொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அந்தப் பகுதியில் பொலிஸார் தேடுதலை மேற்கொண்டனர்.

# அமெரிக்காவுடன் தேனிலவுக்கு 'புரோக்கரை' நாடும் இலங்கை

வொஷிங்டன், மே 15

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்காக, இலங்கை அரசு வாசிங்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் பற்றன் பொக்ஸ் என்ற ஆதரவு தேடும் அமைப்பு ஒன்றை நியமித்துள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை அரசுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல்களை சரி செய்யும் நோக்கிலேயே, பற்றன் பொக்ஸ் என்ற ஆலோசனை நிறுவனத்தின் உதவியை இலங்கை நாடியுள்ளது.

இந்த நிறுவனம் அமெரிக்க காங்கிரசுடனும், ஏனைய ஒழுங்கமைக்கப்பட்ட முகவரமைப்புகளுடனும் நெருக்கமான தொடர்பை வைத்துள்ளது.

இந்த நிறுவனம் இலங்கை விவகாரங்களைக் கையாளும் பொறுப்பை, விநோதா பஸ்நாயக்க என்ற இலங்கையின் இளம் நிபுணத்துவ ஆலோசகரிடம் வழங்கியுள்ளது. இவர் இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் பஸ்நாயக்கவின் பேரனாவார்.

அனைத்துலகக் கொள்கை மற்றும் வர்த்தக விவகாரங்களில் ஆலோசனைகளை வழங்கி வரும் இவர், வெளிநாட்டு அரசுகளுக்கு அமெரிக்காவின் கொள்கை மற்றும் அமெரிக் 04

# மஹிந்த வருகைக்கு எதிராக பிரிட்டனில் போராட்டங்கள்

## புலம்பெயர் தமிழர்கள் முஸ்தீபு

லண்டன், மே 15

அடுத்த மாதம் 3 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்கு வருகை தரும் போது அவருக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடப்போவதாக புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அறிவித்துள்ளன.

பிரிட்டன் மகாராணி 2 ஆவது எலிசபெத் ஆட்சிக்கு வந்து 60 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு நடைபெறவுள்ள விழாவில் கலந்து கொள்வதற்காக மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டன் செல்லவுள்ளார். இந்த நிலையில் இறுதிக்கட்டப்போரில் போர் விதிகளுக்கு முரணாக பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த இலங்கை ஜனாதிபதி மீது சர்வதேச 04

### ரயிலில் மோதுண்டு மாணவி சாவு

கொழும்பு, மே 15

கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பு நோக்கி எண்ணெய் ஏற்றிச் சென்ற ரயிலில் மோதுண்டு துடெல்ல பிரதேச பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பகல் பாடசாலை முடிந்து மாணவி வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை திடீரென ரயிலில் மோதுண்டு குறித்த மாணவி உயிரிழந்தார். இன்னொரு மாணவி காயமடைந்தார்.

### முள்ளிவாய்க்கால் நினைவகம் கனடாவில் திறப்பு

கிளிநொச்சி, மே 15

முள்ளிவாய்க்கால் அவலத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவில் மே 18இல் அனுஷ்டிக்கப்படவுள்ள தமிழீழ தேசிய துக்க தினத்தை முன்னிட்டு கனடா ரொறன்ரோவில் முள்ளிவாய்க்கால் நினைவகம் ஒன்று உணர்வுபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.


# கூட்டமைப்பு பங்கேற்காவிட்டால் தெரிவுக்குழுவுக்கு ஐ.தே.க. வராது

## ஜனாதிபதியிடம் நேரில் திட்டவட்டமாக ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 15

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்ட அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பங்கேற்கச் செய்வதற்கு அரசு முழு முயற்சிகளை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தெரிவுக்குழுவில் பங்கேற்று தீர்வை எட்டுவதற்கு அரசுக்கு ஒத்துழைக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரில் தெரிவித்தார். அத்துடன் 13ஆவது அரசியல் திருத்தச்சட்டத்தை உடன் நடைமுறைக்குக் கொண்டு வருமாறும் ஜனாதிபதியிடம் அவர் கோரினார்.

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்காகப் பொது எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பது தொடர்பிலும், அதற்குச் சாதகமான 04



# பூசகரின் மருமகனைக் கொன்ற குற்றவாளிக்கு மரண தண்டனை

## 10 வருடங்களின் பின் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 15

10 வருடங்களுக்கு முன்னர் அச்சுவேலியில் பூசகர் ஒருவரின் மருமகனை கத்தியால் குத்தி கொலை செய்த நபருக்கு யாழ். மேல் நீதிமன்றம் நேற்று மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஏனைய ஐந்து சந்தேக நபர்களையும் நிரபராதிகள் என்று தெரிவித்து அவர்களை நீதிமன்றம் விடுவித்தது.

இந்த பரபரப்பான வழக்கு தொடர்பாக தெரிய வருவதாவது:-

2002 ஏப்ரல் 26 ஆம் திகதி அச்சுவேலி சித்திர வேலாயுதர் கோயிலில் பூஜைசெய்யும் நபருக்கும் இன்னொரு தரப்பினருக்கும் அந்தக் கோயில் உரித்து சம்பந்தமாக ஒருவருடமாக மனக்கசப்பு இருந்து வந்துள்ளது.

குறித்த ஆலய 04

# இந்தியா எதைத் தந்துவிடப்போகிறது என்று உழுத்ததைத் தூக்கிக் காட்டினீர்கள்?

## மெனிக்பாம் மக்கள் மீது பாய்ந்தார் அமைச்சர்

வவுனியா,மே 15

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஆய்வுசெய்ய வந்த இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவிடம் பழுதடைந்த பருப்பைக் காட்டியதற்காக வவுனியா இடைத்தங்கல் முகாமிலுள்ள மக்களைக் கடிந்து கொண்டார் மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன்.

''இந்தியா என்னத்தைத் தந்துவிடப்போகிறது என்று அவர்களிடம் கொண்டு போய் உழுத்த பருப்பைத் தூக்கிக் காட்டினீர்கள்'' என்று கடுகடுத்தார் அமைச்சர். நேற்று முன்தினம் இரவு 6.30 மணியளவில் கதிர்காமர் நலன்புரி 04

### வெற்றி விழாவில் பிரமாண்ட அணி வகுப்பு

கொழும்பு,மே 15

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசு வெற்றியீட்டி 3ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, சுமார் 13 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் பங்கேற்கும் பிரமாண்ட இராணுவ அணிவகுப்பு நிகழ்வுக்கு அரசு ஏற்பாடு செய்து வருகிறது. 04

# தடுப்பில் உள்ளோர் பட்டியலை பார்க்கச் சென்றோர் ஏமாற்றம்

வவுனியா, மே 15

வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு தடுப்பு முகாம்களில் உள்ளோரின் பெயர்ப் பட்டியலைப் பார்வையிட நேற்றுக் காலை சென்ற பெற்றோர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனர். தம்மிடம் அப்படி எந்தப் பெயர்ப் பட்டியலும் இல்லை என்று வவுனியா பயங்கரவாத தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அவர்களைத் திருப்பி அனுப்பினர். 04

### எரிபொருள் விலையை குறைக்க அரசு ஆலோசனை

கொழும்பு, மே 15

உலக சந்தையில் எரிபொருள் விலைகள் குறைவடைவதற்கான சாத்தியம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் அவ்வாறு விலைகள் குறையும்போது அதற்கமைவாக நாட்டில் எரிபொருள் விலைகளைக் குறைப்பது குறித்து அரசு தற்போது ஆலோசித்து வருகிறது. 04

# பொலன்னறுவை சிவன்கோயிலின் கருவறை உடைத்து அட்டூழியம்

## இந்துக்கள் அதிர்ச்சி

கொழும்பு, மே 15

வரலாற்று முக்கியத்துவம் மிக்க பொலன்னறுவை புனித பிரதேசத்திலுள்ள புராதன சிவன் கோயில், கருவறை உடைத்துச் சின்னாபின்னமாக்கப்பட்டு, சிதைக்கப்பட்டுள்ளது. இது இந்து மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

13ஆம் நூற்றாண்டு காலத்திற்குச் சொந்தமானதெனக் கருதப்படும் இந்த சிவன்கோயில் புனித பிரதேசத்திற்குள் பாதுகாப்பான ஒரு வலயத்தின் கீழ் இருக்கின்ற சூழ்நிலையில் எவ்வாறு இந்தச் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதென்று இந்து மத ஆர்வலர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

இந்தப் புராதன சிவாலயத்தின் கரு 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



சுழிபுரம் திருவடிநிலை கடற்கரைப் பகுதிக்கு அண்மையில் உள்ள நெல்லியாறு பிரதேச கடற்படை முகாம் அகற்றப்பட்டுள்ளதால் குறித்த பகுதியில் இருந்த போக்குவரத்துப்பாதை மக்களின் பயன்பாட்டுக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. குறித்த பகுதிக்கு அண்மையில் சென்று நிலைமைகளை பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கடற்படையின் பாவனையில் உள்ள வீதிகளை மக்களின் பயன்பாட்டுக்கு திறந்துவிட வேண்டும் என்று பாதுகாப்பு செயலர் கோத்தபாயவிடம் கோரியிருந்தார்.

# ஈழத்தில் பொது வாக்கெடுப்பு வலியுறுத்திக் கையெழுத்து

## சென்னையில் நாளை ஆரம்பம்

சென்னை,மே 15

ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வை நிர்ணயிக்கும் பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக ஒரு லட்சம் கையெழுத்துக்களைத் திரட்டும் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலைக்கு எதிரான இளைஞர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றுச் சென்னையில் பத்திரிகையாளர் மன்றத்தில் நடந்த ஊடகச் சந்திப்பின் பொழுது போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கு எதிரான இளைஞர்கள் அமைப்பின் அமைப்பாளர்களான டாக்டர் எழிலன், தோழர் இரா. திருமலை ஆகியோர் இந்தத் தகவலை தெரிவித்தனர்.

ஐக்கிய நாடுகளின் மன்றம் இலங்கை ஜனாதிபதியைப் போர்க்குற்றவாளியாக அறிவித்து, இலங்கையில் தமிழ் மக்களுக்கான பொதுவாக்கெடுப்பை நடத்தி, ஈழ மக்கள் தங்கள் விருப்பப்பூர்வமான ஆட்சியை அமைத்துக்கொள்ளும் உரிமையை வழங்குவதுதான் மனிதநீதி என்ற பிரகடனத்தை இந்த அமைப்பு வெளியிட்டது.

ஐக்கிய நாடுகள் சபையினை நோக்கி ஆரம்பிக்கப்பட்ட ஓராண்டில் ஒரு கோடி கையெழுத்து என்ற இந்தப் போராட்டத்தின் பொழுது தமிழகத்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் அனைத்து அரசியல் தலைவர்களது ஒத்துழைப்பையும் பெறப்படும் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

கிழக்குதீமோர், கொசோவா, தென் சூடான் ஆகிய நாடுகளில் இவ்வாறான வாக்கெடுப்பு நடத்தியே அங்கு விடுதலை ஆட்சி அமைக்கப்பட்டுள்ளதாக போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலைக்கு எதிரான இளைஞர்கள் அமைப்பு நினைவுபடுத்தியது.

இந்த நிலையில் நாளை சென்னை மரீனாவில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பித்து வைக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் தமிழகத்தின் முன்னணி அரசியல் கட்சியின் தலைவர்கள்; பலரும் கலந்து கொள்வார்கள் என்றும் போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலைக்கு எதிரான இளைஞர்கள் அமைப்பு தெரிவித்தது. (த)

# உயர்தரப் பெறுபேறு தொடர்பில் ஆராய மற்றுமொரு நிபுணர் குழு

கொழும்பு,மே 15

கடந்த ஆண்டு வெளியான ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து ஆராய்வதற்கான மற்றுமொரு நிபுணர் குழுவை நியமிக்கத் தீர்மானித்துள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கு அமைய எதிர்வரும் தினங்களில் இந்த நிபுணர் குழு நியமிக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் புத்திஜீவிகள் மற்றும் நீதிமன்றம் உள்ளிட்ட தரப்பினரின் கருத்துக்களைக் கவனத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் கூறினார்.

இரண்டு பாடவிதானங்களின் அடிப்படையில் மாணவர்கள் உயர்தர பரீட்சையை எதிர்நோக்கியிருந்தமையினால், அவர்களைப் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விசேட குழுவொன்றை நியமித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவினால் திட்டமொன்று வகுக்கப்பட்டுத் தம்மிடம் கையளிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் இந்தத் திட்டம் குறித்துப் பல்வேறு தரப்பிலிருந்தும் பல விமர்சனங்கள் எழுந்துள்ளதாகவும், இவ்வாறு எழுந்த விமர்சனங்கள் தொடர்பில் தாம் அதிக கவனம் செலுத்தியதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கமைவாகவே மற்றுமொறு நிபுணர் குழுவை நியமித்து இந்த விடயம் குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி தமக்கு ஆலோசனை வழங்கியதாகவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க குறிப்பிட்டார். (த)

# 75 முன்னாள் போராளிகள் ஜூலை மாதம் விடுதலை

கொழும்பு,மே 15

ஒரு வருட கால புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 75 பேர் எதிர்வரும் ஜூலை மாதம் விடுதலை செய்யப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்து இவர்கள் சமூகமயப்படுத்தப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ராஜகுரு தெரிவித்துள்ளார்.

680 முன்னாள் போராளிகள் தற்போது புனர்வாழ்வு பெற்று வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விடுதலை செய்யப்படவுள்ள முன்னாள் போராளிகளின் மறுவாழ்வுக்காக நிதி உதவி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிலர் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைய சுய தொழில் வாய்ப்பிற்காக 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மேஜர் ஜெனரல் ராஜகுரு தெரிவித்துள்ளார். (த)

# ஆசிரியர் நியமனங்களுக்கான தாமதத்தை எதிர்த்து பிரசாரம்

கொழும்பு,மே 15

கல்வியியற் கல்லூரி கற்கைநெறியை நிறைவுசெய்து வெளியேறிய பயிற்சியாளர்களுக்குக் கல்வி அமைச்சு நியமனங்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை ஆட்சேபித்து நாளை புதன்கிழமை 3000 தந்திகளைக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்குக் கல்வி வாண்மையாளர் சங்கம் தயாராகிவருகின்றது.

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னர் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலையிட வேண்டுமெனவும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். கடந்த 6 மாதங்களாக 3000 பயிற்சியாளர்கள் நியமனங்களுக்காக காத்திருக்கின்றனர். (த)

# பொன்சேகா வராததால் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,மே 15

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களைக் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொண்டமை தொடர்பில் சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளர் சேனக டி சில்வா ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான சரத் பொன்சேகா நவலோகா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகச் சிறைச்சாலை அதிகாரிகள் அறிக்கை ஒன்றை சமர்பித்து நீதிமன்றில் தெரிவித்தனர். அதனால் அவர் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என சிறைச்சாலை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

முன்வைக்கப்பட்ட கருத்துக்களைப் பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ, வழக்கை ஜூன் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அன்றைய தினம் சந்தேக நபரின் சுகாதார நிலை குறித்து நீதிமன்றிற்கு அறிக்கை சமர்பிக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களைக் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொண்டு அவர்களுக்குச் சம்பளம் வழங்கி அரசுக்கு எதிராக சூழ்ச்சிகளை மேற்கொண்டதாகச் சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளர் சேனக டி சில்வா ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (த)

# விடுவிக்கப்பட்ட போராளிகள் மூவருக்கு நடந்தது என்ன?

## சிறைச்சாலை அமைச்சருக்கு மனோ கணேசன் கடிதம்

கொழும்பு,மே 15

புனர்வாழ்வு பயிற்சி அளிக்கப்பட்டு வெளிநாட்டு தூதுவர்கள் முன்னிலையில் பெற்றோர்களுடன் சேர்க்கப்பட உள்ளதாகக்கூறி, கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி அலரி மாளிகையில் நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்ட மூன்று இளைஞர்கள் இதுவரையில் தமது பெற்றோர்களுடன் சேர்க்கப்படவும், வீடு வந்து சேரவும் இல்லை.

அவர்களைத் தேடித் தரும்படி அவர்களது குடும்பத்தவர்கள் எனது உதவியை நாடியுள்ளார்கள். அவர்கள் எங்கே? வெளிநாட்டு பிரதிநிதிகளின் முன்னிலையில் உறுதி அளிக்கப்பட்டதை போல் அவர்கள் ஏன் பெற்றோர்களுடன் சேர்க்கப்படவில்லை? அவர்கள் இன்னமும் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? ஆகிய விபரங்களை எனக்கு உடனடியாக அறிவியுங்கள் என மக்கள் கண்காணிப்பு குழு ஏற்பாட்டாளரும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை [illegible] அமைச்சர் சந்திரசிறி கஜதீரவுக்கு எழுதியுள்ள அவசரக் கடிதத்தில் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒன்றுசேர்ந்து நாட்டை கட்டி எழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி, கொழும்பு அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் புனர்வாழ்வுப் பயிற்சி அளிக்கப்பட்ட 1,800 முன்னாள் போராளிகள் தங்களது பெற்றோர்களுடன் சேர்க்கப்பட்டதாககூறப்பட்டது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கையிலுள்ள அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதர்கள் உட்பட பெருந்தொகையான வெளிநாட்டு பிரதிநிதிகளும், உள்நாட்டு-வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டதாக நான் அறிகிறேன்.

சென்னை ஹிந்து பத்திரிகையின் ஊடகவியலாளர் ஆர்.கே.ராதாகிருஷ்ணன் இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டு புனர்வாழ்வு பயிற்சி [illegible]ளைப் புகைப்படம் பிடித்து வெளியிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில், சவரிமுத்து லோரண்டின், மோரினோ ரொக்சி, முருகேசு முருகானந்தன் ஆகிய மூன்று தடுப்புக் காவல் கைதிகள் கலந்து கொண்டு, கூட்டத்தில் அமர்ந்து இருப்பதை ஊடகவியலாளர் ராதாகிருஷ்ணனின் படம் ஊர்ஜிதம் செய்கிறது. அவர்களது அடையாளங்களை அவர்களது பெற்றோர் அறிந்துவைத்துள்ளனர். ஆனாலும் சர்வதேச சமூகத்து பிரதிநிதிகளின் முன்னிலையில் உறுதி அளிக்கப்பட்டபடி இந்த மூவரும், அவர்களது பெற்றோர் மற்றும் குடும்பத்தவர்களுடன் சேர்க்கப்படவில்லை.

பிள்ளைகளை அழைத்து செல்லுங்கள் எனப் பெற்றோர்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் விளம்பரப்படுத்தப்பட்டபடி இவர்கள் பெற்றோரிடம்ஒப்படைக்கப்படவில்லை.

இந்த இளைஞர்கள், 2008 ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தால் பலவந்தமாக கடத்தி செல்லப்பட்டதாக, இவர்களது பெற்றோர் என்னிடம் தெரிவித்துள்ளார்கள். மேலும் அவர்கள் சில நாள்களின் பின் புலிகளிடமிருந்து தப்பி, ராணுவத்திடம் மன்னாரில் சரண் அடைந்ததாக கூறுகின்றார்கள். அதாவது அவர்கள் காணாமல் போய் ஐந்து வருடங்கள் ஆகின்றன

இந்நிலையில் நிகழ்வு சம்பந்தமான படத்தை கொழும்பு பத்திரிக்கைகளில் கடந்த வாரம் கண்ணுற்ற இந்த இளைஞர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளைக் கண்டு பிடித்துத் தரும்படி, மக்கள் கண்காணிப்பு ஏற்பாட்டாளர் என்ற முறையில் என்னை நாடியுள்ளனர். இந்த அப்பாவி பெற்றோர்களது துன்பங்களுக்கு பதில் தேடித் தருவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

புனர்வாழ்வு பயிற்சி அளிக்கப்பட்டு பெற்றோர்களுடன் சில நாள்களில் சேர்க்கப்பட உள்ளதாகக் கூறி கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி அலரி மாளிகையில் நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்ட இந்த மூன்று இளைஞர்களும், தற்சமயம் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரங்களை இத்துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற முறையில் உங்களிடம் கோருகிறேன்.-என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் நீர்ப்பாசனத்துக்கு 33 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 15

*வடமாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக் கொடையில் இருந்து வன்னிமாவட்டங்களின் நீர்ப்பாசனத்துறைக்கு 33 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனை வடமாகாண விவசாயக் கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம் ஹால்டீன் தெரிவித்தார்.*

இதன் பிரகாரம் வவுனியா மாவட்டத்திலுள்ள மடுக்குளக்கட்டு வேலைக்காக ஒரு மில்லியன் ரூபாவும், வவுனிக்குள இடதுகரை, வலதுகரை வாய்க்கால்களை மேம்படுத்துவதற்கு 1.5 மில்லியனும், மடுக்கந்த குளத்தின் வலது கரை வாய்க்காலை மேம்படுத்துவதற்கு 1.5 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கல்மடுக் குளத்தின் வானுடன் இணைந்த சீராக்கியை மீள்நிர்மாணிப்பதற்கு 8 மில்லியனும் வன்னேரிக்குள வான்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு 5 மில்லியனும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளத் திட்டத்தின் கீழ் பாலியாற்றுக்குக் குறுக்காகத் தாம்போதியைப் புதிதாக அமைப்பதற்கு 8 மில்லியனும் முத்துஐயன் கட்டுத்திட்டத்தின் கீழ் பேராற்றுக்குக் குறுக்காகத் தாம்போதியைப் புனரமைப்பதற்கு 4 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மற்றும், மன்னார் மாவட்டத்தில் உள்ள பெரிய மடுக் குளத்தின் வாய்க்கால்களையும் அது சார்ந்த கட்டமைப்புகளையும் மேம்படுத்துவதற்கு 2 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-13)

## மாணவருக்கு செஞ்சிலுவை வழங்கியது கணினிப் பயிற்சி

வேப்பங்குளம்,மே 15

வவுனியாவில் 35 மாணவர்கள் கணினிப் பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையில் நடத்தப்பட்ட கணினிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்த இந்த 35 பேருக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையின் பிரதான மண்டபத்தில் கணினிப் பயிற்சி நிலையத்தின் முகாமையாளர் திருமதி வானதி பிறேமதாஸின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.

இதில் வவுனியா கிளையின் நிறைவேற்று அதிகாரி, செயலாளர் எஸ்.வில்வராசா, பொருளாளர் எஸ்.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டதுடன் சான்றிதழ்களையும் வழங்கினர்.

இதேவேளை உலக செஞ்சிலுவைச் சங்க தினம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையினரால் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடியை வவுனியாக் கிளையின் தலைவரான வி.சத்தியலிங்கம் ஏற்றிவைத்தார்.

மன்னார் - வவுனியா வீதியில் விசேட தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டு பலரின் தாகம் தணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் குருதிக்கொடை, விளையாட்டு நிகழ்வு என்பனவும் இடம்பெற்றன.

(க-421)

## கஞ்சாவுடன் பிடிபட்டவர் விளக்கமறியலில்

**கிளிநொச்சி பாரதிபுரம், மலையாளபுரம் ஆகிய பகுதிகளில் கஞ்சா விற்பனை அதிகளவில் காணப்படுகின்றது.**

கிளிநொச்சி, மே 15

கிளிநொச்சி பாரதிபுரத்தில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் 29 கட்டுக் கஞ்சாவை வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுக் கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவரை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி பாரதிபுரம், மலையாளபுரம் ஆகிய பகுதிகளில் கஞ்சா விற்பனை அதிகளவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கு கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-6)



வேல்ட் விஷன் அமைப்பால் மன்னார் சிறுதோப்பு மீனவர்களின் நலன் கருதி வழங்கப்பட்ட நண்டு பிடிப்பதற்கான ஒரு தொகுதி நண்டு வலைகளை மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல், கடற்றொழிலாளி ஒருவருக்கு வழங்குகின்றார். (12)

## கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முல்லையில் ஆரம்பம்

துணுக்காய், மே 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளுக்குத் தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கான ஒரு தொகுதி தடுப்பூசி மருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், கால்நடை வளர்ப்பவர்கள் தமது பிரிவிலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்களுக்குக் கால்நடைகளை அழைத்துச் சென்று தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளுமாறும் முல்லைத்தீவு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரான திருமதி கிரிஜகலா சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் மழைக்கு முற்பட்ட காலப் பகுதியில் கால்நடைகளுக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்படுவது வழமையாகும். மேலும் கால்நடைகளுக்கு ஏற்படும் கால்வாய் நோய், முன்னடைப்பான், பின்னடைப்பான் ஆகியவற்றைத்தடுக்கும்பொருட்டு கிராமம், கிராமமாகத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இந்த மருந்துகளை ஏற்றாது விட்டால் நோய்கள் ஏற்பட்டு விலங்குகளின் இழப்புக்களைச் சந்திக்க நேரிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-415)

## வலுவிழந்தோர் தொடர்பான பயிற்சிப்பட்டறை வவுனியாவில்

வவுனியா, மே 15

பிரதான நீரோட்டத்தில் இலங்கையிலுள்ள வலுவிழந்தவர்களின் பொருளாதாரத்தில் தன்னிறைவு ஏற்படுத்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் விழிப்புணர்வுச் சங்கமும் 'மோட்டிவேசன்' நிறுவனமும் இணைந்து இந்தப் பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்தன.

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறையில் வலுவிழந்தவர்கள் சுயமுயற்சியின் மூலம் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வங்கிகள் மூலம் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், செயற்கைக் கால் பொருத்துதல், வலுவிழந்தவர்களுக்கான துவிச்சக்கரவண்டி பொருத்துதல் உட்படப்

**வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் விழிப்புணர்வுச் சங்கமும் 'மோட்டிவேசன்' நிறுவனமும் இணைந்து இந்தப் பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்தன.**

பல்வேறு பயிற்சி நெறிகளை வலுவிழந்தவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மோட்டிவேசன் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஸ்ரீநீல் சிறிவர்த்தன, செயற்திட்ட முகாமையாளர் எஸ்.நிரோசன், வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் விழிப்புணர்வுச் சங்கத்தின் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் இங்கு கலந்து கொண்டு உரையாற்றினர். இதில் வலுவிழந்த பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

(க-400)

# கருணாநிதி போன்றவர்கள் இலங்கையில் இனப்பிரச்சினையை தோற்றுவிக்க முயற்சி

### வவுனியாவில் அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

வவுனியா,மே 15

இந்தியாவில் உள்ள கருணாநிதி போன்றவர்கள் இலங்கையில் மீண்டும் இனப்பிரச்சினையைத் தோற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடைய பேச்சும், செயலும் இதனையே சுட்டிக் காட்டிநிற்கின்றது.

இவ்வாறு குற்றஞ் சுமத்தினார் நிர்மாணத்துறை, பொறியியல் துறை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் வடமாகாணத்துக்கான சேவை நிலையம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்ட போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நாட்டில் உள்ள அனைத்து மக்களும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி ஒரு குடையின் கீழ் வாழ்ந்து வருகின்றோம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் அனைவரும் எவ்வித அச்சமும், பயமும் இன்றிச் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையை ஏற்படுத்தியவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாவார். அவரால் ஏற்படுத்தப்பட்ட இந்த நிலையை இந்த நாட்டில் உள்ள அனைவரும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

ஆனால் இன்று உள்ள சில சக்திகள் மீண்டும் எமது நாட்டில் இனப் பிரச்சினையை ஏற்படுத்த முயன்று வருகின்றன. குறிப்பாக இந்தியாவில் உள்ள கருணாநிதி போன்றவர்களின் அண்மைக்காலச் செயற்பாடுகள் இதனையே சுட்டி நிற்கின்றன.

எத்தனை சக்திகள் வந்தாலும் ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட சமதான சூழ்நிலையை எவரும் சீர்குலைக்க நாம் அனுமதிக்கக் கூடாது. அனைவரும் அவற்றை முறியடிக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

வடமாகாணத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் ஏனைய மாகாணத்தில் உள்ளவர்கள் போன்று அரசின் அனைத்துச் சலுகைகளையும் பெற வேண்டும் என்பதே ஜனாதிபதியின் [illegible]. அவரின் பணிப்பின் பெயரிலேயே உடனடியாக இந்த வங்கியானது இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றார் அமைச்சர் விமல்.

வவுனியா, ஓமந்தை, வேப்பங்குளம் அரச உத்தியோகத்தர்களுக்கான வீடமைப்புப் பணிகளை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்குள் நிறைவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ பணிப்புரை விடுத்துள்ளார்.

வவுனியாவுக்கு வருகை தந்த அமைச்சர் வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள் சகிதம் ஓமந்தை, வேப்பங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் அரச உத்தியோகத்தர்களுக்கான வீடமைப்புப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்ட பின் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

இதேவேளை வீடமைப்பதற்கான காணிகள் வழங்கப்பட்டு இதுவரை அதற்கான பணிகளை மேற்கொள்ளாத அரச உத்தியோகத்தர்களிடம் இருந்து அவற்றை மீளப்பெற்று அடுத்த கட்டத்தில் உள்ள பொருத்தமான தகுதியான அரச அலுவலர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் பணித்தார்.

ஓமந்தை, வேப்பங்குளம் பகுதியில் முதற்கட்டமாக 800 அரச உத்தியோகத்தர்களுக்கு வவுனியா பிரதேச செயலகத்தினால் காணிகள் வழங்கப்பட்டன. அவர்களில் பலர் தமது காணிகளில் வீடு கட்டும் பணிகளை மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-400)

## புதிய நிர்வாகிகள்

வவுனியா, மே 15

வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகர சபைக்குட்பட்ட பதினொரு கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியே இந்த வரியிறுப்பாளர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

தலைவராக செ.சந்திரகுமாரும், உபதலைவராக ரி.அமலனும், செயலாளராக எம்.றோய் ஜெயக்குமாரும், உப செயலாளராக ஜீ. கிருஷ்ணகுமாரும், பொருளாளராக கே. ஸ்ரீசங்கரும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக என். கபிலானந், எஸ்.ஞானப்பிரகாசம், ஜி. பெனடிக், ஜே.பி. கிறிஸ்தோபர், மருத்துவர் பி. சத்தியலிங்கம், கே. சிவபாலன், எ. கலீல், ஏ. அருள்ராஜ் சேகரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுப்பில் உள்ளோர் பட்டியலை பார்க்கச் சென்றோர் ஏமாற்றம்

01↘ படையினரின் தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் பற்றிய விவரங்களை நெருங்கிய உறவினர்களுக்கு மட்டும் வெளியிட அரசு முடிவு செய்துள்ளதாக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அமெரிக்கா புறப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக அரசு இந்த அறிவிப்பை விடுத்தது. கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவிலும் வவுனியாவில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவிலும் பூசாவில் றோஸ்கோஸ் வீதியில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பணியகத்திலும் இந்தப் பெயர்ப்பட்டியலைப் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தது. பெயர் விவரங்களை 01.04.2012 முதல் அறிந்து கொள்ளலாம் என பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டிருந்த அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனை நம்பி நேற்றுக் காலை கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெற்றோர் தமது பிள்ளைகள் பற்றி அறிந்து கொள்ள வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு படையெடுத்தனர். எனினும் அங்கு அவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

தம்மிடம் தடுப்பில் உள்ளோர் பற்றிய எந்த ஒரு பெயர்ப்பட்டியலும் இல்லை என பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் பெற்றோரிடம் கைவிரித்தனர். இதனால் எந்தப் பயனும் இன்றி ஏமாற்றத்துடன் தாம் திரும்பி வந்ததாகப் பெற்றோர் உதயனிடம் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையே முன்னர் இடம்பெற்ற பேச்சின் போதும் இவ்வாறு பெயர்ப்பட்டியலை வெளியிடுவது என இணக்கம் காணப்பட்டு அதற்கான அறிவித்தலும் விடப்பட்டது. இந்த அறிவித்தலை நம்பி வவுனியாவுக்குச் சென்ற தடுப்பில் உள்ளவர்களின் பெற்றோர் இரு தடவைகள் இவ்வாறு ஏமாற்றப்பட்டனர். இப்போதும் அரசு தங்களை ஏமாற்றியுள்ளதாக அவர்கள் விசனத்துடன் தெரிவித்தனர். (த)

## பொலன்னறுவை சிவன்கோயிலின் கருவறை உடைத்து அட்டூழியம்

01↘ வறையில் சிவலிங்கத்தின் கீழ் பகுதியின் கருங்கற்கள் அகற்றப்பட்டு சுமார் மூன்றரை அடி ஆழத்திற்கு குழி தோண்டப்பட்டுள்ளது. புதையல் தோண்டும் ஒரு குழுவினரால் இது சேதப்படுத்தப்பட்டிருக்கலாமெனக் கருதப்படும் அதேசமயம், இது எப்போது இடம்பெற்றது என்பது குறித்து உடனடியாகத் தெரிய வரவில்லை. தொல்பொருள் திணைக்களம் இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. பொலிஸாருக்கும் இது குறித்து முறையிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. புனித பிரதேசத்தில் இந்தச் சம்பவம் எப்படி இடம்பெற்றது என்பது குறித்து அகில இலங்கை இந்துமாமன்றமும் நேற்று ஆராய ஆரம்பித்ததாக இந்துமாமன்ற வட்டாரங்கள் கூறின. (த)

## இந்தியா எதைத் தந்துவிடப்போகிறது என்று உழுத்ததைத் தூக்கிக் காட்டினீர்கள்?

01↘ முகாமுக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட மீள்குடியேற்ற அமைச்சர் தலைமையிலான குழுவினர் நலன்புரி முகாம் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இதன் போதே அமைச்சர் மக்களிடம் மேற்கண்டவாறு கடிந்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் மக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர்:

இடைத்தங்கல் முகாமிலுள்ள மக்களில் புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் எதிர்வரும் ஜூலை மாத இறுதிக்குள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இறுதிக் கட்டப் போரின் போது தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து கதிர்காமர், ஆனந்தகுமாரசாமி இடைத்தங்கல் முகாமிலுள்ளவர்களில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடங்களிலும் ஏனைய பகுதி மக்களை தற்காலிக இடைத்தங்கல் முகாமிலும் மீளக் குடியமர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இடம்பெயர்ந்த மக்களின் சொந்த இடங்களிலுள்ள கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்டு மீளக் குடியேற்றம் செய்வதானால் இன்னும் 4 வருடங்கள் தேவை. அதனால் தற்போது மிகவும் அவசர அவசரமாக மீளக்குடியமரவுள்ள மக்களின் வீடுகள், கிணறுகள் மற்றும் மலசல கூடங்களைச் சுற்றியுள்ள சுமார் 10 அடி வரையுள்ள பகுதிகள் கண்ணிவெடி அகற்றப்பட்டு மீளக்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். (த-16-400)

## அமெரிக்காவுடன் தேனிலவுக்கு 'புறோக்கரை' நாடும் இலங்கை

01↘ காவுடன் எவ்வாறு சிறந்த உறவுகளை பேணலாம் என்பது பற்றிய ஆலோசனைகளையும் வழங்கி வருபவராவார். வொஷிங்டனில் மிகவும் செல்வாக்குள்ள 40 வயதுக்குட்பட்டவர்களின் பட்டியலில் இவரும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டவர். இவரை ஆரம்பத்தில் வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இரண்டாவது நிலை அதிகாரியாக நியமிக்க இலங்கை அரசு முற்பட்டது. ஆனால் அவருக்குப் பெருந்தொகை ஊதியம் வழங்க வேண்டியிருந்ததால் அந்த முயற்சி தடைப்பட்டிருந்தது.

ஜனாதிபதிக்கு எதிராக நியூயோர்க் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நட்டஈட்டு வழக்கை பற்றன் பொக்ஸ் நிறுவனமே கையாண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.(த)

## கூட்டமைப்பு பங்கேற்காவிட்டால் தெரிவுக்குழுவுக்கு ஐ.தே.க. வராது

01↘ சூழலை உருவாக்குவதற்கான ஒழுங்குப் பத்திரமொன்றைத் தயாரிப்பது தொடர்பிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்டாயம் பங்கேற்கச் செய்வதற்கு அரசு உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார். அத்துடன் 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம் கூட்டமைப்பை தெரிவுக் குழுவுக்கு அழைத்து வர முடியும் எனவும் அவர் ஆலோசனை வழங்கினார்.

கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் பேசப்பட்ட முக்கிய விடயங்களை தெரிவுக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்குமாறும் ரணில் ஜனாதிபதியிடம் கோரினார்.

இதற்குப் பதில் அளித்த ஜனாதிபதி மஹிந்த, கூட்டமைப்பை தெரிவுக்குழுவுக்கு அழைத்து வருவதற்கான சகல முயற்சிகளையும் அரசு இப்போதும் மேற்கொண்டு வருகின்றது. தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்பதே அரசின் விருப்பமும் கூட. 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது. விரைவில் இதற்கு சாதகமாக ஒரு நிலை ஏற்படும் - என்றார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு கலந்துரையாடல் மற்றும் ஒழுங்குப் பத்திரத்தைத் தயார் செய்தல் தொடர்பில் ஏனைய எதிர்க்கட்சி கருத்துத் தெரிவுக்குழுக்கு வருவதற்கும் தயாராக உள்ளனர் என்று ரணில் ஜனாதிபதியிடம் கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, பஸில் ராஜபக்ஷ, டளஸ் அழகப்பெரும மற்றும் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஜோஸப் மைக்கல் பெரேரா, ஜோன் அமரதுங்க, லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் ரவி கருணாநாயக்க முதலான நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பு அரசியல் வட்டாரத்தில் நேற்று பரபரப்பாகப் பேசப்பட்டது. (த-சி)

## மஹிந்த வருகைக்கு எதிராக பிரிட்டனில் போராட்டங்கள்

01↘ விசாரணையை வலியுறுத்தி புலம்பெயர் தமிழர்கள் மீண்டும் போராட்டத்தில் குதிக்க உள்ளனர். இத்தகைய எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெறப் போவதை அறிந்து கொண்ட இலங்கை ஜனாதிபதி தனக்கு விசேட பாதுகாப்பை பிரிட்டனிடம் கோரியுள்ளார்.

எனினும் எத்தகைய பாதுகாப்பு வழங்கப்பட்ட போதும், மஹிந்தவுக்கு எதிராக மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதில் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் உறுதியாக உள்ளன. பிரிட்டன் தவிர்ந்த ஏனைய புலம்பெயர் நாடுகளில் இருந்தும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள ஈழத் தமிழர்கள் வருகை தரவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் 2010 ஆண்டும் இதேபோன்று புலம்பெயர் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கையால் ஜனாதிபதி மஹிந்த பிரிட்டன் பயணத்தில் கடும் அழுத்தங்களை எதிர்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங)

## வெற்றி விழாவில் பிரமாண்ட அணி வகுப்பு

01↘ எதிர்வரும் மே 19ஆம் திகதி காலிமுகத்திடலில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு பிரமாண்ட அணி வகுப்பைப் பார்வையிடுவார்.

இந்த அணிவகுப்பில் இலங்கையின் முப்படைகள் மற்றும் பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படை ஆகியவற்றைச் சேர்ந்த 852 அதிகாரிகள் மற்றும் 12,828 படையினர் பங்கேங்கவுள்ளனர்.

இலங்கை விமானப்படையின் 23 அதிகாரிகள் மற்றும் 167 விமானப்படையினருடன் 33 விமானங்களும், ஹெலிகளும் வானில் அணி வகுக்கவுள்ளன.

இலங்கைக் கடற்படையின் சயுர, சமுத்ர, சுரனிமல, நந்திமித்ர, ரணஜய, சாந்தி உள்ளிட்ட போர்க்கப்பல்களும், 12 அதிவேகத் தாக்குதல் படகுகள் உள்ளிட்ட 72 போர்க்கலங்களும் அணிவகுப்பில் பங்கேற்கவுள்ளன. (த)

## எரிபொருள் விலையை குறைக்க அரசு ஆலோசனை

01↘ இதற்கமைய, இன்னும் ஒரு மாத காலத்திற்குள் மண்ணெண்ணெய் மற்றும் டீசல் என்பவற்றின் விலைகள் குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது என உயர்மட்ட அரச வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

எரிபொருள்களின் விலைகள் சர்வதேச சந்தையில் அதிகரிக்கும்போது அதற்கமைய உள்நாட்டிலும் விலைகள் அதிகரிக்கப்படும். அதேசமயம், சர்வதேச சந்தையில் விலைக்குறைப்பு செய்யும்போது ஏன் விலைக்குறைப்பு செய்யப்படக்கூடாது, அப்படிச் செய்வதானால் ஏற்படும் பொருளாதார தாக்கங்கள் என்பன பற்றித் தற்போது ஆராயப்பட்டு வருகிறது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, எரிபொருள்களின் விலைகள் வானளாவ ரீதியில் அதிகரித்திருப்பது மக்களைப் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக்கியிருப்பதால் இவ்வாறான செயற்பாடுகளால் அவர்களுக்கு நிவாரணத்தை வழங்க அரசு தீர்மானித்திருக்கிறது.

எதிர்வரும் மாதங்களில் மாகாணசபைத் தேர்தல்களும் நடைபெறவுள்ளதால் இவ்வாறான நிவாரணங்களை வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பூசகரின் மருமகனைக் கொன்ற குற்றவாளிக்கு மரண தண்டனை

01↘ திருவிழாவில் சேவல் கொடி எற்றுவது வழமை. எனினும் சம்பவம் இடம்பெற்ற வருடம் சேவலும் மயிலும் சேர்ந்த கொடி ஏற்றப்படுவதற்காகக் கொடுக்கப்பட்டது. அதனால் மனக்கசப்பு மேலும் அதிகரித்தது.

கொடி இறக்கல் நிகழ்வின் போது ஏராளமான பக்தர்கள் சூழ்ந்திருக்க கோயில் பூசகர் ஏணியின் மூலமாக ஏறி கொடியை இறக்கினார். அப்போது முதலாம் எதிரியான சுந்தரம் இமயகாந் (சுமார் 35 வயது மதிக்கத் தக்கவர்) என்பவர் பூசகர் ஏறி நின்ற ஏணியைத் தட்டிவிட்டார். அதனால் பூசகர் நிலை தடுமாறி ஏணியில் இருந்து விழமுற்பட்டார். அவரைக் காப்பாற்ற முற்பட்ட பூசகரின் மருமகனான பைரவி சுபாஸ் என்பவரை முதலாம் எதிரியான இமயகாந் கத்தியால் கழுத்திலும் பழுவிலும் குத்தினார்.

2.5 சென்ரிமீற்றர் ஆழத்துக்கு கத்திக் குத்துக்காயம் ஏற்பட்டது. சுபாஸின் கழுத்தின் இடதுபக்கத்தில் கத்தியால் குத்தப்பட்டதனால் இரத்தக் குழாய் பாதிப்படைந்து அதிக இரத்தப் போக்கு காரணமாக அவர் உயிரிழந்தார். மூளைக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் குழாயில் கத்திக் குத்து விழுந்துள்ளது என்ற விடயம் உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்ததாக மேல் நீதிமன்றுக்குச் சென்று சட்ட வைத்திய அதிகாரி சாட்சியமளித்திருந்தார்.

கொலைக்குப் பயன்படுத்திய கத்தி கோயிலில் நின்ற வாழை மரம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அச்சுவேலிப் பொலிஸாரால் மீட்கப்பட்டது. சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார். தனது வீட்டிலிருந்து அந்தக் கத்தியை கோயிலுக்குக் கொண்டு சென்றதாக முதலாம் எதிரியான இமயகாந் பொலிஸ் விசாரணையில் தெரிவித்திருந்தார். இவருடன் சேர்த்து இவரது சகோதரர்களான சுந்தரம் விஜயகாந், சுந்தரம் நிமலகாந், பொன்னு சுந்தரம், சுந்தரம் ரஜனிகாந், சுந்தரம் ஸ்ரீகாந் ஆகிய ஐவரும் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

6பேரும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு மன்றின் உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டது. இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் குறித்த வழக்கு நடைபெற்றுவந்தது.

மனுதாரர் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அரச சட்டவாதி வி. திருக்குமரனும், எதிரிகள் சார்பில் நான்காம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ்.வரதராஜாவும் ஏனைய ஐந்து எதிரிகள் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவும் முன்னிலையாகி வாதாடியிருந்தனர்.

இருதரப்பு வாதப் பிரதி வாதங்களையும் பரிசீலனை செய்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் நேற்று மன்றில் தீர்ப்புக் கூறினார். அதில், எதிரி தரப்பில் சிறுசிறு சம்பவங்களையும் பெரிது படுத்தி சம்பவத்தை நியாயப்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். சம்பவம் இடம்பெற்றதனைக் கண்ட சாட்சிகள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளனர். கொலை செய்யப்பட்டவரது மனைவியும் ஒரு சாட்சி, கணவன் கத்தியால் குத்தப்படும் போது, மனைவி பதற்றமடையாது இருப்பார் என எதிர்பார்க்க முடியாது எனத் தெரிவித்த நீதிபதி முன்னைய உயர் நீதிமன்ற நீதியரசர்களது தீர்ப்புக்கள் பலவற்றையும் இந்த வழக்கில் சுட்டிக்காட்டி இருந்தார். அதன்படி,

முதலாம் எதிரியான சுந்தரம் இமயகாந் என்பவர் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளதால் இலங்கைத் தண்டனைச் சட்டக் கோவையின் 296ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய கொலைக் குற்றத்துக்கு உட்பட்டவராதலால் மரண தண்டனை விதிக்க வேண்டியுள்ளது. - என்று தெரிவித்தார்.

மரண தண்டனை விதிப்பதற்கு முன், "நீர் ஏதாவது கூற விரும்புகிறீரா" என நீதிபதி கேட்ட போது முதலாம் எதிரி, தனக்கும் கொலைக்கும் சம்பந்தம் இல்லை எனத் தெரிவித்தார்.

மன்றின் தீர்ப்பில் ஜனாதிபதி நியமிக்கும் ஒரு திகதியில் ஜனாதிபதி நியமிக்கும் ஒரு இடத்தில் சுருக்கிட்டுத் தொங்க விடப்பட்ட நிலையில் உயிர்பிரியும் வரை தூக்கிலிடப்படுவீர் எனத் தீர்ப்பு விதிக்கப்பட்டது.

ஏனைய ஐந்து சந்தேக நபர்களின் மீதான குற்றச்சாட்டுக்கள் நியாயமான குற்றச்சாட்டுக்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை எனக் கண்டு அவர்களை அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலும் இருந்தும் விடுதலை செய்கிறது எனவும் மன்று தீர்ப்பிட்டது. (ங-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆணைக்குழுவுக்கு சாட்சியமளித்தவரான மன்னார் ஆயர் விசாரிக்கப்பட்ட சம்பவம்

நாட்டில் இடம்பெற்ற ஒரு முக்கியமான நிகழ்வு குறித்து ஆராயவும், அந்த நிகழ்வுக்கு காரணமாக இருந்தவற்றைக் கண்டறியவும், அவ்வாறான நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க பரிந்துரைகளை வழங்கவும் என அதிகாரமிக்க ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும் போது அந்த ஆணைக் குழுக்களின் முன் தோன்றி தமக்குத் தெரிந்தவற்றை வாய் மூலமாக அல்லது எழுத்து மூலமாக, சாட்சியமாக அளிக்க விரும்புகிறவர்களுக்கு உடல் ரீதியாக மட்டுமன்றி உள அளவிலும் அச்சுறுத்தல் இருக்கலாகாது. இது ஒரு பொதுவான நியதி மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

அவ்வாறான ஆணைக்குழுவொன்று தன் விசாரணைகளை நடத்துகின்ற காலத்தில் மட்டுமல்ல விசாரணைகள் முடிந்து தீர்ப்புகளும் அறிக்கைகளும் வெளியான பிறகும் சாட்சியம் அளித்தவர்கள், அறிக்கைகள் வழங்கியவர்களுக்கான பாதுகாப்பு இருப்பது அவசியம். அவ்வாறு இல்லாது போகுமானால் விசாரணைகளின் போது தமக்குத் தெரிந்த உண்மைகளை வெளியிடுவதற்கு பொதுமக்கள் முன்வர மாட்டார்கள். உண்மைகளைத் தெரிந்தவர்கள் அவைகளை வெளியிடாதவிடத்து, பொய்க் கூற்றுகளும், கட்டுக்கதைகளும் மட்டுமல்ல, குற்றவாளிகள் தரப்பில் தாமும் தம்மைச் சார்ந்தவர்களும் தப்பிக்கொள்ளும் வகையிலான வழிமுறைகளுமே முன்வைக்கப்படும். அதனால் விசாரணையில் ஈடுபடும் குழுவினரும் தர்ம சங்கடத்துக்குள்ளாவார்கள். உண்மைகள் ஓடிஒளித்துக் கொண்டுவிடும்.

இந்த சர்வதேச நியதியை நாம் இங்கே சுட்டிக்காட்டுவதற்கு மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசேப் அவர்கள் பொலிஸ் அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியே காரணம். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழுவின் முன்னால் மன்னார் ஆயர் வழங்கியிருந்த சாட்சியம் தொடர்பாகவே அவர் கடுமையாக விசாரிக்கப்பட்டார் என்பது பத்திரிகைச் செய்தி. ஆணைக்குழு தனது விசாரணைகளை முடித்துக்கொண்டு அறிக்கையும் வழங்கி அது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதனை நடைமுறைப்படுத்தும்படி சர்வதேச அழுத்தங்கள் ஏற்பட்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் அந்தக் குழுவுக்கு ஆயர் வழங்கியிருந்த தரவுகள் எப்படி எங்கிருந்து கிடைத்தன என்றே பொலிஸார் விசாரித்திருப்பதாகத் தெரிகிறது. முன்கூட்டியே அனுமதி பெற்றுக் கொண்டே ஆயரின் அலுவலகத்துக்குச் சென்றுள்ளார்கள் அதிகாரிகள். அனுமதி பெற்றார்களா இல்லையா என்பது பிரச்சினையல்ல. ஆணைக்குழுவின் கடமைகள் எல்லாம் முடிந்து அறிக்கையும் வெளியாகி அது சர்வதேச மட்டத்தில் விவாதிக்கப்படுகின்ற கட்டத்தில் அதற்கு சாட்சியமளித்தவர்களை விசாரிப்பதென்பது ஆச்சரியமளிப்பதாக இருக்கிறது.

ஆணைக்குழுவின் முன் மன்னார் ஆயர் சாட்சியமளித்த போது போர் நடைபெற்ற பிரதேசத்தில் 146000 பொது மக்கள் வரை காணாமல் போயிருந்தார்கள் என்று தெரிவித்திருந்தார் என்றும் இவ்வாறு ஓர் எண்ணிக்கையை எவ்வாறு அவரால் கணக்கிட முடிந்தது என்ற வகையிலும் பொலிஸார் விசாரித்திருக்கிறார்கள்.

பல்வேறு அரச அதிபர்கள் குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் இருந்தவர்களின் அறிக்கைகளைப் பரிசீலித்து இந்த எண்ணிக்கையைப் பெற்றதாக ஆயர் அவர்களுக்கு பதில் அளித்திருக்கிறார். அத்துடன் ஐ.நா.மனித உரிமைகள் விவகார பணியகத்திலிருந்தும் தகவல்களைப் பெற்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதுவானாலும் அரசாங்கம் நியமிக்கும் ஓர் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிப்பவர்கள் இவ்வாறு பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்படுவதென்பது நாகரிகமாகத் தெரியவில்லை. அதிகாரிகளின் இம்மாதிரியான போக்குகளின் காரணமாகவே விசாரணைகளில் சாட்சியமளிப்பதற்கு பொதுமக்கள் தயங்குகிறார்கள். அதனால் பல சந்தர்ப்பங்களில் உண்மைகள் வெளிவருவது சாத்தியமாகாமல் போய்விடுகின்றது.

ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தவர்களில் மன்னார் ஆயர் மட்டுமல்ல, ஏற்கனவே சாட்சியொருவர் பொலிஸாரால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதாகச் செய்திகள் வந்ததுண்டு.

ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது சாட்சியமளித்தவர்களுக்கு போதிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லையென்று ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்டிருந்த நிபுணர்குழுவும் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது. அக் குழுவின் அறிக்கையில் அந்த வரிகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

"ஆணைக்குழு விசாரணைகளில் இராணுவத்துக்கு எந்த வித பங்கும் கிடையாது என்று அரசாங்கம் கூறிக் கொண்ட போதிலும் சில சமயங்களில் சீருடை தரித்த இராணுவத்தினர் விசாரணை அறையில் அமர்ந்திருந்து சாட்சிகளையும் பார்வையாளர்களையும் புகைப்படம் எடுத்தார்கள் என்பதை நிபுணர்குழு அறியும். இராணுவத்தினரோ புலனாய்வாளர்களோ விசாரணைகளின் போது உள்ளே அல்லது வெளியே பிரசன்னமாய் இருப்பது சாட்சிகளுக்கு மனதளவில் பீதி உணர்வை ஏற்படுத்துவதாகும். பாதுகாப்புத் தரப்பினர் பற்றிய சட்ட விரோத நடவடிக்கைகள் குறித்து கூறும்போது பழிவாங்கல் நடைபெறலாம் என்று அவர்கள் அஞ்சுவார்கள். சாட்சிகள் வாக்குமூலம் அளிக்கும் போது அதிகாரிகள் அடிக்கடி அறையில் இருப்பதனால் இந்த நிலைமை ஏற்படுவது உண்மை தான்" என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கல்வி மற்றும் சமய அறிவில் தேர்ச்சி பெற்றவரான ஓர் ஆயரே இவ்வாறு விசாரிக்கப்படுகிறார் என்றால் ஆணைக்குழு முன் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்த சாதாரண மக்களின் நிலை என்னவாய் இருக்கும்? ஆயரைத் தொடர்ந்து ஏனைய சாட்சிகளும் இவ்வாறு படிப்படியாக விசாரிக்கப்படுவார்களா என்பதே இப்போது எழும் கேள்வி.

நிச்சயமாக ஜனநாயகம் பேசப்படும் ஒரு நாட்டுக்கு உகந்த காரியமாக இது தென்படவில்லை. ஆணைக்குழுக்களின் முன் சாட்சியமளிப்பவர்கள் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தும் நடைமுறை முற்றாக கைவிடப்படுவது அவசியம்.

# பொருள்களின் விலை அதிகரிப்பால் பண வீக்கமும் சடுதியாக அதிகரிப்பு

**2011 ஆம் ஆண்டு டிசெம்பரில் இலங்கையின் ஆண்டு மையப் பணவீக்கம் 4.7 சதவீதமாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏனைய பொருள்களின் விலைகளும் அதிகரித்தன.**

யாழ்ப்பாணம், மே 15

இலங்கையின் பணவீக்கம் கடந்த ஆண்டு 4.7 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும், பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 6.1 சதவீதம் வரையில் அதிகரித்துள்ளது.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள பொருளியலாளர் யோ.ஜயகாந் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய கிளையின் ஏற்பாட்டில், முதன் முறையாக தலைநகருக்கு வெளியே 2011 ஆம் ஆண்டு மத்திய வங்கி ஆண்டறிக்கை தொடர்பிலான பகிரங்கக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில் பிரதம கருத்தாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2011 ஆம் ஆண்டு டிசெம்பரில் இலங்கையின் ஆண்டு மையப் பணவீக்கம் 4.7 சதவீதமாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏனைய பொருள்களின் விலைகளும் அதிகரித்தன.

அத்துடன் மத்திய வங்கியின் கையிருப்பில் வெளிநாட்டு நாணயங்கள் குறைவடைந்தமையைத் தொடர்ந்து, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாகவே பணவீக்கம் இந்த ஆண்டில் அதிகரித்துள்ளது.- என்றார். (ம-5)

## புத்தாண்டுச் சேமிப்பு போட்டியில் கைதடி சமுர்த்தி வங்கி முதலிடம்

யாழ்ப்பாணம், மே 15

சமுர்த்தி அதிகார சபையால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் புத்தாண்டுச் சேமிப்பு போட்டியில், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கைதடி சமுர்த்தி வங்கி முதலிடத்தைப் பெற்றுள்ளதாக உதவி ஆணையாளர் எஸ்.சிவஸ்ரீ தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 31 சமுர்த்தி வங்கிகளிலும், புத்தாண்டை முன்னிட்டு சேமிப்பு போட்டி நடத்தப்படும். 2012 ஆம் ஆண்டு புத்தாண்டு சேமிப்பு போட்டியில் அங்கீகரிக்கப்பட்ட வைப்பாக 56.55 மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.

இதில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கைதடி சமுர்த்தி வங்கி 4.24 மில்லியன் ரூபா நிதியைச் சேமித்து முதலிடம் பெற்றுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலுள்ள மல்லாகம் சமுர்த்தி வங்கி 3.48 மில்லியன் ரூபா நிதியைச் சேமித்து இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. மூன்றாம் இடத்தை சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சாவகச்சேரி சமுர்த்தி வங்கி 2.82 மில்லியன் ரூபா நிதியைச் சேமித்துப் பெற்றுக் கொண்டது.

இந்த மாத இறுதியில் தேசிய மட்ட புத்தாண்டு சேமிப்பு போட்டியில் இந்த மூன்று வங்கிகளும் பங்கெடுக்கவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

### தொழில் திணைக்களத்தின் சமூகக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 15

வடமாகாண தொழில் திணைக்களம் சமூக கலந்துரையாடல் ஆலோசனை சபை ஒன்றை அமைக்கவுள்ளது.

2012ஆம், 2013 ஆம் ஆண்டுக்குரிய சபையை அமைப்பதற்குரிய கலந்துரையாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

கூட்டுறவு அமைப்புக்கள், வணிகர் கழகங்கள் மற்றும் பிரதேச சபை போன்றவற்றின் பிரதிநிதிகள் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தொழில் நீதிமன்றை அமைப்பது போன்ற விடயங்கள் இதில் கலந்துரையாடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் யாழ். ஆஸ்பத்திரிக்கு நியமனம்

யாழ்ப்பாணம், மே.15

வடமாகாண சிறுநீரக நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சை நிபுணர் சுகாதார அமைச்சால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் வடமாகாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணருக்குரிய விடுதி, சத்திர சிகிச்சைக் கூடம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு நியமிக்கப்பட்ட குழந்தைகள் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியசாலையில் போதிய விடுதி வசதி இல்லாததால் மூன்று மாதங்களின் பின்னர் தென்னிலங்கையில் உள்ள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனவே இந்த விடயத்தில் அக்கறை எடுத்து வைத்தியசாலை நிர்வாகம் செயற்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

### தொடரும் மின்வெட்டால் சிரமம்

தென்மராட்சி, மே 15

தென்மராட்சி பிரதேசத்தில் வீதி அகலிப்பு பணிகளுக்காக மின் கம்பங்கள் மாற்றி நடும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ள போதிலும் மின் வெட்டு தொடர்ந்து நடத்தப்படுவது குறித்து பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

மின்வெட்டு அமுல்படுத்தப்படும் நாளிலும் இரவு வேளைகளில் மின்தடை ஏற்படுவது குறித்தும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-9)

### வடக்கில் ஆளணி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 15

வட மாகாணத்தில் ஆளணி அதிகரிப்பு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

22 வருடங்களின் பின் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி இதற்கான நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளது.

வட மாகாணத்தின் கீழ் உள்ள சகல திணைக்களங்களின் தலைவர்கள் தமது நிறுவனத்துக்குத் தேவையான ஆளணிகளை நியாயப்படுத்தி வழங்கி இருந்தனர்.

கொழும்பில் இருந்து வந்த தேசிய அணி இரு குழுக்களாக திணைக்கள தலைவர்களை நேர் முகம் கொடுத்து விபரங்களைத் திரட்டினர். பயன்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-50)

## பௌத்த செயற்பாடுகளை இணைக்க நடவடிக்கை

### சுற்றறிக்கை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் வெளியீடு

வலி வடக்கு, மே 15

இலங்கையில் பௌத்த மதத்தையும் அதனுடன் இணைந்த நடவடிக்கைகளையும் இணைப்பதற்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் கிராம அலுவலர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமான சுற்றறிக்கை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மதத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்பாடர்களாக செயற்படுவதுடன் மக்களுக்கும் மதத்துக்கும் இடையேயான தொடர்புகளையும் நல்ல முறையில் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாடுகளை கிராம அலுவலர்கள் தமது கடமை பாதிக்காத வகையிலும் பொது மக்களுடைய அலுவலக செயற்பாடுகளுக்குப் பாதிப்பு எற்படாத வகையிலும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர் தொடர்பான றிசாத்தின் கருத்து தமிழ் மக்களைப் புண்படுத்தி விட்டது

## வினோ எம்.பி. கண்டனம்



**தம்புள்ளயில் பிக்குகள் பள்ளிவாசலைத் தாக்கினர்கள். ஆனால் மன்னாரில் ஆயர் எந்த பள்ளிவாசலை இடித்துள்ளார்? என்பதை நான் அமைச்சரிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.**

மன்னார், மே 15

மன்னார் ஆயர் தொடர்பாக அமைச்சர் றிசாத் பதியுதீன் நாடாளுமன்றத்தில் கூறிய கருத்துக்கள் ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் மனங்களையும் புண்படுத்தியுள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினரான வினோநோகராதலிங்கம்.

அமைச்சர் றிசாத் பதியுதீன் மன்னார் ஆயர் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேசியமை பற்றி ஊடகவியலாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத்தெரிவிக்கையில்:-

தம்புள்ளயில் உள்ள பள்ளிவாசல் தாக்குதலில் புத்த பிக்குமார் மிகவும் மோசமாக நடந்து கொண்டது போன்று மன்னாரில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப்பு நடந்து கொள்வதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

தம்புள்ளயில் பிக்குகள் பள்ளிவாசலைத் தாக்கினார்கள். ஆனால் மன்னாரில் ஆயர் எந்த பள்ளிவாசலை இடித்துள்ளார்? என்பதை நான் அமைச்சரிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மன்னாரில் உள்ள முஸ்ஸிம்களின் காணிகளை ஆயர் எங்கே பறித்துள்ளார் என்பதையும் அமைச்சரிடம் நான் பகிரங்கமாகக் கேட்க விரும்புகின்றேன்.

அமைச்சர் றிசாத் பதியுதீனின் கருத்து மன்னார் மாவட்டக் கத்தோலிக்க மக்களை மட்டுமல்லாது ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் மனங்களையும் மிகவும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது.

இது ஒட்டு மொத்த தமிழ் மக்களின் உணர்வுகளையும் புண்படுத்துகின்ற ஒரு பேச்சாகக் காணப்படுகின்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன,மத ரீதியில் எதனையும் பார்ப்பதில்லை.

சகல கத்தோலிக்கர்களும் கடவுளுக்குச் சமனாக அவரை மதிக்கின்றனர்.

அண்மையில் மன்னாரில் இடம்பெற்ற சர்வமத நிகழ்வு ஒன்றின் போது கலந்து கொண்ட மன்னார் ஆயர் இந்த யுத்தத்தினால் தமிழ் மக்கள் மட்டுமன்றி முஸ்ஸிம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். இந்த நாட்டில் அனைத்து மக்களும் அரசியல் தீர்வுடன் வாழ வேண்டும்.

இடம்பெயர்ந்த முஸ்ஸிம் மக்கள் மீண்டும் உரிய முறையில் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர வேண்டும் என்ற கோரிக்கைகளைப் பகிரங்கமாக முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில் அமைச்சர் மன்னார் ஆயர் முஸ்ஸிம் மக்களுக்கு எதிராக மதவாதம் பரப்பி வருகிறார் என்றும் தம்புள்ள புத்த பிக்குகள் போன்று செயற்பட்டு வருகிறார் என்றும் கூறியுள்ளார்.

ஓர் ஆன்மிகத்தலைவர் மீது இப்படிப்பட்ட கருத்துக்களை நாடாளுமன்றத்தில் விவாதித்து களங்கம் ஏற்படுத்தியமைக்கு ஒட்டு மொத்த தமிழ் மக்கள் சார்பாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகவும் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் மேலும் தெரிவித்தார். (க-12)

## மின்சாரத் தகன மயானம் வவுனியாவில் 28 இல் திறப்பு

வவுனியா,மே 15

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட மின்சாரத்தில் உடல்களைத் தகனம் செய்யும் மயானம் எதிர்வரும் 28 ஆம் திகதி மக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுமார் 20 மில்லியன் ரூபா செலவில் இந்த மயானம் அமைக்கப்பட்டு நீண்ட நாள்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தது. இதனால் வௌவால்களின் இருப்பிடமாகவும், கட்டாக்காலிக் கால்நடைகளின் வாழ்விடமாகவும் இது காணப்பட்டது. இதனையடுத்து அந்தப் பகுதி மக்கள் நகரசபை உறுப்பினர்களிடமும், நகரசபைத் தலைவரிடமும் அந்த மயானத்தைத் திறந்து மக்கள் பயன்பாட்டுக்கு என அனுமதிக்குமாறு கேட்டிருந்தனர்.

இதனையடுத்து கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வவுனியா நகரசபையின் விசேட கூட்டத்தில் மின்சாரத்தில் தகனம் செய்யும் மயானத்தை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இதனையடுத்து எதிர்வரும் 28 ஆம் திகதி இந்த மயானத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பதென முடிவெடுக்கப்பட்டது. அதற்கான ஆரம்பகட்ட வேலைகள் இடம்பெற்று வருவதாக நகரசபைத் தலைவர் ஐ. கனகையா தெரிவித்தார். (க-400)

# வவுனியா நகர சபையும் வரியிறுப்பாளரும் இணைந்து செயற்படுவதற்கு முடிவு

**வவுனியா நகரசபை உறுப்பினர்களுக்கும், வரியிறுப்பாளர் சங்க உறுப்பினர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.**

வவுனியா,மே 15

வவுனியா நகர மக்களின் நன்மை கருதி வவுனியா நகரசபை நிர்வாகமும், வவுனியா நகரவரியிறுப்பாளர் சங்கமும் இணைந்து செயற்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் இன்றைய செயற்பாடு மற்றும் மக்களின் இன்றைய தேவைகள் தொடர்பாக வவுனியா நகர சபை உறுப்பினர்களுக்கும், வரியிறுப்பாளர் சங்க உறுப்பினர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப் பொன்று கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

அந்தக் கலந்துரையாடலிலே நகரசபைக்குட்பட்ட வர்த்தகர்கள்,பொதுமக்கள் ஆகியோரின் நன்மை கருதி இருபகுதியினரும் இணைந்து செயற்படுவதென முடிவெடுக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு மாதமும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடி நகர அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடுவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

நகர சபை நிர்வாகம் சார்பாக நகரசபைத் தலைவர் ஐ.கனகையா, உபதலைவர் எம்.ரதன் மற்றும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வரியிறுப்பாளர் சங்கம் சார்பாக தலைவர் எஸ்.சந்திரகுமார், செயலர் எம்.றோய் ஜெயக்குமார் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும்கலந்துகொண்டனர்.

கலைமகள் விளையாட்டுக்கழகக் காணி அறுக்கை பண்ணப்படாமை, குருமன் காடு மாதிரி உறைவிட வீதி புனரமைக்கப்படாமை, நவீன சந்தை மல சல கூடங்கள் புனரமைக்கப்படாமை, முதலாம், இரண்டாம் குறுக்குத் தெருக்களிலுள்ள தனியார் பஸ் தரிப்பிடங்களால் மக்கள் படும் அவலநிலையைப் போக்குதல், பஸ் நிலையம், நவீன சந்தைக் கடைகளின் உரிமையாளர்களின் பெயர் மாற்றம் செய்யப்படாமை-

யாழ்.வீதியில் நிறுவப்படும் தனியார் பஸ் தரிப்பிடம் சம்பந்தமான விளக்கப்பாடுகள், பண்டாரிக்குளம், பட்டாணிச்சூர், கந்தசாமி கோவில் வீதி, முதலாம் குறுக்குத் தெரு ஆகிய வீதிகள் புனரமைக்கப்படாமை, பூந்தோட்டம் மின்சார மயானத்தின் திறப்பு, வீதியோர விளக்குள் பொருத்தப்படாமை போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (க-400)

## முருங்கனில் இராணுவ முகாம்கள் அச்சத்தில் அந்தப்பகுதி மக்கள்

மன்னார், மே 15

மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முருங்கன் கிராமத்தில் இரண்டு இடங்களில் இராணுவத்தினர் படை முகாம்களை அமைத்து வருகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

முருங்கன் பஸார் பகுதியில் 14 ஆம் கட்டை வாய்க்காலுக்கு அருகில் தனியாருக்குச் சொந்தமான நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதே சமயம் முருங்கன் செம்மண்தீவு குளக்காணியில் சுமார் நான்கு ஏக்கர் பிடிக்கப்பட்டு அங்கும் இராணுவத்தினர் பெரிய படை முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

இராணுவத்தினர் குளக்காணியைப் பிடித்துள்ளமையால் விவசாயிகள் நீரைப் பெற்றுக்கொள்வதில் எதிர்வரும் காலங்களில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அமைதி திரும்பிய நிலையில் இராணுவத்தினர் பெரிய முகாம்களை அமைத்து வருகின்றமையால் அப்பகுதி மக்கள் குறிப்பாகப் பெண்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். தற்போது மாலை வேளைகளிலும் இரவு நேரங்களிலும் பெண்கள் தனியாக நடமாட முடியாத நிலையில் அச்சத்தில் உள்ளனர். எனவே உரிய அதிகாரிகள் மற்றும் புத்திஜீவிகள் தலையிட்டு குறித்த படை முகாம்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (க-12)

## பெண்கள் மீது தொல்லை

கிளிநொச்சி பஸ்தரிப்பு நிலையத்தில் பெண்கள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு மதுபோதையிலும், காரணம் எதுவுமின்றியும் கூடி நிற்கும் சிலர் அங்கு பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பெண்கள் மீது தவறான செயல்களில் ஈடுபடுவதோடு கெட்ட வார்த்தைகளையும் பிரயோகிக்கின்றனர்.

இதனால் பாடசாலை மாணவிகள் உட்படப் பெண்கள் அச்சத்துடன் இங்கு நிற்பதைக் காண முடிகின்றது. பொலிஸார் இத்தகைய சமூக விரோதிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமெனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)



துணுக்காய் அம்பலப் பெருமாள் குளத்தின் கீழ் வாய்க்கால்களைப் புனரமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. (18)

# தனியார் கல்வி நிலையங்களுக்கு ஞாயிறு தினங்களில் விடுமுறை

## வவுனியா நீதிவானின் அறிவுறுத்தலுக்கு இணங்க

வவுனியா, மே 15

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க தனியார் கல்வி நிலையங்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை விடுவதற்கு வவுனியா மாவட்டத் தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜாவுக்கும் தனியார் கல்விநிலைய ஒன்றிய நிர்வாகிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மாணவர்களின் உளநல மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி அவர்களுக்கான வகுப்புக்களை வழமை போன்று நடத்துவது எனவும் ஏனைய வகுப்புக்களை நிறுத்துவது எனவும் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை மாணவர்களின் நன்மைகருதி ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்குமாறு வவுனியா பிரதேச செயலர் அறிவுறுத்தியிருந்த போதும், தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் நலன் கருதி வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டு வகுப்புக்கள் இடம் பெற்று வந்தன.

இந்தச் சூழ்நிலையிலேயே தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றிய நிர்வாகிகளுக்கும் நீதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இடம் பெற்றது.

இதனை அடுத்தே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க-400)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகளுக்கான நிதியை முழுமையாக வழங்குக

### நெல்சிப் அபிவிருத்தித் திட்டம் இதன் மூலமே முழுமைபெறும்

யாழ்ப்பாணம், மே 15

நெல்சிப் அபிவிருத்தி திட்டம் வடக்கில் முழுமை பெற வேண்டுமாயின் உலக வங்கி ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்குமான 200 மில்லியன் ரூபாவை முழுமையாக வழங்க வேண்டும்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை கொழும்பு தேசிய நெல்சிப் அபிவிருத்தி திட்டத்தின் சிரேஷ்ட இணைப்பாளர் வியானி குணதிலகவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைக்கும் 30 முதல் 100 மில்லியன் வரை மட்டுமே 3 ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமே அபிவிருத்தி இடம்பெறுகின்றது.

**200 மில்லியன் ரூபா வழங்கும் திட்டத்தின் கீழ் வடக்கில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளையும் பல்வேறு கோணங்களில் கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் மக்களின் முன்னோடித் தெரிவுகளாக இனம் கண்டு ஒன்று முதல் 100 வரையான அபிவிருத்தி திட்டங்கள் இனங்காணப்பட்டன.**

நெல்சிப் தேசிய இணைப்பாளர் என்ற வகையில் வடக்கிற்கு மிகுதி 100 மில்லியன் ரூபாவை வழங்க முன்வர வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்டவை. இதில் வடக்கில் 34 உள்ளூராட்சி சபைகளை பலப்படுத்த நெல்சிப் ஊடாக 200 மில்லியன் ரூபா வழங்கும் திட்டத்தின் கீழ் வடக்கில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் பல்வேறு கோணங்களில் கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் மக்களின் முன்னோடித் தெரிவுகளாக இனம் கண்டு ஒன்று முதல் 100 வரையான அபிவிருத்தி திட்டங்கள் இனங்காணப்பட்டன.

தற்போது இதில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் ஆறு வரையான திட்டங்களுக்கு மட்டும் 100 மில்லியன் செலவாகி விட்டது.

மிகுதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகுதியான 100 மில்லியன் ரூபாவை முழுமையாகப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும்.

இல்லாவிடில் இந்த 100 மில்லியன் ரூபா வடக்குக்கு ஒதுக்கப்பட்டு எங்கே சென்று விட்டது என்று கேள்வி எழுப்பப்படும் நிலைமை ஏற்படும்.

எனவே மிகுதி 100 மில்லியன் ரூபாவையும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-50)

## காற்று திசை மாறியதால் கடல் உணவு விலையுயர்வு

யாழ்ப்பாணம், மே 15

யாழ். குடாநாட்டில் கடல் உணவுகளுக்கு பெரும்கிராக்கி ஏற்பட்டுள்ளதோடு அதன் விலையும் சடுதியாக அதிகரித்தே காணப்படுகின்றன.

சந்தைகளில் கடலுணவுகள் போதியளவு வந்து சேராமையால் அவை உடனடியாகவே விற்று தீர்க்கப்படுகின்றன.

கடல் உணவுகளின் திடீல் விலையேற்றம் தொடர்பாக மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது;

''பருவபெயர்ச்சிக் காற்று ஆரம்பித்ததால் கடலுணவுகள் பிடிக்கப்படுவது குறைந்து கொண்டே போகும்.

மீனவர்கள் வலைகளில் மிகக் குறைவான கடலுணவுகளே பிடிபடுகின்றன. எரிபொருள் விலை அதிகரிப்புக்கு ஏற்ப கடலுணவுகள் மீனவர்களுக்கு கிடைக்காததால் அவர்கள் இந்தத் தொழிலில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.'' என்று தெரிவித்தார்.

இதேசமயம் நேற்றைய சந்தை நிலவரப்படி கடலுணவுகளின் விலை விவரம் வருமாறு:

மீன் கிலோ 450 ரூபா, கணவாய் கிலோ 600 ரூபா, இறால் கிலோ 600 ரூபா, நண்டு கிலோ 500 ரூபா, திருக்கை கிலோ 300 ரூபா. (ம-17)

## கொலைச் சந்தேகநபருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

வடமராட்சி, மே 15

வதிரிச் சந்திப் படுகொலை தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரை தொடர்ந்தும் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


கடந்த மாதம் 24 ஆம் திகதி வதிரிச் சந்தி முருகன் கோயிலுக்கு அருகில் வைத்து தொண்டமானாறைச் சேர்ந்த சிவஞானம் சிவரூபன் என்ற இளைஞர் வெட்டியும், குத்தியும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கொல்லப்பட்டவரின் மைத்துனர் மீண்டும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேக நபரைத் தொடர்ந்தும் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ம-8)

## வாய்க்காலின் மேலாகக் கட்டடம் அமைவதால் பாதிப்பு எதுவுமில்லை

### நல்லூர் பிரதேச சபையின் தலைவர் வசந்தகுமார் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 15

கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள வாய்க்காலின் மேல் பொற்பதி சனசமூக நிலையம் அமைக்கப்படுவதால் வாய்க்கால் வழியாக மழை நீர் தேங்கி நிற்க வாய்ப்புக்கள் இல்லை. அதற்கு உகந்த வகையிலேயே கட்டட வேலைகள் இடம்பெறும். பொது மக்கள் இது குறித்து தவறான முடிவுகளை எடுக்க வேண்டாம் என்று நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையத்துக்கான கட்டடம் விநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள வாய்க்காலை மூடி அமைக்கப்படுகிறது.

இதனால் மழைகாலத்தில் வெள்ளம் ஓடமுடியாது இப்பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று இப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமாரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வாய்க்காலின் மேலாக கட்டடம் அமைப்பதால் ஏற்படக் கூடிய இடையூறுகள் குறித்தும் சுகாதார பாதிப்புக்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

தொழில்நுட்ப உத்தியோகத்தர், கோண்டாவில் சுகாதார சேவைகள் அதிகாரி ஆகியோரது பரிசீலனையின் அடிப்படையில் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை பிரதேச சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது ஆராயப்பட்ட பின்னரே வாய்க்காலின் மேல் பகுதியில் சனசமூக நிலையக்கட்டடத்தை அமைக்க சபை உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. - என்று தெரிவித்தார். (ம-7)

## மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியோர் கைது

வலி வடக்கு, மே 15

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞர்கள் மூவர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மல்லாகம் சந்தியில் வாகனங்களைச் சோதனையிடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வேகமாக வந்தவர்களை பொலிஸார் மறித்துச் சோதனை மேற்கொண்டனர்.

இவர்கள் மது போதையில் காணப்பட்டதுடன் இந்த ஆண்டுக்கான வாகன அனுமதிப் பத்திரம் இன்றியும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியுள்ளமை தெரிய வந்தது.

(ம-86)

## ரூ.50 ஆயிரம் அபராதம்

சட்ட விரோதமாக அரச சாராயத்தை வீட்டில் வைத்திருந்த கரவெட்டி தேவரையாளிப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடியில் பொலிஸாரால் பிடிக்கப்பட்ட இந்த நபர் மீது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து சட்ட விரோத சாராய விற்பனையை எச்சரித்த நீதிபதி 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ம-8)

## வீதி ஒழுங்குக்கு முரணாக வாகனம் ஓடியதால் அபராதம்

### ரூபா 6 ஆயிரம் விதிப்பு

வடமராட்சி, மே 14

வீதி ஒழுங்குக்கு முரணாக வாகனத்தைச் செலுத்திச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் சாரதி ஒருவருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீதி ஒன்றில் லொறி ஒன்றை முந்திக் கொண்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நெல்லியடிப் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் 6 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். (ம-8)

## நகைகள் திருட்டு

கொழும்புத்துறை,மே 15

கொழும்புத்துறை விதானையார் ஒழுங்கையில் உள்ள வீடொன்றிலிருந்து பட்டப் பகலில் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

வீட்டின் கூரை ஓட்டைப் பிரித்து உள்ளிருந்த சீற்றை உடைத்து உட்சென்ற திருடர்கள் அங்கிருந்த சுமார் 6 லட்சம் பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவ தினம் காலை வீட்டிலுள்ளவர்கள் தாம் நடத்தி வரும் சிறிய பலசரக்குக் கடைக்குச் சென்ற வேளை வீட்டில் யாரும் இல்லாததை அவதானித்த திருடர்கள் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ம-[illegible])

## இந்து மகா சபையின் உருவாக்கத்துக்கு அனைத்து இந்து மக்களுக்கும் அழைப்பு

### சிவத்தமிழ் மானிட விடியற் கழகம் நடத்திய மாநாட்டில் தெரிவிப்பு

வலி வடக்கு, மே 15

இந்து மகா சபையின் உருவாக்கத்துக்கு அனைத்து இந்து மக்களும் ஒன்றிணைய வேண்டும்.

சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தின் ஏற்பாட்டில் மாநாடு ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அமைப்பின் ஆலோசகர் மருத்துவர் ஆர்.சிவசங்கர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கீரிமலை சிவபூமி மடத்தில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் இந்து ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள், இந்து இளைஞர் கழகங்கள் மற்றும் மங்கையர் அமைப்புக்கள் கலந்து கொண்டன.

மலையகம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



இந்த மாநாட்டில் இந்து சமயத்தின் தற்போதைய நிலை சம்பந்தமாக ஆராயப்பட்டது. அத்துடன் மாநாட்டின் நிறைவில் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட இந்து மக்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களின் இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இணைத்து இந்து மகா சபையை உருவாக்க வேண்டும்.

இந்து மக்களுக்கு ஏற்படும் சமய சமூக கலாசார தேவைப்பாடுகளுக்கு ஏற்ப அந்தந்தப் பிரதேச உப அமைப்புக்களின் பிரதிநிதிகள் மூலம் பிரச்சினைகளை இனம் கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்து மகா சபையை உருவாக்குதல் சம்பந்தமாக தற்காலிக அமைப்புக் குழு ஒன்றும் மாவட்டங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், வைத்திய கலாநிதி நந்தகுமார் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ம-86)

## யாழ். ஊர்காவற்றுறை பஸ் சேவை சீரானது

யாழ்ப்பாணம், மே 15

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பாதையில் சேவையில் ஈடுபட்டுவரும் 777 இலக்க பஸ்ஸின் சேவைகள் அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6:40, 6:50, 07:30, 08:30, 9 , 10 , 11 மணி, மதியம் 12:15, பிற்பகல் 1:45, 2:30, மாலை 3:30, 4:15, 4:45, 5:30, 6:30, இரவு 8 மணி ஆகிய நேரங்களில் சேவை இடம்பெறுகின்றது.

ஊர்காவற்றுறையிலிருந்து காலை 05:45, 6:15, 6:55, 7:40, 8:20, 9, 10, 10:30, 3:30, 4:15, 5, 5:30, 6 மணி அகிய நேரங்களில் சேவை இடம்பெறுகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையைச் சந்தேகிக்காதீர்!

## ஏர்செல் - மேக்சிஸ் விவகாரத்துக்கு சிதம்பரம் விளக்கம்

டில்லி,மே15

ஸ்பெக்ட்ரம் அலை வரிசை விற்கப்பட்ட நேரத்தில் ஏர்செல் - மேக்ஸிஸ் நிறுவனம் கைமாறியபோது நிதித் துறை அமைச்சகம் பணவர்த்தக அனுமதியில் எவ்வித காலதாமதமும் செய்யவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் நேற்று நாடாளுமன்றத்தில் அளித்த விளக்கத்தின்போது தெரிவித்தார். மேலும் எனது நேர்மையை சந்தேகிப்பதை விட எனது நெஞ்சில் குத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.



ராஜ்யசபா சபை நேற்று ஆரம்பமாகியதும் தொடர்ந்து ஏர்செல் - மேக்ஸிஸ் நிறுவனம் கைமாறிய விவகாரத்தில் அமைச்சர் ப. சிதம்பரத்தின் மகன் கார்த்திக் தொடர்பு இருந் தது. அந்தநேரத்தில் நிதித்துறை அமைச்சராக இருந்த சிதம்பரம் அன்னிய செலாவணி பணப் பரிமாற்றத்தில் அனுமதி கொடுக்க காலம் தாமதிக்கப்பட்டது. இதில் அவரது மகன் ஆதாயம் அடைந்தார். இதுகுறித்து அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும், சந்தேகத்தை தீர்த்து வைக்க வேண்டும் என்று பா.ஜ., தரப்பில் பேசிய அருண்ஜெட்லி வலியுறுத்தினார். அ.தி.மு.க,.தரப்பிலும் குரல் எழுப்பப்பட்டது.

இதற்குப் பதில் அளித்த சிதம்பரம்; இந்த விவகாரத்தில் எந்தக் கட்டத்திலும் தாமதமோ, எவ்வித சட்ட மீறலும் நடக்கவில்லை. மொத்தம் 49 நாள்கள் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எனக்கோ எனது குடும்பத்தினருக்கோ எந்தவித தொடர்பும் கிடையாது. யாரும் பயன் பெறவில்லை. எந்தவொரு தொலைத் தொடர்பு நிறுவனத்திலும், எங்கள் குடும்பத்தினர் பங்கு தாரராக இல்லை.

நேர்மையைச் சந்தேகிக்க வேண்டாம், இதனை விட எனது நெஞ்சில் குத்தலாம் என்றார்.

இவரது பேச்சில் திருப்தி அடையாத எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்து குரல் எழுப்பினர். அருண் ஜெட்லி நேருக்கு நேர் கேள்விகளை எழுப்ப சிதம்பரம் திணறினார். தொடர்ந்து அமளி நிலவியதால் சபை ஒரு மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டது. (வ)

# வீரப்பனைப் புதைத்த இடத்தை தோண்ட முயற்சி



சந்தனக் கடத்தல் வீரப்பன் புதைக்கப்பட்ட இடத்தை சில மர்ம நபர்கள் தோண்ட முயற்சித்துள்ளதால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் 18ஆம் திகதி தர்மபுரி அருகே தமிழக அதிரடிப்படையினரால் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பின்னர் அவரது உடல் மேட்டூர் அருகே உள்ள மூலக்காடு என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

வெளியூர்களில் இருந்து வருகின்ற அதிகமான பொது மக்கள் வீரப்பன் சமாதியை வேடிக்கை பார்த்துவிட்டும் சிலர், சமாதியில் இருந்து மண்ணை எடுத்துச் செல்வதையும் வழக்கமாக வைத்துள்ளனர்.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் வீரப்பனின் நினைவு நாளில் அவரது மனைவி முத்துலட்சுமி, மகள்கள் பிரபாவதி, வித்யாராணி மற்றும் உறவினர்கள் சமாதிக்கு வந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் இரு தினங்களுக்கு முன்பு வீரப்பனின் சமாதியின் மீது சுமார் ஒன்றரை அடி உயரத்தில் குவிக்கப்பட்டிருந்த மண் முழுவதும் அகற்றப்பட்டு தோண்டப்பட்டிருந்தது.

இதுகுறித்து தகவல் பரவியதும் வீரப்பனின் உறவினர்களும், பொதுமக்களும் அங்கு திரண்டதால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (வ)

## தொடரும் ஏர் இந்தியா வேலை நிறுத்தம்

ஏர் இந்தியா விமானிகளின் தொடர் போராட்டத்தைத் தொடர்ந்து நேற்று 13 விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

டில்லி, மும்பை மற்றும் நியூயோர்க்கிலிருந்து இயக்கப்படும் விமானங்கள் ரத்தானதால் 9 சர்வதேச விமானங்களும் 4 உள்ளூர் விமான சேவைகளும் ரத்து செய்யப்படுவதாக ஏர் இந்தியா அறிவித்துள்ளது.

இதற்கிடையில் ஏர் இந்தியா பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர மூத்த விமானிகள் சங்கம் ஏர் இந்தியா நிர்வாகத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.



இந்திய நாடாளுமன்றத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் பிரதமர் மன்மோகன் சிங், சபாநாயகர் மீரா குமார், மத்திய அமைச்சர் பவன் குமார் பன்சால் மற்றும் ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் ஆகியோர் கலந்து கொண்டபோது

## எதிர்வரும் 2 ஆண்டுகளில் 24 செயற்கைக் கோள்கள்

### இஸ்ரோ அறிவிப்பு

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் 24 செயற்கைக் கோள்கள் இயக்கப்படும் என்று இஸ்ரோ விஞ்ஞானக் குழு தலைவர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை அனுப்பிய செயற்கைக்கோள் வெற்றிகரமாக இயங்குவதை அடுத்து செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய விண்வெளி ஆய்வுக்குழு நெல்லை மாவட்டம் பனிக்குடி மகேந்திரகிரி மலையில் அமைந்துள்ளது. கடந்த சனிக்கிழமை அனுப்பிய செயற்கைக்கோள் வெற்றிகரமாக இயங்கிவருகிறது.

இன்னும் ஓரிரு மாதங்களில் இதன் செயற்பாடுகள் ஆரம்பமாகிவிடும். இது தகவல் தொழில்நுட்பத்துக் காக மட்டுமே பயன்படுத்தப்படும்-என்றார் அவர்.

## தேயிலைச் செய்கை நீலகிரியில் வீழ்ச்சி



தமிழ் நாட்டின் நீலகிரி மாவட்டத்தில், தேயிலைச் செய்கை செய்யும் நிலப் பரப்பளவு குறைந்து வருவதாக இந்திய அரசின் தேயிலைத் திணைக்கள தென் மண்டல செயல் இயக்குநர் ஆர். அம்பலவாணன் தெரிவித்தார்.

தேயிலைத் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வில், கடந்த 1998ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2011ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளில், தேயிலை பயிரிடும் பரப்பளவு 10 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

தேயிலைச் செய்கையைக் கைவிட்டு சிலர் மலர் செய்கைக்கு மாறியுள்ளனர். அதே நேரத்தில் இன்னும் பல பகுதிகள் வீடு கட்டுதல் உட்பட வர்த்தக நோக்கத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கான பயன்பாட்டுக்கு மாற்றப்பட்டுள்ளன. குறிப்பாக, குன்னூர் பகுதியில் இந்த மாற்றம் அதிகளவில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு தேயிலை பயிரிடப்படும் நிலப் பரப்பளவு குறைவதால், நீலகிரி மாவட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்படுகிறது. இதற்குக் காரணம், தேயிலை பயிரிடுவதால் மண் அரிப்பு தடுக்கப்பட்டு, நிலச்சரிவு ஏற்படாமல் காக்கப்படுகின்றது. தற்போது அந்தச் சாதகமான நிலை மாறிவருகின்றது.

சோலைக்காடுகள் அழிக்கப்பட்டுத்தான் தேயிலை பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. அதனால் தேயிலைப்பயிர்ச் செய்கையால் நீலகிரியின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறும் கருத்தை ஏற்க முடியாது - என்றார் அவர். (வ)

### இராணுவத் தளபாடங்கள் குறித்த அறிக்கை

## ஊடகங்களில் கசியவிட்டவர் பெண் அதிகாரியாம்

நாட்டின் இராணுவத் தளபாடங்கள் இருப்பு தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங்குக்குத் தலைமைத் தளபதி வி.கே.சிங் எழுதிய கடிதம் ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியதன் பின்னணியில் அமைச்சரவைச் செயலக மூத்த பெண் அதிகாரி ஒருவர் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் மத்திய அரசு இதனை நிராகரித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங்குக்கு இராணுவத் தளபதி வி.கே.சிங் அண்மையில் எழுதிய கடிதம் ஒன்றில், இராணுவத்தில் பீரங்கிகளுக்குத் தேவையான வெடிமருந்துகளும், ஆயுதங்களும் பற்றாக்குறையாக இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த ரகசியக் கடிதம் ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. நாடாளுமன்றத்திலும் அமளியை ஏற்படுத்தியது.

இதைத் தொடர்ந்து அந்தக் கடிதம் வெளியானது எப்படி என்று விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

### ஊழலுக்கு எதிரான போராட்டத்துக்கு

# ராணுவத் தளபதியை அழைக்கிறார் ஹஸாரே



ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொள்ள வருமாறு இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங்குக்கு அன்னா ஹசாரே அழைப்பு விடுத்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம், சந்திரபூரில் அன்னா ஹசாரே செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழலுக்கு எதிரான போரில் சேரும்படி யாரையும் அழைக்க நான் விரும்புவதில்லை. ஆனால், எமக்குள்ளே உள்ள எதிரிகளை எதிர்த்துப் போரிடுவதால் ஒத்த கருத்துடையவர்கள் எங்கள் குழுவில் சேர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இராணுவத் தலைமைத் தளபதியாக உள்ள வி.கே.சிங் ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார். இதனால், அன்னா குழுவில் சேர அவருக்கு அழைப்பு விடுக்கிறேன். அதை ஏற்பதும், ஏற்காததும் அவரது விருப்பம் -என்றார் அவர்.

இதேவேளை வி.கே.சிங்குக்கு அன்னா ஹசாரேயின் அழைப்பை அன்னா குழுவின் முக்கிய உறுப்பினரான கிரண் பேடி வரவேற்றுள்ளார். அன்னா குழுவில் முன்னாள் இராணுவத்தினர் சேருவது ஊழலுக்கு எதிரான போராட்டத்துக்கு வலுசேர்க்கும் என்று டுவிட்டர் இணையதளத்தில் கிரண்பேடி கருத்துத் தெரிவித்துள்ளார்.

## நக்சல் தாக்குதலில் படையினர் 6 பேர் சாவு



சத்தீஸ்கர், மே.15

சத்தீஸ்கர் மாநிலம், தந்தேவாடா அருகே கிரந்தூர் என்ற பகுதியில் நக்சலைட்டுகள் நடத்திய திடீர் தாக்குதலில் 6 மத்திய பாதுகாப்புப் படையினர் உயிரிழந்தனர். நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் அதிகாரிகள் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தந்தேவாடா என்ற பகுதியில் இருந்து 30 கிலோமீற்றர் தூரத்தில் கிரந்தூர் அமைந்துள்ளது. மாவோயிஸ்ட்டுகளின் நடமாட்டம் அதிகம் உள்ள இந்தப்பகுதியில் தேசிய கனிம வளர்ச்சிக் கழகம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்தப் பகுதி நக்சல்களின் தாக்குதல் பட்டியலில் உள்ள பகுதி என்பதால் பாதுகாப்பு கடுமையாகவே இருக்கும். இந்த நிலையில், சுக்மா மாவட்ட ஆட்சியாளர் கடத்தல் விவகாரத்திற்குப் பின்னர் பாதுகாப்பு மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, நேற்றுமுன்தினம் 6 மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த நேரத்தில் கிரந்தூர் பகுதியில் குழாய் வீடு என்ற பகுதியைக் கடக்கும்போது, நக்சல்கள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் சாரதி உட்பட பணியில் ஈடுபட்டிருந்த 6 பாதுகாப்பு அதிகாரிகளும் உயிரிழந்தனர்.

தகவலறிந்து பொலிஸார் சம்பவ இடத்தை அடையும் முன் நக்சல்கள் தலைமறைவாகிவிட்டனர் என்று கூறப்பட்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்

## மணிலாவில் தீயால் அழிவு



பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் சேரிப்பகுதியொன்றில் பெரும் தீ பரவியதால் சுமார் 800 குடிசைகள் அழிந்துள்ளன. இதனால் இருவர் காணாமற் போனதுடன் சுமார் 10,000 பேர் வீடற்றவர்களாகியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை மாலை ஏற்பட்ட இந்தத்தீயை அணைப்பதற்கு தண்ணீர் பாய்ச்சினர். பின்னர் தீ மோசமாக பரவவே அதிலிருந்து தப்புவதற்கு தீயை அணைப்பதற்காக பாய்ச்சப்பட்ட சாம்பல் நிறைந்த தண்ணீருக்குள் பாய்ந்தனர்.

தீயணைப்புத் துறையினர் தீயை அணைப்பதற்கு போதிய தண்ணீரை பெற்றுக்கொள்ள அவகாசம் இருக்காததால் கரையோர காவல் படையினர் அழைக்கப்பட்டதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். குடியிருப்புகளை இழந்த மக்கள் அருகிலுள்ள விளையாட்டு அரங்கு ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திடீரென ஏற்பட்ட இந்தத் தீ விபத்து தொடர்பான விசாரணைகள் பல வழிகளிலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் இதுவரை இந்த தீ விபத்துக்கான காரணம் கண்டறிப்படவில்லை. யாரும் கைது செய்யப்படவில்லை என அந்த நாட்டுப் அரச ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# முடிவுக்கு வந்தது உண்ணாவிரதம்

காசா,மே.15

சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனக் கைதிகளின் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது.

இது குறித்து இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனர்களிடையே நேற்றுமுன்தினம் ஒப்பந்தம் ஏற்பட்டதை அடுத்து உண்ணாவிரதம் முடிவுக்கு வருவதாக ஹமாஸ் செய்தித் தொடர்பாளர் மற்றும் பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஹமாஸ் அரசின் செய்தித் தொடர்பாளர் டஹெர் அல்-நோநோ கூறுகையில், எகிப்திய நடுநிலையாளர்கள் இஸ்ரேல்-பாலஸ்தீனச் சிறைக் கைதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனக் கைதிகளுக்குச் சிறையில் அடிப்படை வசதிகள் இல்லாததைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் பதவியை தடை செய்ய முடியாது



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி தகுதி நீக்கம் செய்யப்படவில்லை. எனவே, அவர் பிரதமர் பதவிக்குரிய கடமையைத் தொடர்வதை, தடை செய்ய முடியாது என, உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரிக்கு எதிரான நடவடிக்கை எடுக்காத காரணத்தால், கிலானி மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாத பிரதமர் கிலானி, 'குற்றவாளியே' என, உயர் நீதிமன்றம் கடந்த மாதம் தீர்ப்பு வழங்கியது. எனினும், அவருக்கு சிறைத்தண்டனை ஏதும் விதிக்கப்படவில்லை.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், கிலானி குற்றவாளி என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததால், அவர் பிரதமர் பதவியில் நீடிக்க தடை விதிக்க வேண்டும் எனக் கூறி, வழக்கறிஞர் ஜி.எம்.சவுத்ரி என்பவர், இஸ்லாமாபாத் உயர்நீதி மன்றில் மனு செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஷவுகத் அஜிஸ் சித்திக், ''நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், கிலானி தகுதி நீக்கம் ஏதும் செய்யப்படவில்லை.

இந்த நிலையில், அவர் பிரதமர் பதவிக்குரிய கடமை ஆற்றுவதைத் தடுக்க முடியாது'' என தீர்ப்புக் கூறினார். இதையடுத்து, சவுத்ரி தனது மனுவை வாபஸ் பெற்றார்.

# மலேசியாவில் தொலைக்காட்சித் தொடர்களை நிறுத்த வேண்டும்

கோலாலம்பூர்,

'வன்முறை காட்சிகள் அடங்கிய தொலைக்காட்சித் தொடர்களை தடை செய்ய வேண்டும்' என, மலேசிய நுகர்வோர் அமைப்பு கோரியுள்ளது. தமிழகத்தில் அதிகளவான தமிழ் 'தொலைக்காட்சி அலைவரிசைகள் உள்ளன.

இவற்றில் சில அலைவரிசைகளில் பெரும்பாலும் 'தொலைக்காட்சித் தொடர்கள் தான் ஒளிபரப்பப்படுகின்றன. மலேசியாவில், 28 லட்சத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவளியினர் வசிக்கின்றனர். இவர்களும் இந்த தொலைக்காட்சித் தொடர்களைப் பார்க்கின்றனர். இதுகுறித்து மலேசியாவின் பனாங்குப் பகுதி நுகர்வோர் அமைப்பின் நிர்வாகி என்.வி.சுப்பாராவ் கூறுகையில், தமிழ் அலைவரிசைகளில் ஒளிபரப்பாகும் தொடர்களில், பெரும்பாலும் வன்முறை காட்சிகள் தான் இடம் பெறுகின்றன. இதைப் பார்க்கும் இளைஞர்கள் கிரிமினல்களாக மாறும் நிலை உள்ளது. அதுமட்டுமல்லாது பெண்களும் குடும்பத்தைக் கவனிக்காமல் சீதொடர்கள் பார்ப்பதில் பொழுதைக் கழிக்கின்றனர். எனவே, தொலைக்காட்சித் தொடர்களைத் தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும். வன்முறைக் காட்சிகள் அடங்கிய தொடர்களை அரசு தணிக்கை செய்ய வேண்டும், என்றார்.

# சீனா செல்கிறார் புடின்

ரஷ்ய ஜனாதிபதியாகப் பதவியேற்ற புடின், அமைச்சரவை உருவாக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். இதனால் அமெரிக்காவில் நடக்கும் ஜி 8 நாடுகள் மாநாட்டில் பங்கேற்கவில்லை. இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கும் கடிதம் அனுப்பி உள்ளார். ஆனால் சீனாவில் அடுத்த மாதம் நடக்கும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளார் புடின்.

கடந்த 2001ஆம் ஆண்டு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் சீனா, கசகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ் தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 6 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இந்த மாநாட்டில், சீன ஜனாதிபதி ஹூ ஜின்டோவின் சிறப்பு அழைப்பாளராகப் புடின் கலந்து கொள்வார் என்றும், இவருடையப் பயணத்தை வெற்றிகரமாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க துணை ஜனாதிபதி ஜி ஜின்பிங் கூறியுள்ளார் என்று சீனப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# கடத்தல்காரர்களிடையே மோதல்



மெக்சிகோவில் போதை மருந்து கடத்தல் கும்பல்களிடையே ஏற்பட்ட மோதலில் தேசிய நெடுஞ்சாலையில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட 49 பேரின் உடல்கள் மீட்டெடுக்கப்பட்டன. மெக்சிகோ நாட்டிற்கு பெரும் தலைவலியாக இருப்பது போதை மருந்து கடத்தல் கும்பல்கள்தான். இவர்களால் அரசுக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டு வருகிறது.

மெக்சிகோவின் வடக்கு மாகாணத்தின் அமெரிக்க எல்லைப்பகுதியில் மான்டெரரி நகரில் ரெய்னோசாத் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் மாலை 49 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. பொலிஸார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். இதில் 43 ஆண்கள், 6 பெண்கள் ஆவர். அவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டும், சிலரின் உடல்கள் கண்ட துண்டமாக வெட்டப்பட்டும் கிடந்தன.

சாலைகளில் உடல்கள் சிதறிக் கிடந்ததால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த மாதம் முதல் வாரத்தில் தான் கௌடாலஜாரா நகரில் 23 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன என்பதும், கடந்த சில நாள்களுக்கு முன்பு பாலம் ஒன்றில் 9 பேர் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# தலாய்லாமாவை கொல்லச் சதி

**உடையில் விஷம் தேய்த்து நான் அவர்கள் தலையைத் தொட்டு ஆசீர்வதிக்கும் போது அந்த விஷத்தை எனது உடலில் செலுத்த திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது**

திபெத்திய மதத் தலைவர் தலாய்லாமாவை விஷம் கொடுத்துக் கொலை செய்ய திபெத்திய பெண் ஒருவருக்கு சீனா பயிற்சி கொடுத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடு கடந்த திபெத்திய அரசின் தலைமையகமான தர்மசாலாவும் தலாய்லாமாவின் உயிருக்கு ஆபத்து இருப்பதை உறுதி செய்துள்ளன.


தலாய்லாமாவுக்குக் கொலை மிரட்டல்கள் வந்தது உண்மை என்று அவரது செயலாளர் சிம்மி சொய்க்யாப்பா கூறியுள்ளார். இது குறித்து பிரிட்டன் ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்த அவர், தலாய்லாமா ஆசீர்வாதம் கொடுக்கும் போது அவருக்கு விஷம் கொடுத்துக் கொலை செய்ய சீன அரசு திபெத்திய பெண்ணையே தயார் செய்திருக்கிறது என்று பகிரங்கமாகத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து இந்திய அரசின் அறிவுறுத்தலின் பேரில் இமயமலை அடிவாரத்தில் உள்ள தலாய்லாமாவின் தர்மசாலாவைச் சுற்றி கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள தலாய்லாமா, எங்களுக்குத் திபெத்திலிருந்து சில தகவல்கள் கிடைத்தன. திபெத்தியர்கள் சிலரை குறிப்பாகப் பெண்களைக் கொண்டு விஷம் கொடுத்து என்னைக் கொலை செய்வதற்காகப் பயிற்சிக்குத் தேர்வு செய்துள்ளதாகத் தகவல்கள் வந்துள்ளன.

உடையில் விஷம் தேய்த்து நான் அவர்கள் தலையைத் தொட்டு ஆசீர்வதிக்கும் போது அந்த விஷத்தை எனது உடலில் செலுத்தத் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது என்று கூறியுள்ளார்.

இத்தகைய முயற்சிகளை சீனா கைவிட்டுவிட்டு திபெத் தொடர்பாக ஆக்கபூர்வமான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்றும் தலாய்லாமா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சச்சினின் பரிசு ஏலத்தில்



பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூனுக்கு, சச்சின் டெண்டுல்கர் கையெழுத்திட்டுக் கொடுத்த கிரிக்கெட் துடுப்பாட்ட மட்டை 3400 பவுண்ட்ஸுக்கு ஏலம் போனது. கடந்த 2010ஆம் ஆண்டில், பிரிட்டன் பிரதமர் கேமரூன், இந்தியா வந்தபோது, சச்சின் அவருக்கு தான் பயன்படுத்திய கிரிக்கெட் துடுப்பாட்ட மட்டையில் கையெழுத்திட்டுப் பரிசாக வழங்கினார்.

இதுவரை அதைப் பத்திரமாகப் பாதுகாத்து வந்த கேமரூன், ருவாண்டாவில் கிரிக்கெட் ஸ்ரேடியம் ஒன்று கட்டும் பணிக்கு நிதி திரட்டுவதற்காக சச்சின் வழங்கிய மட்டையை நன்கொடையாக வழங்கினார். கேமரூன் தொகுதியின் தலைவராக இருந்த கிறிஸ்டோபர் ஷாலேயின் முதலாமாண்டு நினைவஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டது. அதை முன்னிட்டு லார்ட்ஸில் உள்ள லாங் ரூமில் சச்சின் மட்டை ஏலம் விடப்பட்டது. அதில், 3400 பவுண்ட்ஸுக்கு ஏலம் போனது.

மேலும், ருவாண்டா ஸ்ரேடியம் கட்டுவதற்காகக் கிறிஸ்டோபரின் மகன் எடோ என்பவர் ரூ.1.12 கோடி நிதி திரட்டிக் கொடுத்தார். அண்மையில், நடந்த கன்சர்வேட்டிவ் பிரண்ட்ஸ் ஒப் இந்தியா நிகழ்ச்சியில் பங்கேற்ற கேமரூன், சச்சின் பயன்படுத்திய விலை மதிப்பற்ற மட்டையை நன்கொடையாக அளிப்பதை இந்திய [illegible] அறிவேன் என்று தெரிவித்தார்.



பிரிட்டனில் வேலை வாய்ப்பைக் கோரிய ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்து வருகின்றன. லண்டனில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர் மீது தாக்குதல் நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தில் விமான விபத்து

## 14 பேர் சாவு



நேபாள நாட்டைச் சேர்ந்த விமானமான அக்ரி சுற்றுலா விமானம் 16 இந்தியர்கள் உள்பட 21 பேருடன் நேற்றுக் காலை தலைநகர் காத்மண்டுவில் இருந்து பிரபல சுற்றுலாத் தலமும் மலையேற்றத்துக்குப் புகழ்பெற்ற இடமுமான ஜோம்சோமுக்கு சென்றது.

காத்மண்டு,மே15

வடக்கு நேபாளத்தில் உள்ள ஜோம்சோம் விமான நிலையத்தில் தரையிறங்க முயன்ற சுற்றுலா விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் இருந்த 21 பேரில் 14 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 6 பேர் காயங்களுடன் உயிர் தப்பினர். நேபாள நாட்டைச் சேர்ந்த விமானமான அக்ரி சுற்றுலா விமானம் 16 இந்தியர்கள் உட்பட 21 பேருடன் நேற்றுக் காலை தலைநகர் காத்மண்டுவில் இருந்து பிரபல சுற்றுலாத் தலமும் மலையேற்றத்துக்குப் புகழ்பெற்ற இடமுமான ஜோம்சோமுக்குச் சென்றது. விமானம் ஜோம்சோம் விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றபோது விபத்துக்குள்ளானது. இதில் விமானத்தில் பயணம் செய்த 21 பேரில் 4 இந்தியர்கள் உட்பட 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதில் 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் 6 பேர் காயங்களுடன் உயிர் தப்பினர். அவர்கள் சிகிச்சைக்காக பொகாரா நகருக்கு உலங்குவானூர்தி மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள ஒருவரின் கதி என்னவென்று தெரியவில்லை. சம்பவ இடத்தில் பொலிஸாரும், இராணுவத்தினரும் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# ஆப்கனில் இரு பிரிட்டிஷ் படையினர் சாவு

ஆப்கானிஸ்தான் தேசிய பொலிஸ் படையைச் சேர்ந்த ஒருவர் , பிரிட்டனின் இராணுவத்தினர் இருவரைச் சுட்டுக் கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் தென் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதென ஆப்கன் பாதுகாப்பு அமைச்சினை மேற்கோள்காட்டி பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் 2001 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை இடம்பெற்ற பிரிட்டன் இராணுவத்தினரின் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 414 ஆகப் பதிவாகியுள்ளது.

பொலிஸ் உடையணிந்த ஆயுததாரி இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருக்கலாம் என நேட்டோ படையினரின் பேச்சாளர் இதற்கு முன்னர் கூறியிருந்தார்.

### தேசிய பொலிஸ் வீரரே சுட்டார்

எனினும் தேசிய பொலிஸில் ஒரு வருட காலம் கடமையாற்றிய ஒருவரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக ஆப்கானிஸ்தான் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். எனினும் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணங்கள் எதுவும் இதுவரை தெரியவரவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சமாதானப் பேச்சாளர் காபூலில் சுட்டுக்கொலை



ஆப்கானிஸ்தானின் சிரேஷ்ட சமாதானப் பேச்சு வார்த்தையாளரான அர்சலா ரஹ்மானி, காபூல் நகரில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை தலிபான்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாய்க்குப் பேரிடிக அமைந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில் தலிபான் தளபதிகளை நெருங்கக்கூடிய முக்கிய பிரமுகராக ரஹ்மானி விளங்கினார்.

தலிபான்களின் ஆட்சியில் அமைச்சராக விளங்கிய அர்சலா ரஹ்மானி, பின்னர் ஆப்கானிஸ்தான் உயர் சமாதானச் சபையின் முக்கியஸ்தராக விளங்கினார். அந்தச் சபையின் தலைவரான புர்ஹானுதீன் ரப்பானி கடந்த வருடம் தற் கொலைத் தாக்குதலொன்றில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் காலை ரஹ்மானி தனது வேலைக்கு சென்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

**தலிபான்களின் ஆட்சியில் அமைச்சராக விளங்கிய அர்சலா ரஹ்மானி, பின்னர் ஆப்கானிஸ்தான் உயர் சமாதானச் சபையின் முக்கியஸ்தராக விளங்கினார்.**

இதற்கிடையில் ஆப்கானிஸ்தான் சமாதான சபையின் சிரேஷ்ட அதிகாரி கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைக்கு தலிபான்களே காரணம் என்று குற்றங்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவில்



அமரர்

ஸ்ரீமான் குமாரசாமி சாந்தலிங்கம்

திதி: 15.05.2012

புவியேர்ப்பு
17 ★ 04★ 1932

விண்ணேற்பு
27 ★ 04★ 2011

தந்தைப் பாசமென்ற தகைசால் உறவு - அதன்
அர்த்தமதைக் காட்டி நின்றீர்கள் - அப்பா!
அம்மாவின் உற்ற துணையாய்
உமைச் சேர்ந்த அனைவருக்கும் தலைவனாய்,
சமூகத்திற்கோர் தொண்டனாய்
மிளிர்ந்து வாழ்ந்தீர்: அப்பா!

காலனும் கவர்ந்து இழுத்து காலமொன்று
- கடந்திடினும்
கலையாது உம் நினைவோ காலமெல்லாம்
நினைக்கும் பொழுதெல்லாம் நேரெதிரே வந்து
உம் உருவம் நிழல்போல் எமைத் தொடர்ந்து
தோன்றாத் துணையாய் நின்று வழிகாட்ட
வித்தக விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!

குடும்பத்தினர்

6 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
021 - 3207471


# பிலிப்பைன்ஸில் பேருந்து விபத்து

மணிலா,மே15

பிலிப்பைன்ஸில் அதிக பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று 150 மீற்றர் பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 10 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பேருந்தின் மேல் தளத்தில் பயணிகளை ஏற்றிச் சென்றதாலும், அதி வேகமாக சென்ற பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததாலும் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளபோதும் அவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பேருந்தில் சுமார் 30 பேர் பயணம் செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

பண்டத்தரிப்பு - பிரான்பற்றைப் பிறப்பிடமாகவும், இந்தியா, தமிழ்நாடு, மண்டபம் முகாமை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் ஹேமலதாவின் அன்புக் கணவருமாகிய அழகேந்திரன் அவர்களின் 45 ஆம் நாள் நினைவு தினம் இன்று (15.05.2012) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் அவரது இல்லத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தோற்றம்
10.06.1974

மறைவு
01.04.2012



கிருஷ்ணபிள்ளை
அழகேந்திரன்

மனைவி - ஹேமலதா.
பிள்ளைகள் - அனுசா, அனுசன், அனுசியன், அனுசுசா, அனுசியா (இந்தியா)
சகோதரர்கள் :- கிருஷ்ணபிள்ளை, வல்லிபுரம், புஸ்பராணி குடும்பத்தினர், சிவகுமார் குடும்பத்தினர், உதயகுமார் குடும்பத்தினர், றஞ்சித்குமார், தபோதினி குடும்பத்தினர் (இலங்கை - யாழ்ப்பாணம்)
மாமா - பொன்னையா - சிவபுவனேந்திரராசா. அத்தை மனோன்மணி. மச்சாள் - டெனிசா (கனடா), சகலன் ஏகாம்பரம், அழகரத்தினம், மச்சாள் ரேணுகா.
பெறாமக்கள் - பிரபாகரன், பிரதீபன், தீபராஜ், தினேஸ், அரவிந்தன், சியாம், சியான் (கனடா). சகலன் செல்வச்சந்திரன், மச்சான் வதனி,
பெறாமக்கள் - ஜெனந்தா, சுயந்தன் (கனடா), மச்சான் ராஜ்மோகன், சுகந்தினி, மருமக்கள் - பிரியந்தன்,பிரிதா, மிதுசன், ஸ்தூரிகா (இந்தியா), மச்சான் ஜெயக்குமார், சத்தியா (அவுஸ்திரேலியா), சகலன் விஜயகுமார், சுகந்தினி. பெறாமக்கள் - கரிஷன், கபிசன் (கனடா)
பண்டத்தரிப்பு - பிரான்பற்றைச் சேர்ந்த தாய்மாமன்மார்களான - மார்க்கண்டு, துரைசிங்கம் குடும்பத்தினர். மார்க்கண்டு தெய்வேந்திரம் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பண்டத்தரிப்பு [illegible]வளவு முருகப்பெருமானை இருகரம் கூப்பி இறைஞ்சுகின்றோம்.

ஆனைக்கோட்டை. கி.உதயகுமார் (சகோதரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(16)

டாக்டர் ஹெர்மன் ரைபர் என்கிற ஆராய்ச்சியாளர் தம்முடைய நூலொன்றில் இப்படிக் குறிப்பிடுகிறார்.

**சவால்களுக்கே சவால் விடலாம்**

இரண்டாவது உலகப் பெரும் போரின் போது சேற்றிலும் களைப்பிலும் சிக்கிய யூனிட் கொமாண்டர்கள் மரணத்தின் விளிம்புக்கே சென்றதுண்டு. அந்த அபாயகரமான சூழ்நிலையிலும் அவர்கள் தாராளமாகச் சிரித்தார்கள் என்று அவர்கள் சிரிப்பின் மூலம் தங்கள் இடையூறுகளைக் கடந்ததுபோல், நாமும் சிரிப்பதன் மூலம் கவலைகளை வெல்ல முடியுமே!

சிரிப்பு பிரச்சினைகளை இலேசாக்கும், சரியான கோணத்தில் பார்க்கச் செய்யும். நம்மவர்கள் எடுத்ததற்கெல்லாம் 'ஆகா ஊகூ' என்று உணர்ச்சி வசப்படுகிறவர்கள். அதிகம் சிரிப்பதில்லை. அதுதான் அவர்களிடம் உள்ள பெரிய பிரச்சினை.

*'சிரிப்பு மகிழ்ச்சியின் முகவரிச் சீட்டு*
*தோல்விகளைக் கண்டு துவளாதீர்கள்*
*சோதனை வந்தால், சோர்ந்து விடாதீர்கள்.'*

சிரித்து விடுங்கள். விழுகிற ஒவ்வொரு முறையும் சிரித்துக் கொண்டே எழுந்து கொள்ளுங்கள். சிரியுங்கள். நெருக்கடிகளின் போது நிமிர்ந்து நிற்கலாம். சவால்களுக்கே சவால் விடலாம். சூரியனைக் கண்ட பனியாய் விலகிவிடும் உங்களின் கவலைகள்.

**சிரிப்பை தியானமாக்கியவர்**

சிரிப்பை ஒரு தியான முறையாய் வடிவமைத்தார் ஓஷோ. அதற்கான கருத்தமைவை அவர் 'ஜென்'னில் இருந்து பெற்றிருக்கவேண்டும். ஓஷோ கூறுவார் 'உங்கள் இயல்பான சிரிப்பில் இருக்கிறது ஆழ்ந்த தியானத்தன்மை' என்று.

செய்முறை: ஒவ்வொருநாளும் விழித்தெழுகின்ற போது கண்களைத் திறப்பதற்கு முன் உங்கள் உடம்பை ஒரு பூனையைப் போல் நீட்டி நெளித்து சீராக்கிக் கொள்ளுங்கள். மூன்று, நான்கு நிமிடத்திற்குப் பிறகு கண்கள் இன்னும் மூடிய நிலையில் சிரிக்கத் தொடங்குங்கள். ஓர் ஐந்து நிமிடம் போல் சிரித்துக் கொண்டிருங்கள். முதலில் அது செயற்கையாகத் தெரிந்தாலும் சீக்கிரமே அந்த முயற்சி உண்மையான சிரிப்பைக் கொண்டுவரும். சிரிப்பில் உங்களை இழந்து விடுங்கள். அது இயல்பாவதற்குப் பலநாள் ஆகலாம். அது இயல்பாகப் போகிறபோது உங்கள் நாளின் போக்கே மாறிவிடும்.

'சிரிக்கும் புத்தர்' என்று அழைக்கப்பட்டார் ஒருவர். அவருடைய பெயர் உண்மையில் ஹோட்டே என்பதாகும். அவர் பருமனாக தோளில் ஒரு பையைப் போட்டுக் கொண்டு நடப்பார். பார்த்தாலே சிரிப்பு வரும் தம்மை ஒரு 'ஜென் குரு' என்று அவர் சொல்லிக் கொண்டதில்லை.

ஓரிடத்தில் இருந்து இன்னோரு இடத்தும் ஒரு சந்தையில் இருந்து இன்னொரு சந்தைக்குமென்று அவர் போய்க்கொண்டிருப்பார். சந்தையின் நடுப்பகுதியில் நின்று சிரிக்கத் தொடங்குவார். கூட்டம் கூடும் ஒவ்வொருவராய் சிரிக்கத் தொடங்கி, ஒட்டு மொத்தச் சந்தையிலும் சிரிப்பொலி பரவும்.

ஹோட்டேயின் வரவுக்கு மக்கள் காத்திருப்பது வழக்கமாயிற்று. மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறவராயிற்றே!

ஒரு சமயம் ஜென் குரு ஒருவர் ஹோட்டேயிடம் கேட்டார், ஜென்னின் சிறப்பு என்ன? என்று கேட்டார் ஹோட்டே தம்முடைய தோளில் இருந்த பையைக் கீழே வைத்தார் சிரித்தபடி ஜென்னின் கோட்பாடு என்ன? அந்த ஜென் குரு கேட்டார். ஹோட்டே வார்த்தையாய் அதுவும் சொல்லவில்லை. தோளில் பையைப் போட்டுக் கொண்டு நடந்தார் சிரித்தபடி. சிரிப்பு ஒன்றே அவர் விடுக்கும் செய்தி

**அமைதியான முறையில் எதிர்கொள்ளுங்கள்**

பேருந்துக்குக் காத்திருக்கிற ஒருவர் வண்டி நேரத்துக்கு வர வேண்டுமே என்று கவலைப்படுவார். நேரத்துக்கு வந்தால் கூட்டம் இல்லாமல் இருக்க வேண்டும்.யன்னலோர இருக்கை கிடைக்க வேண்டும் என்று கவலைப்படுவார். நம் விருப்பப்படியே எல்லாம் நடக்குமா என்ன? சமயத்தில் முண்டியடிக்கிற கூட்டத்தில் மூச்சுத்திணற நின்று கொண்டு போகும்படியும் இருக்கும் போக்குவரத்து மிகுதியான நேரதில் சொகுசு பார்க்க முடியாது. அலை ஓயட்டும்.தலை முழுகலாம் என்று காத்திருந்தால் கடலில் குளிக்க முடியாது. கிடைக்கிற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது புத்திசாலித்தனம்.

ம்...இது எனக்குச் சரிப்பட்டு வராது என்று தயங்குகிறவர் கவலைப்படுவது கட்டாயமாகி விடும். வருவதை ஏற்பவராயிருங்கள்

வில்லியம் ஜேம்ஸ் என்கிற தத்துவமேதை சின்னதாய் ஒரு அறிவுரை கூறியிருக்கிறார் எது நடந்தாலும் ஏற்பவராயிருங்கள் என்று ஏற்றுக் கொள்ளும் செயல் முறையைக் கொண்டு பல துரதிஷ்ட நிலைகளை அவற்றால் ஏற்படும் விரும்பத்தகாத விளைவுகளை நீங்கள் சமாளிக்க முடியும்.

தவிர்க்க முடியாதவைகள் நிகழும் போது அவற்றை ஏற்பதற்கு நம்முடைய மனதை நாம் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அது அப்படித்தான் வேறுமாதிரியாக இருக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கவலைப்படுவதில் அரசர்களும் விதிவிலக்கல்ல. இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் தம்முடைய அரண்மனை நூலகத்தில் கீழ் கண்ட வாசகத்தை சுவற்றில் பொறிக்கச் செய்தாராம்.

**தரையில் சிந்திய பாலுக்காகவோ, மேகத்தில் மறையும் நிலவுக்காகவோ நாம் கவலைப்படக்கூடாது. வாழ்க்கைப் பயணத்தில் முதல் தேவை பொறுமையுடன் எதையும் சகித்துக் கொள்வது. உண்மையில் தீதும் நன்றும் பிறர் தர வருவதில்லை. வருத்தமும் மகிழ்ச்சியும் சூழ்நிலைகளால் விளைவதில்லை. சூழ்நிலை தொடர்பாய் நாம் மேற்கொள்ளும் எதிர்வினையே நம்முடைய உணர்வுகளைத் தீர்மானிக்கிறது.**

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# ஆங்கிலத்துறையில் குழந்தைகளை ஈடுபட வைப்பது மிகவும் அவசியம்

## வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

காரைநகர், மே 15

ஆங்கிலத்துறையில் சிறு வயதில் இருந்தே குழந்தைகளை ஈடுபட வைப்பது அவசியமாகும். அவ்வாறு இல்லை எனில் உலகில் உள்ள சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலை அவர்களின் எதிர்காலத்தில் தோன்றும்.

இதனைக் கருத்தில் கொண்டு காரைநகர் பாலர் பாடசாலையானது ஆங்கிலக் கல்வியோடு கணினிக் கல்வியையும், சிறுவயது முதல் குழந்தைகளுக்குப் போதிப்பது பாராட்டுக்குரிய விடயமாகும் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் பாலர் பாடசாலையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும், கலை விழாவும் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மண்டபத்தில் மேற்படி பாடசாலையின் காப்பாளரும் ஓய்வுநிலை அதிபருமான பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ப.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

கல்வியில் முதலீடு செய்வது ஆக்கபூர்வமானது, அந்த முதலீடு வாழ்வை உயர்த்தும், அதுவே எதிர்காலத்தில் நல்ல ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்பும், காரைநகர் பிரதேச குழந்தைகள் ஆங்கிலக் கல்வியை நாடி, காரைநகரை விட்டு வெளியே செல்லும் நிலை காணப்பட்டது.

> எங்களுடைய காலத்தில் சிறுவயது முதலே எல்லா வாய்ப்பாடுகளையும் பாடமாக்கி இருந்தோம். கணிப்பான் பாவனையால் இன்றைய சமூகத்தில் பலருக்கு வாய்ப்பாடே தெரியாமல் இருக்கின்றது.

ஆனால் இன்று பிள்ளைகள் வெளியே செல்வது தடுக்கப்பட்டுள்ளது. வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டு அங்கு ஆங்கிலக் கல்வி சிறப்பாகப் போதிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

குழந்தைகளுக்கு நிறைய ஆற்றல் உண்டு. அவற்றை மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். சின்ன வயதிலேயே இந்தக் குழந்தைகளுக்கு மேடைக்கூச்சத்தை இல்லாமல் செய்து கலைத் திறன்களை வெளிப்படுத்தியமை பாராட்டத் தக்கதாகும்.

குழந்தைகளுக்குக் கட்டுப்பாடு தேவை. அவர்களுக்கு ஆடம்பரப் பொருள்களை கொடுத்து வசதிகளைக் கொடுப்பதன் மூலம் அவர்களை சோம்பேறிகளாக்கி விடுகின்றோம்.

எங்களுடைய காலத்தில் சிறு வயது முதலே எல்லா வாய்ப்பாடுகளையும் பாடமாக்கி இருந்தோம். கணிப்பான் பாவனையால் இன்றைய சமூகத்தில் பலருக்கு வாய்ப்பாடே தெரியாமல் இருக்கின்றது.

இங்கு கல்வி பயிலும் சிறுவர்கள் நீண்ட காலம் பயிற்சி செய்து தமது கலைத் திறன்களை இந்த மேடையில் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்கள், நிர்வாகிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களைப் போல ஏனைய முன்பள்ளிச் சிறார்களின் திறமைகளை வெளிப்படுத்த ஆசிரியர்களும், பெற்றோர்களும் முன்வரவேண்டும் - என்றார். (எ-250)

# வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வலிகாமம் வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு

**பிரிவு-4**
**சிறுகதை ஆக்கம்**

1ஆம் இடம்-நே.சிந்துஜா-பண்டத்தரிப்பு பெ.உ.பா, 2ஆம் இடம்-பா.மச்சாயினி-உடுவில் மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்-ட.ஷாளினி-இராமநாதன் கல்லூரி.

**பிரிவு-5**
**சிறுகதை ஆக்கம்**

1ஆம் இடம்-சு.கோபிகா- மகாஜனக்கல்லூரி, 2ஆம் இடம்- வி.சுலக்சன்- ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இ.மதுசாலினி-மாதகல் சென்.ஜோசவ் ம.வி.

**பிரிவு-1, வாசிப்பு**

1ஆம் இடம்-லீ.தீபிகா- மகாஜனக்கல்லூரி, 2ஆம் இடம்- சு.பாஸ்கரன்-மானிப்பாய் விவேகானந்தா வி, 3ஆம் இடம்-நி.தர்மினி-வட்டு மத்திய கல்லூரி.

**பிரிவு-2 , வாசிப்பு**

1ஆம் இடம்-கி.அபிராமி- விக்ரோறியாக்கல்லூரி, 2ஆம் இடம்-ம.மேருஜன்- அருணோதயக் கல்லூரி, 3ஆம் இடம்- நி.சுதாகரன்-அராலி சரஸ்வதி வி.

**பிரிவு-1**
**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

1ஆம் இடம்-கு.பிறையாழினி-மானிப்பாய் சோதிவேம்படி வி, 2ஆம் இடம்-சு.ஆதவன்- பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, 3ஆம் இடம்-டே.தவரூபன்-கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வி.

**பிரிவு-1**
**பேச்சு**

1ஆம் இடம்-ஜே.ரிதுர்ஷிகா-மானிப்பாய் சோதி வேம்படி வி, 2ஆம் இடம்-ந.சுவர்ணா- அருணோதயக்கல்லூரி, 3ஆம் இடம்-கே.ஸ்ரீநாராயணி-மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**பிரிவு-2**
**பேச்சு**

1ஆம் இடம்-ச.திவ்வியா-மானிப்பாய் மகளிர் கல்லூரி, 2ஆம் இடம்-ச.லக்ஸ்சன்- மகாஜனக் கல்லூரி, 3ஆம் இடம்-ப.சாரங்கி-யாழ்ப்பாணக் கல்லூரி.

**பிரிவு-3**
**பேச்சு**

1ஆம் இடம்-ப.ஜோஜிகா-மானிப்பாய் மகளிர் கல்லூரி, 2ஆம் இடம்-ஜே.ஜெயலோஜினி-சுதுமலை சிந்மயபாரதி, 3ஆம் இடம்-யோ.ஐங்கரன்-விக்ரோறியாக் கல்லூரி.

**பிரிவு-4**
**பேச்சு**

1ஆம் இடம்-கி.விஸ்ணுகா-மகாஜனக்கல்லூரி, 2ஆம் இடம்-தி.ஜனனி- பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, 3ஆம் இடம்-த.தஸ்மினி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

**பிரிவு-5**
**பேச்சு**

1ஆம் இடம்-த.மதுஜனன்-இணுவில் மத்திய கல்லூரி, 2ஆம் இடம்-ம.தயாபரன்-பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, 3ஆம் இடம்-ம.தட்சாயினி-யாழ்ப்பாணக் கல்லூரி.

**பிரிவு-1, பாவோதல்**

1ஆம் இடம்-சி.சௌமியா-ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வி, 2ஆம் இடம்-த.அபிநாத்-வட்டு மத்திய கல்லூரி, 3ஆம் இடம்-சி.சிவபரனியா-ஏழாலை ம.வி, த.சோபிகா-சங்கரத்தை சின்னம்மா வி.

**பிரிவு-2, பாவோதல்**

1ஆம் இடம்-து.ரூபவதனா-யாழ்ப்பாணக் கல்லூரி, 2ஆம் இடம்-உ.நிவேதிகா-மானிப்பாய் மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்-தி.சுகந்தினி-வட்டு மத்திய கல்லூரி.

**பிரிவு-3**
**பாவோதல்**

1ஆம் இடம்-ஸ்ரீ.பிரியந்தி-மானிப்பாய் மகளிர் கல்லூரி, 2ஆம் இடம்-ர.கலைக்ஷிகா-ஏழாலை ஸ்ரீமுருகன் வி, 3ஆம் இடம்- த.திவாசினி- தொல்புரம் விக்கி.வித்தி.

*(தொடரும்)*

# சைவ வித்தகர் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 15

வடபகுதியிலுள்ள இளைஞர்கள் சைவ வித்தகர் பட்டப்படிப்பு கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் ஆர்வம் குறைவாக இருக்கின்றமை, கவலை அளிப்பதாக அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உபதலைவர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சைவ வித்தகர் பட்டப்படிப்புக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் காட்டும் ஆர்வத்துடன் ஒப்பிடும்போது வடபகுதியினரின் ஆர்வம் மிகவும் குறைவாக இருக்கிறது.

ஒருவருட முழு நேரக்கற்கை நெறி இதுவாகும். கற்கை நெறியை தொடர்பவர்களுக்கு உணவு, தங்குமிடம், உடை அனைத்தும் இலவசமாக வழங்கிவருகிறோம்.

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் ஏற்பாட்டிலேயே இந்தக் கற்கை நெறி நடத்தப்படுகிறது.

இந்தக் கற்கை நெறிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தும் மலையகத்திலிருந்தும் அதிக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன- என்றார். (எ-3)

# அதிபர் பாராட்டு

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் 2011 இல் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 97 வீத மாணவர்கள் முழுமையான சித்தியைப் பெற்று க.பொ.த.(உ/த) கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இத்தகைய உயர்ந்த சித்தி வீதத்தைப் பெறுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டுவதாக அதிபர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய்: 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## தேர்தல் அரசியல்

30 ஆண்டுகளுக்குப் பின்னர் அண்மையில்தான் தேர்தல் அரசியல் கலாசாரம் வடக்கு – கிழக்கில் மீண்டும் முளைவிட்டது. ஒரு விடுதலைப் போராட்டத்துக்குப் பிந்திய அரசியல் முதிர்ச்சி மற்றும் அரசியல் தூரநோக்குக் கொண்டதாக அல்லாமல் ஜனநாயகத்தின் மிகக் கேவலமான அம்சமாகவே இந்தத் தேர்தல் அரசியல் இங்கு பரிணமித்துள்ளது.

வெறும் பதவி மோகம், வாக்குகளை தக்க வைப்பதற்கான போட்டி என்பவற்றின் மிகப் பெரிய மோதலை இந்தத் தேர்தல் அரசியல் தமிழர்கள் மீது திணிக்கிறது. அரசுக்கு ஆதரவாக அல்லது ஏதாவது ஓர் அமைச்சரின் பெயரைச் சொல்லி அவருக்கு ஆதரவாகச் செயற்படுபவர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு என்கிறது இந்தக் கீழ்த்தரமான தேர்தல் அரசியல். போதாக்குறைக்கு ''தமிழரசுக் கட்சியோடு சேர்ந்த ஆக்களுக்கும் தேர்தலில் அதற்கு வேலை செய்த ஆக்களுக்கும் ஒன்றும் கொடுக்க வேண்டாம் என்று மேலிடத்திலிருந்து உத்தரவு. கடந்த தேர்தலில அரசுக்கு யார் வேலை செய்தினமோ அவர்களுக்குத்தான் இந்தப் பட்டியலில் இடம்'' என்ற குரல்கள் பகிரங்கமாக மக்களிடம் வெளிப்படுத்தப்படுகின்றன.

இந்த நாட்டின் அதியுச்ச அதிகாரம் எனச் சொல்லப்படும் அரசமைப்பு, வேலைவாய்ப்பில் தகுதி, தர நிர்ணயம் தவிர்த்து எந்த அரசியல் செல்வாக்கும் இருக்கக்கூடாது என்கிறது. அதனாலேயே அரச வேலைவாய்ப்பு எதுவானாலும் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் அதற்கு ஆள்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்று அரசமைப்பு கூறுகின்றது. ஆனால் இந்தக் கேவலமான தேர்தல் அரசியலோ அரசமைப்பைப் புறந்தள்ளி, வேலை வாய்ப்புக்கான சம வாய்ப்புகளை மறுத்து தமக்கு அரசியல் அடிமைகளாக முன்வருவோருக்கு மட்டுமே வேலைவாய்ப்புக்களை வழங்குவேன் என்கிறது.

போட்டிப் பரீட்சை நடத்தப்படுவதற்கு முன்னரே வேலைக்கு ஆள்களைத் தெரிவு செய்த பட்டியல்கள் உரிய அரச அதிகாரிகளுக்குக் கிடைத்துவிடுகிறது. பின்னர், பேருக்கு ஒரு பரீட்சையும் நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டு மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். தங்களை அதிகாரத்தில் அமர வைக்காதவர்களுக்கு உயிர் வாழும் உரிமை உங்களுக்குக் கிடைக்காது என்ற அரசியல்வாதிகளின் பேரம்பேசல் அன்றி இது வேறு ஏதுமில்லை.

மறுபுறத்தில் இதனை எதிர்க்கவும் மக்களுக்குப் பலம்கொடுத்து அவர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தவும் பேசவும் வேண்டிய எதிர்நிலை அரசியல்வாதிகளோ நெஞ்சுரமும் நேர்மைத் திறமும் அற்றவர்களாக இருக்கிறார்கள். மக்கள் பிரச்சினை என்று எதையாவது பேசி, அவர்களுக்காகப் போராடப்போய் வீண் பிரச்சினைகளுக்குள் ஏன் மாட்டிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமே அவர்களிடம் மேலோங்கி நிற்கிறது. எதிர்ப்புக் குரல் கொடுப்பதா இல்லையா என்று அவர்கள் தங்களுக்குள் முட்டி மோதிக் கொள்வதிலேயே முடிவின்றிக் காலம் கடந்து கொண்டிருக்கிறது.

மறுபுறத்தில் மக்கள் பிரச்சினை என்று ஒன்றை வெளிப்படுத்திவிட்டு, இராணுவப் புலனாய்வாளர்களும் பொலிஸாரும் அதைப் பற்றி மிரட்டியதும் நான் அப்படி ஒன்றையும் சொல்லவே இல்லை என்று 'பல்டி' அடிக்கும் அரசியல்வாதிகளும்தான் இன்றைய ஜனநாயகத் தேர்தல் அரசியலில் மக்களின் பிரதிநிதிகள். அரசியல் போராட்டத்தை முன்னெடுத்து இவர்கள் தமிழருக்கு எப்போது விடிவு வாங்கித்தரப் போகிறார்கள்? 30 வருட விடுதலைப் போராட்டத்தின் பின்பு எமக்கு எஞ்சியது இதுதான் என்னும்போதுதான் நெஞ்சு வெடிக்கிறது.

# நினைவெல்லாம் துயராகி நிழலாடும் 'குமுதினிப் படகு'

**கல்லடி லில்லி மகன்**

குமுதினிப் படகின் 37 ஆவது துயரத்தின் நினைவலைகளைச் சுமந்துகொண்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.



யாழ். குடாநாட்டின் நகர மையத்திற்கு மேற்கே 34 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள ஒரு அமைதியான தீவு 'நெடுந்தீவு'. 10 சதுர மைல்கள் பரப்பைக் கொண்ட தீவில் 1955ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் பிற இடங்களில் இருந்து குடியேறி தமது வாழ்க்கையை ஆரம்பித்தனர். பொதுவாக இங்கு வாழும் மக்கள் தமது வாழ்வோடு ஒன்றித்துப்போன தேவைகள் சார்ந்தவற்றில் தன்னிறைவு கொண்டிருக்கவில்லை.

தேவைகளின் பெரும்பாலானவற்றை யாழ். குடா நாட்டுடன் தொடர்புபட்டிருந்த தீவகத்தின் குறிகாட்டுவான் எனும் இடத்திற்குச் சென்று நிறைவு செய்தனர். தீவையும் குறிகாட்டுவானையும் பிரித்திருந்த ஒன்பது மைல் தொலைவு கடலாகியிருந்ததால் தீவுக்கான அனைத்து தொடர்புகளும் கடல் மார்க்கமாகவே நிகழ்ந்தன. மக்கள் தமது அன்றாட கடல் மார்க்கமான போக்குவரத்தை 'குமுதினி' என்ற பெயர் கொண்ட படகின் மூலமே மேற்கொண்டனர். 'குமுதினி....!' தீவு வாழ் மக்களின் வாழ்வோடு ஒன்றித்துப்போன ஒரு இணைபிரியா அம்சமாகிப் போயிருந்தது. நாளுக்குஇரண்டு தடவைகள் தீவின் மக்களை சுமந்து செல்லும் குமுதினி, தீவின் நாளாந்த இயக்கத்திற்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் உயிர் நாடியாக உயர்ந்து நின்றது. அன்று தீவின் மக்களுக்காக வாழ்ந்த குமுதினி, இன்று அரச பயங்கரவாதத்தின் இரத்தச் சாட்சியாகி உயர்ந்து நிற்கின்றது. 15.05.1985 அன்றுதான் தீவு பூபாளத்தின் இனிமையை இறுதியாகச் சந்தித்தது. அதன் பின்னர் வந்தவைகள் எல்லாம் சோகத்தின் முகாரியாகவே கழிந்தது. அன்றைய காலைப் பொழுதில் குமுதினியும் வழமைபோன்று தனது பணிக்குத் தயாராகியது. எப்போதும் போலவே எதிர்பார்ப்புகளாலும் தம்மைச் சூற்றிய நினைவுகளாலும் மனங்களை நிறைத்த மக்கள் கூட்டம் குமுதினியையும் நிறைத்தது.1985ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி காலை ஏழு மணிக்கு நெடுந்தீவு மாவிலி துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் புறப்பட்ட குமுதினிப்படகு அரைமணி நேரம் பயணித்ததன் பின் இலங்கைக் கடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டது. இரு சிறிய 'பிளாஸ்ரிக்' படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் குமுதினிப் படகை நிறுத்தச் சொல்லி அதை நிறுத்தியபின்னர் ஆறு கடற்படையினர் முக்கோணக் கூர்க்கத்திகள், கண்டங் கோடரிகள், இரும்புக்கம்பிகள் சகிதம் குமுதினிப்படகில் ஏறினர். படகின் பின்புறம் இருந்த பயணிகளைப் படகின் முன்பக்கம் செல்லுமாறு மிரட்டினர். அவர்கள் அனைவரும் சென்றுவிட்டனர். படகின் பின்புறம் இரு புற இருக்கைகளுக்கு நடுவே இயந்திரத்தி லிருந்து பின்புறம் 'புறப்புளருக்குச்' செல்லும் ஆடுதண்டுப் பகுதி மூடப்பட்டிருந்த பலகைகளை படையினர் கழற்றி (இருக்கைகளிலிருந்து 4 அடி ஆழம் உள்ளதாக இது இருந்தது) அதன் பின்னர் படகுப் பயணிகள் ஒவ்வொருவராக உள்ளே அழைக்கப்பட்டனர். குமுதினிப் படகின் இருபக்க வாசல்களிலும் உள்ளேயும், வெளியேயும் கடற்படையினர் இருந்தனர். ஒவ்வொருவராக வந்த பயணிகளை அழைத்து கத்தியால் குத்தியும், கண்டங் கோடரிகளால் வெட்டியும், இரும்புக் கம்பிகளால் தாக்கியும் அந்தப் படகின் நடுப்பள்ளத்தில் போட்டனர். கொல்லப்பட்டவர்களைத் தவிர, குற்று [illegible] [illegible] போல் கிடந்தனர். இச்சம்பவத்தில், தாக்குதல் நடக்குதெனக் குரல் கொடுக்க முனைந்தவர்கள் அதிகாரிகளால் தாக்கப்பட்டு இறந்தார்கள். உள்ளே பள்ளமாக இருந்த பகுதியில் மக்கள் போடப்பட்டதால் முன்புறமிருந்து செல்லும் பயணிகளுக்கு, ஒவ்வொருவராக முன்னர் சென்றவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாதிருந்தது. இதனையறிந்த ஒருவர் கடலில் குதித்துக் கொண்டார். அதன் பின்னர் படகில் இருந்த இன்னும் சிலரும் கடலில் குதிக்கத் தொடங்கினர். இதனைக் கண்ட படையினர் துப்பாக்கிகளால் அவர்களைச் சுட்டுக் கொன்றனர். ஏழு மாதக் குழந்தை முதல் வயோதிபர்கள் வரை ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டனர். இச்சம்பவத்தில் இறந்தவர் போல கிடந்த சிலர் உயிர்தப்பிக் கொண்டார்கள். இப்படுகொலையின் பின் காயம் அடைந்தவர்கள் புங்குடுதீவு வைத்தியசாலைக்கும், யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். குமுதினிப்படகில் சென்ற மக்கள் இவ்வாறு கொல்லப்பட்ட விடயத்தை வைத்தியசாலை அதிகாரிகள் பொலிஸாரிடம் முறையிட்டும் பொலிஸார் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இதற்கு மாறாக சில நாள்களுக்குப் பின்னர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த உயிர் தப்பியவர்களை வைத்தியசாலைக்கு வந்த இலங்கைக் கடற்படையினர் தேடத்தொடங்கினர். நோயாளிகள் உடனடியாக மருத்துவமனையிலிருந்து விடுதிகளுக்கு இடம் மாற்றப்பட்டு மறைக்கப்பட்டனர். உயிர்தப்பிய படகுப் பயணிகளைப் படையினர் புங்குடுதீவு மருத்துவமனையில் தேடிச் சென்ற போது சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த சிலர் மறைக்கப்பட்டு தலைமறைவாக்கப்பட்ட நிலையிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டனர். குமுதினிப்படுகொலையிலிருந்து உயிர்தப்பியவர்களில் சிலரைத் தவிர ஏனையோர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். கடற்படையினர் குமுதினிப்படகுப் பயணிகள் தப்பிவிடக்கூடாது என்பதற்காக அவர்களைத் தேடித்திரிந்தனர். இன்றும் தேடிக் கொண்டே இருக்கின்றனர். எதுவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படாது இக் கடற்படுகொலை மறுக்கப்பட்டு மறைக்கப்பட்டுள்ளது. ஆனால், சாட்சிகளைத் தேடியழிக்க இலங்கைக் கடற்படையினர் தீவிர அக்கறைகாட்டி வருகின்றனர். விசாரணைகளற்று மறைக்கப்பட்ட 'குமுதினிப் படுகொலை' போன்ற ஈழத்தமிழர்கள் மீது சிங்கள ஆட்சியாளர்களும் அதன் இராணுவக்கட்டமைப்புகளும் மேற்கொண்ட 'இனப்படுகொலைகள்' பற்றியும் ஈழத்தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான படுகொலைகளுக்கு இன்றும்- இன்னமும் உரியநீதி கிடைக்கப்பெறாமை பற்றியும் இன்றைய சூழ்நிலையில் சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். ஈழத்தமிழர்கள் தங்களது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகத்தான் ஆயுதமேந்திப் போராட முனைந்தார்கள் என்பதனை இவ்வாறான நீதி கோரல்களின் மூலமாவது சர்வதேசம் உணர்ந்துகொண்டு ஈழத்தமிழர்களான எமக்கு நிம்மதியான சுதந்திரமான எதிர்காலத்தை அமைத்துத் தர வேண்டும். இலங்கைத் தீவில் சகல உரிமைகளும் மறுக்கப்பட்ட இனமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற எமக்கான உரிமைகளை இனி சர்வதேசம்தான் எமக்குப்பெற்றுத் தரவேண்டும். மறுக்கப்பட்ட எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்காகவும், பறிக்கப்பட்டுக்கொண்டிருந்த எமது உயிர்களை தற்காத்துக்கொள்வதற்காகவும் தமிழர்கள் முன்னெடுத்த போராட்டத்தை பயங்கரவாதத்தின் பெயரினால் அழித்தொழித்துவிட்ட சர்வதேசம் இன்று நிர்க்கதியாகிக் கிடக்கும் ஈழத்தமிழரெம்மைப் பாதுகாக்கவேண்டிய பாரிய கடமைப்பாட்டுடன் இருக்கின்றது. இந்தக் கடமைப்பாட்டினை சர்வதேசம் கட்டாயம் நிறைவேற்றியேயாகவேண்டும். இந்தக் கடமைப்பாட்டிலிருந்து சர்வதேசம் தவறும் பட்சத்தில் ஈழத்தமிழர்கள் இம்மண்ணிலிருந்து அடியோடு அழித்தொழிக்கப்பட்டுவிடுவார்கள் என்பது சர்வ நிச்சயம். 'பயங்கரவாதம்' ஒழிக்கப்பட்டுவிட்ட இந்த ஜனநாயக நாட்டில் இன்றும் -இப்போதும் நிம்மதியற்ற வாழ்தலையே தமிழினம் வாழ்ந்து வருகின்றது. தமிழர்கள் மீதான சிங்கள அரசின் அட்டூழியங்களை எதிர்த்தபோது அந்த எதிர்ப்பைப் பயங்கரவாதமாக சித்திரித்து தமிழர்கள் எம்மை பல்வேறு வழிகளிலும் அழித்தொழிக்க சிங்கள அரசு முனைந்து, அதில் வெற்றியும் கண்டுவிட்டது. சிங்களப் பெரும்பான்மை தமிழினத்தின் மீது புரிந்த, புரிந்து கொண்டிருக்கின்ற அநீதிகளை எதிர்க்கும் வலுவிழந்தவர்களாக ஆக்கப்பட்டுவிட்ட நாங்கள் எங்கள் மீது சிங்களப் பெரும்பான்மை புரிந்த, புரிந்து கொண்டிருக்கின்ற வன்கொடூரங்களின் வலியினையாவது இவ்வாறு யாருக்காவது சொல்லி எமது உளவேதனைகளைக் குறைத்துக் கொள்ள விளைகின்றபோது 'இறையாண்மை' 'ஜனநாயகம்' என்கின்ற அடக்குமுறைச் சாசனங்களினால் எங்களது உணர்வின் வேதனை விசும்பல்களை அடக்கிவிட முனையாதீர்கள். ஜனநாயக நாடெனக் கூறப்படும் இந்த நாட்டின் மக்களாகிய நாங்கள் எங்களது உளத்துயரங்களைச் சொல்லி அழுவதற்காவது அனுமதி தாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவக் கண்காட்சி - 2012 சுக வாழ்வை நோக்கி....

# உளவியல் காட்சிக் கூடம்

ஊடக அனுசரணை: உதயன்

21.05.2012 26.05.2012

யாழ். மருத்துவ பீட மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மாபெரும் மருத்துவக் கண்காட்சியில் (2012) உளவியல் என்ற தலைப்பில் பல்வேறுபட்ட பயன்தரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வினைத்திறனான கற்றல் (Effective Learning), ஆரோக்கியமான தூக்கமும் சுகவாழ்வும் (sleep), ஆளுமை (personality), நெருக்கீடுகளும் அவற்றுக்கு முகம் கொடுத்தலும் (Stress and coping with stress),Abuse & addiction மகிழ்ச்சி (Happiness), காதல், திருமணம், குடும்ப வாழ்வு (Love, marriage & life), இறப்பும் இழப்புணர்வும் (Death & Grief) போன்ற விடயங்கள் மாணவர்கள், இளைஞர்கள், பெரியோர்கள் யாவரையும் மையப்படுத்தி உளநல மேம்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட கண்காட்சிப் பொருள்கள், ஒலி, ஒளி விவரணக் காட்சிகள் மூலம் விளக்கம் அளிக்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களே! உங்களின் கற்றல் திறன் சம்பந்தமாக இலகுவான கற்றலுக்கு சிறந்த வழிகாட்டல்கள், கற்பதற்குரிய சூழலை எவ்வாறு உருவாக்கிக் கொள்ளலாம், இலகுவாக மனப்பாடம் செய்வதற்குரிய வழிமுறைகள் பற்றி இந்தக் கண்காட்சியிலிருந்து அறிந்துகொள்ளலாம். மேலும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றலை வினைத்திறனாக்குவதற்குச் செய்ய வேண்டிய வழிமுறைகள் பற்றியும் இந்தக் கண்காட்சியின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அத்துடன் ஆரோக்கியமான தூக்கம் தொடர்பாக மனிதனின் உடல்,உள ஆரோக்கியத்திற்கு நித்திரையின் அவசியம் மற்றும் கனவுகள் சம்பந்தமான சுவாரஸ்யமான விடயங்களும் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளன. மற்றும் நித்திரையின் போது எமது உடலில், மூளையில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாகவும் விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற மன நெருக்கீடுகள் (Stress) பற்றியும் நெருக்கீடுகளால் ஏற்படும் பாதிப்புக்கள் அதே சமயம் நன்மைகள் பற்றியும் நெருக்கீடுகளை எவ்வாறு வெற்றிகரமாக எதிர்கொள்வது, நாம் நமது வாழ்க்கையில் பின்பற்றக்கூடிய சில சாந்த வழிமுறைகள் (Relaxation techniques) தொடர்பாகவும் பயிற்சிகள் பற்றியும் செய்முறை ரீதியாக விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

இன்று நம் மத்தியில் அதிகரித்துக் காணப்படும் கணினி, தொலைபேசிப் பாவனையால் மாணவர்கள் முதல் பெரியவர்கள்வரை அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற விளைவுகள் இந்த இலத்திரனியல் உபகரணங்களுக்கு அடிமையாகிப் போகின்ற நிலைமை தொடர்பாக Abuse & addiction என்ற பிரிவில் போதியளவு விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. மேலும் இளந் தலைமுறையினரிடையே மிகப்பெரும் சவாலாக வீறுகொண்டு நிற்கும் மதுவுக்கு அடிமையாதல், புகைத்தலுக்கு அடிமையாதல் போன்றன தொடர்பாகவும் இவ்வாறான அடிமையான நிலைமையிலிருந்து மீண்டு வருவதற்குரிய வழிமுறைகள் பற்றியும் ஆலோசனைகள் பெறுவதற்கு நாடவேண்டிய இடங்கள் தொடர்பாகவும் வீடியோ காட்சிகள், விளக்கப்படங்கள், மாதிரிப் பொருள்களின் உதவியுடன் சிறப்பான விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் ஆளுமை வளர்ச்சியும் ஒவ்வொரு தனிநபரினதும் ஆளுமையில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் பற்றியும் ஒருவர் எவ்வாறு சிறந்த ஆளுமையுள்ளவராக தன்னை மாற்றிக்கொள்ளலாம் போன்ற புதிய சுவாரஸ்யமான தகவல்களையும் இந்தக் கண்காட்சியின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கையில் தேடியலையும் ஒரு விடயமான மகிழ்ச்சி தொடர்பாக அன்றாட வாழ்வில் மகிழ்வுடன் வாழ்வது எப்படி?, நீடித்து நிலைத்து நிற்கும் மகிழ்ச்சிக்குரிய வழிமுறைகள் போன்றன பற்றியும் விளக்கமளிக்கப்படவுள்ளது.

மற்றும் இளைஞர்களின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கும் காதல், திருமணம், குடும்பவாழ்வு தொடர்பான உளவியல் விடயங்கள் யாவரினதும் பலதரப்பட்ட வினாக்களுக்கும் விடையளிக்கும் விதத்தில் சிறப்பான முறையில் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் மனிதர்கள் யாவருக்கும் இறுதியான, பொதுவான மாற்றமுடியாத முடிவாக விளங்கும் மரணம் தொடர்பாகவும், குடும்ப உறுப்பினர் ஒருவரின் மரணத்தின் பின்னர் குடும்ப உறவினரிடையே ஏற்படும் இழவிரக்கம் (grief), இழவிரக்கத்திலிருந்து எவ்வாறு நம்மை விடுவித்துக் கொள்வது, இழவிரக்கத்திலிருக்கும் ஒருவருக்கு நாம் செய்யவேண்டிய உதவிகள், எவ்வாறு பல்வேறுபட்ட சமயம் சார்ந்த கிரியைகள், சடங்குகள் என்பன மரணத்தின் பின்னரான இழவிரக்கத்தை ஆற்றுப்படுத்துதலில் பங்கு வகிக்கின்றன, மரணத்திற்கு பின்பு வேறு ஒரு வாழ்வு உண்டா போன்ற விடயங்களும் இந்தக் கண்காட்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் எமது சமூகத்தில் காணப்படும் பொதுவான மனநோய்கள், அவ்வாறான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், அவர்களை ஏற்றுக்கொள்ளுதல், அவர்களிடமிருக்கும் ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல் தொடர்பாக சமூகத்துக்கு உள்ள பெரிய பொறுப்புக்கள் பற்றியும், இந்த நோயாளிகளுக்கு தொடர்ந்து ஒழுங்கான மருத்துவக் கண்காணிப்பு வழங்கப்படுவதன் அவசியம் தொடர்பாகவும் இந்தப் பிரிவில் விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் உளவியல் தொடர்பான பல பயன்தரு நூல்களின் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் இந்தக் கண்காட்சியில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சிக்கு வருகை தருவோர் தாம் எப்படிப்பட்ட ஆளுமையுடையவர், தாம் தம்முடைய வாழ்வில் தொலைபேசி, கணினி, மது, புகைத்தல் போன்றவற்றுக்கு அடிமையாகியுள்ளனரா? என சுயமாகக் கண்டறிந்து கொள்வதற்கான முறைகள் போன்றனவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறாக பல்வேறுபட்ட விடயங்களை பயன்தரும் முறையில் உள்ளடக்கி ''உளவியல் பிரிவு'' எனும் பகுதியானது இந்த மருத்துவக் கண்காட்சிக்கு மேலும் மெருகூட்டும் என்பதில் ஐயமேதுவுமில்லை.

சி.நிரோசன்
நான்காம் வருட மருத்துவ பீட மாணவன்

ப.அருந்தவம்

# தடம் மாறும் தமிழ் இளைஞர்கள்

யாழ். குடாநாட்டில் சித்திரை பிறந்தால் கூடவே திருவிழாக்களும் வருவதுண்டு. திருவிழா என்றால் சிறுவர் முதல் பெரியவர் வரை கொண்டாட்டம்தான். எமது ஊர்களில் ஒவ்வொரு ஊருக்கும் மூன்று நான்கு கோயில்கள் என்றிருக்கும். அவற்றில் வருடா வருடம் மிகவிமர்சையாகத் திருவிழாவும் நடக்கும். ஆனால் இம்முறை ஊர்தோறும் கோயில்களில் மேளதாளம், சிறந்த சாத்துப்படி, படையல்கள், ஆலய அலங்கார வேலையெனப் பல செயற்பாடுகள் காணப்பட்ட போதும் ஆலயத்தில் இளைஞர் கூட்டம் குறைவாகவே காணப்படுகிறது.

இன்றைய இளைஞர்களுக்கு கடவுள் பக்தி குறைந்துள்ளதா அல்லது திருவிழாக்களில் வெறுப்பு நிலை தோன்றியுள்ளதா? அல்லது வேறு ஏதாவது செயல்நோக்கில் அவர்கள் திசைதிரும்பிச் செயற்படுகின்றனரா? என எம் மத்தியில் வினாக்கள் எழுகிறது.

இன்றைய இளைஞர்களில் பலர் மாலை 4.00 மணி என்றதும் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் பிரசன்னமாகி கிரிக்கெட் திருவிழாக்களில் ஒன்றித்து விடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு ஆலயம் தான் எதற்கு?வேறு பயன் தரும் செயற்பாடுகள் தான் எதற்கு? அவர்களின் இரவையே தொலைக்காட்சிப் பெட்டி விழுங்கிவிடுகிறது.

சமீபகாலமாக ஒரு விபரீதமான போக்கு எமது சமூகத்தில் வேரூன்றி வருகிறது. விளையாட்டுக்களைத் தொலைக்காட்சியில் கண்டுகளிக்கின்ற பேரார்வம் மனிதனின் விலை மதிப்பற்ற மனித நேரங்களை விழுங்கிக் கொண்டிருக்கிறது. நேரடி ஒளிபரப்பில் மூழ்கிப் போகின்ற எமது மக்களின் பயன்தரும் மனித நேரம் மிச்சப்படுத்தப்படுமானால் சமுதாயத்தின் பொருளாதாரத்தை எவ்வளவோ மேம்படுத்திக் கொள்ளலாமல்லவா?

கிரிக்கெட்டில் ஆர்வம் உடையவர்கள் கிரிக்கெட் விளையாடலாம்.அதேபோல் கால்பந்தில் ஆர்வமுடையவர்கள் கால்பந்து விளையாடலாம். எவருக்கு என்ன விளையாட்டில் ஆர்வமோ அந்த விளையாட்டை தெரிவு செய்து விளையாடலாம். இதனாலேயே ''காலை [illegible] வுடன் படிப்பு'' என்பதும் [illegible] முழுவதும் விளையாட்டு'' என்பதும் சிறுவர்களுக்கான நன்நெறியாக மகாகவி பாரதி எடுத்துக் கூறியுள்ளார்.

விளையாட்டென்பது உடல் நலனுக்கு மிகவும் நல்லது. மனதுக்குப் புத்துணர்வைத் தரும், சவால்களை எதிர்கொள்கின்ற மனவலிமை கிடைக்கும், குழுமனப்பாங்கு வளர்ச்சியடையும், தலைமைதாங்கும் ஆற்றல் மேம்பாடடையும் பிறரின் இயலாமைக்குதவும் பண்பு வளரும், மொத்தத்தில் ஒருவகைச் சூழலையே பன்மடங்கு அதிகரிக்கும் என விளையாட்டால் விளையும் நன்மைகளைப் பட்டியலிடலாம், ஆரோக்கியமான விளையாட்டு சமுதாயத்திற்கே நன்மை தரும் என்பதில் ஐயமில்லை ஆனால்.....

மணிக்கணக்கில், நாள்கணக்கில் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்து ஒரு வித வெறித்தனத்தோடு பார்ப்பதும் அதன் பின் பல மணி நேரம் தமது கடமைகளை [illegible] வேரூன்றிய செயற்பாடாகும்.

பலரின் எண்ணம் கிரிக்கெட் பார்ப்பதென்பது வசதியானவரின் செயல் என்றும், தம்மை ஒரு வசதியானவர் எனக் காட்ட கிரிக்கெட் பார்ப்பதும் எம்மத்தியில் உண்டு. உங்களுக்குத் தெரியுமா? எத்தனை அமெரிக்கர்களுக்கு டோனியையோ, கெயிலையோ, முரளியையோ தெரியாது என்று? இதே போலதான் சீனர், ஜப்பானியரும் நேரடி ஒளிபரப்பைக் கண்டு களித்து தமது பயன்தரு மனிதமணி நேரத்தை வீணாக்க விரும்புவதில்லை.

மாணவரைப் பொறுத்தவரை தொடர்ந்தும் தொலைக்காட்சியினுள் புதைந்திருப்பது மாணவனின் வேறு செயற்பாடுகளிற்கு குந்தகம் விளைவிப்பதாக அமையுமல்லவா? அதாவது விளையாடுவது, தூங்குவது, பிறருடன் பழகுவது, வீட்டில் பாடங்களைப் படிப்பது பெற்றோருடன் அன்பாகவும் அன்னியோன்னியமாகவும் காலத்தைச் செலவிடுவது, சுத்தமானதும், சுகாதாரமானதுமான காற்றைச் சுவாசிப்பது போன்றவற்றை நிர்மூலமாக்குகிறது. இதைவிட தொடர்ந்து தொலைக்காட்சியைப் பார்ப்பதினால் பசியின்மை, தூக்கமின்மை, மந்தபுத்தி, சுவாசமின்மை, முரட்டுத்தனம், சோம்பல், பார்வை பாதிப்பு போன்ற பின்விளைவுகளும் ஏற்பட அடிகோலுகிறது.

பெரியோர், சிறியோர், இளைஞர் என்ற வயது வித்தியாசமின்றி அனைவரையும் கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு எனும் மோகம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து எமது சமுதாயத்தை மீட்டெடுக்க வேண்டும்.

உடலுக்கும், உள்ளத்திற்கும் வலிமை சேர்க்கும் விளையாட்டுக்களில் சகலரும் பங்குகொள்ளத்தான் வேண்டும். ஆர்வம் உள்ளோர் ஆடுகளத்தில் இறங்கி கிரிக்கெட் விளையாடலாம். அதனைவிடுத்து வரவேற்பறையில் முடங்கிக் கிடந்து எங்கோ நடக்கும், யாரோ விளையாடும் விளையாட்டைப் பார்த்து இனியும் காலம் கழிப்பதை தவிர்ப்போம். வரலாறு சொல்லும் படியாக நாம் எம்மால் இயன்ற செயல்களைச் செய்வோம். பிறரைப் பார்த்து மகிழ்வதை விடுத்து நாம் இயங்கி மகிழ்வோம்.

எமது மூதாதையர் கட்டிக்காத்த சமூக பழக்க வழக்கங்களிலும் நாம் ஈடுபட்டு எமது கலை, கலாசார பண்பாட்டு இருப்பிற்கும் எம்மாலியன்ற பங்களிப்பை ஆற்றி நாம் நன்மை பெறுவதுடன் பிறர்க்கும் நன்மை பல செய்வோம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசன் கற்றுத் தந்த பாடம்

ஒரு காட்டில் குரு ஒருவர் இருந்தார். அவர் ஒரு சந்நியாசி. அவரிடம் சந்நியாசிகள் நிறையப் பேர் சீடர்களாக இருந்தார்கள்.

ஒரு நாள் இரவு அந்த குரு தமது சீடர்களில் ஒரு சந்நியாசியைக் கூப்பிட்டு, "நீ இப்போதே அரண்மனைக்குப் புறப்பட்டுப்போய் அங்கு அரசனின் அவையிலிருந்து ஞானம் பெற்றுவா" என்று கூறினார்.

"குருவே! இந்த ஆச்சிரமத்தில் நான் கற்றுக்கொள்ள முடியாததையா அரண்மனையில் போய் கற்றுக்கொள்ளப் போகிறேன்..?" என்று சீடர் வினவினார்.

"பேசாமல் நான் சொல்வதைக் கேள், மற்றதெல்லாம் அங்கே போய் அரசரைக் கேட்டுக்கொள்" என்றார் குரு.

வேறு வழி இல்லை. அந்த சந்நியாசி அரண்மனைக்குச் சென்றார். அங்கே போய்ப் பார்த்தால் இவருக்கு அதிர்ச்சி. அங்கே எல்லோரும் மது மயக்கத்தில் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் அந்த நிலைமையைப் பார்த்ததும் இந்தச் சந்நியாசியின் மனம் மிகவும் சங்கடப்பட்டது. நம்முடைய குருநாதர் இப்படி நம்மை அவமானப்படும்படி செய்துவிட்டாரே... என்று அவர் நினைத்தார்.

இருந்தாலும் அரசர் சந்நியாசியை வரவேற்று உபசரித்தார். அதுமட்டுமன்றி அரசர் அவரிடம் "நீங்கள் கண்டிப்பாக இன்றிரவு இங்கேயே தங்கவேண்டு" என்றும் கேட்டுக்கொண்டார்.

"இன்றைக்கு இரவு நான் இங்கு தங்குவதா? இது என்ன அர்த்தமில்லாத செயல்" என்று சந்நியாசி தடுமாறினார்.

இருந்தாலும் அவரை அரசன் விடுவதாக இல்லை.

"நாளைக்குக் காலையில் குளித்து முடித்து சாப்பிட்ட பின்னர் நீங்கள் போகலாமே" என்றார் அரசர். அரை மனதுடன் சந்நியாசி அங்கு தங்கினார்.

அன்றிரவு அவருக்குத் தூக்கமே வரவில்லை. 'இந்த இடத்தில் நான் எப்படி ஞானம் பெறமுடியும்?' என்று ஆச்சரியத்துடன் அவர் யோசித்துக் கொண்டே தூங்கினார்.

காலையில் எழுந்தவுடனேயே அரசன் அவரிடம் வந்து "அரண்மனைக்குப் பின்னால் இருக்கும் நதியில் குளித்துவிட்டு வரலாம் வாருங்கள்" என்று அழைத்துச் சென்றார். இரண்டு பேரும் சென்று நதியில் குளித்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் திடீரென்று ஒரு பயங்கரக் கூச்சல் கேட்டது.

என்ன என்று பார்த்தால்.. அரண்மனை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. காவலர்கள் அலறிக் கொண்டிருந்தனர். அப்போது அரசர் சந்நியாசியிடம் "அதோ பார்த்தீங்களா?" என்று காட்டினார்.

சந்நியாசி நிமிர்ந்து பார்த்தார். வானளாவிய தீப்பிழம்புகள்.

அவ்வளவுதான் உடனே சந்நியாசி அரண்மனையை நோக்கி ஓட ஆரம்பித்தார். "எதற்காக அங்கே ஓடுகிறீர்கள்?" என்று மன்னர் வினவினார்.. "அரண்மனையில் என்னுடைய ஒரு துணி இருக்கிறது. அது எரிந்துவிடுமே என்ற அவசரத்தில் ஓடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே துறவி ஓடினார்.

அப்படி ஓடிக்கொண்டிருந்தபோது அவர் உள்ளத்தில் 'அரசரின் அரண்மனையே தீப்பிடித்து எரிந்துகொண்டிருக்கிறது. ஆனால் அரசர் அங்கு நதியிலேயே நின்று கொண்டிருக்கிறார். ஆனால் நான் என்னுடைய ஒரு சிறிய துணி எரிந்துவிடும் என்பதற்காக ஓடிக்கொண்டிருக்கிறேனே' என்ற எண்ணம் தோன்றியது.

உடனே அவர் அரசர் இருந்த இடத்துக்குத் திரும்பி வந்தார். அங்கே தண்ணீரில் நின்று அரசர் சிரித்துக் கொண்டிருந்தார்.

அவரிடம் "அங்கே உங்களுடைய அரண்மனையே தீப்பற்றி எரிகிறது; நீங்கள் இப்படி ஒன்றுமே நடக்காதது போல் நின்று சிரித்துக்கொண்டிருக்கிறீர்களே? இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை" என்று துறவி கூறினார்.

இவ்வாறு கேட்டதற்கு அந்த அரசர் " நான் அந்த அரண்மனையை என்னுடையதாகக் கருதியிருந்தால் இந்நேரம் இங்கே நின்று கொண்டிருக்கமாட்டேன். அரண்மனை என்பது அரண்மனை. நான் என்பது நான். நான் பிறப்பதற்கு முன்பும் அரண்மனை இருந்தது. நான் இல்லாமல் போன பின்பும் அரண்மனை இருக்கும். அப்படியிருக்கும்போது அது எப்படி என்னுடையதாக இருக்க முடியும்? நீங்கள் அந்தத் துணியை உங்களுடையதாகவும் அரண்மனையை என்னுடையதாகவும் நினைத்தீர்கள். அதனால் அதன் பின்னால் ஓடுகிறீர்கள்" என்றார்.




அதைக்கேட்டதும் சந்நியாசிக்கு, 'மனிதன் தன்னுடைய நோக்கத்தினாலேயே அடிமையாகிறான். அந்த நோக்கத்தை மாற்ற வேண்டும் அல்லது தகர்க்க வேண்டும். அப்படிச் செய்தால் உலக பந்தங்களிலிருந்து விடுதலை பெறமுடியும்' என்ற தெளிவு ஏற்பட்டது.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# கலையம்சம் நிறைந்த உருவச் சிலைகளை கொண்ட வேலக்கை பிள்ளையார்

(கடந்த வாரத் தொடர்ச்சி)



**சோபா**

ஒவ்வொரு பிரதேசத்தினதும் அடையாளத்தை வெளிப்படுத்த ஆலயங்கள் மிகையானதாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் மானிப்பாய் நகர் பிரதேச மக்கள் மத்தியில் பெயர் பெற்று விளங்கும் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயம் இந்து சமயத்தின் பண்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு மக்களுக்கான அருட்கடாச்சத்தை அள்ளி வழங்கிக்கொண்டிருக்கின்றது.

ஆன்மிக ஈடுபாடு கொண்டவர்கள் மத்தியில் மட்டுமல்லாது பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் சிறந்த பண்பாடுகளை வளர்க்கும் அரும்பெரும் பணியை இந்த ஆலயம் வழங்கி வருகின்றது.

இந்த ஆலயத்தில் நாளாந்தம் இன மத வேறுபாடுகளற்ற மனிதாபிமானச் செயற்பாடுகளுடனான தொண்டுகளை நிறைவேற்றும் பக்தர்களும் அதிகரித்த வண்ணம் உள்ளனர்.

ஆகம விதிப்படி மூன்று காலப் பூசைகள், விசேட பூசை வழிபாடுகள், திருவிழாக்கள் அந்தந்தக் காலக் கிரமங்களுக்கு ஏற்ப பூசகர்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

ஆலயத்தின் தெற்குப் பக்கமாகக் காணப்படும் குமிழ மரம், தல விருட்சமாக உள்ளது. இந்த விருட்சம் ஆலயத்துக்கு மட்டுமல்லாது வீதியால் செல்வோருக்கும் நிழல்தருவதாக அமைந்துள்ளது.

ஆலயத்தின் பண்பாடுகளை எளிமையாகவும், கலை அம்சத்துடனும் கொண்டு விளங்கும் மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் ஆலயம் அமைவிடத்துக்கு ஏற்றாற் போல் சிறந்த பணியை வழங்கி வருகின்றது.

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயம், ஆரம்ப காலத்தில் சிறு கோயிலாக இருந்து பெரும் வளர்ச்சியைக் கண்டு மக்கள் மத்தியில் புகழ்பெற்ற ஆலயம் என்னும் பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆலயச் சூழலில் வசிக்கும் மக்கள் மத்தியில் ஆலய வழிபாட்டுக் கோலங்களும், நிறைவேற்றும் தொண்டுகளும் ஆலயத்தை வளர்ச்சிபெறச் செய்வதற்கு ஊன்றுகோலாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தடன் ஆலயத்தில் வீற்றிருந்து அருள் புரியும் முருகன் தனது மேன்மையை மக்களுக்கு அவ்வப்போது வெளிப்படுத்தாமலில்லை.

ஆலயத்தில் அமைந்துள்ள விநாயகர் சிலை அமைதியான கலை அம்சத்துடன் கருங்கல்லினால் பொழியப்பட்டு சிறப்பாகக் காட்சியைக் கொடுக்கிறது. அத்துடன் நடராஜர் சிலை கலைஞர்களுக்கு கலைஞனாகவும், சாதாரண மக்களுக்கு நடராஜப் பெருமானாகவும், ஏனையோருக்கு ஆடலரசனாகவும் அமைந்துள்ளது.

ஆலயத்துக்குத் தேவையான வருவாய்கள் அனைத்தும் ஆலயத்துக்காக விடப்பட்ட நெற்காணிகளில் இருந்து பெறப்படுவதாகவுள்ளன. ஆலயத்தை நிர்வாகம் செய்வோர்களின் பொது நலத்துடன் கூடிய பரந்துபட்ட சேவைகள் ஆலயம் மேலும் வளர்ச்சி காண உறுதுணையாக உள்ளன.

ஆலய நிர்வாகத்தை வழிநடத்திச் செல்வோர்கள் பரம்பரை பரம்பரையாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் நிர்வாகம் சீராக இடம்பெறுவதற்கு எந்தவித இடையூறுகளும் ஏற்படுவதில்லை.

ஆலயத்தில் வீற்றிருக்கும் ஒவ்வொரு சிலைகளும் சிறந்த கலையம்சத்துடன் உருவமைக்கப்பட்டிருப்பது ஆலயத்தை மேலும் மெருகூட்டுவதாகவுள்ளது.

ஆலயத்தில் அமைந்துள்ள விநாயகர் சிலை அமைதியான கலை அம்சத்துடன் கருங்கல்லினால் பொழியப்பட்டு சிறப்பான காட்சியைக் கொடுக்கிறது. அத்துடன் நடராஜர் சிலை கலைஞர்களுக்கு கலைஞனாகவும், சாதாரண மக்களுக்கு நடராஜப் பெருமானாகவும், ஏனையோருக்கு ஆடலரசனாகவும் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை வலம் வருவோர், உள் வீதி வலம் வரும் போது அம்பலவாணரை தரிசித்து சிறிது நேரம் நின்றே செல்வார்கள். அந்தளவுக்கு அழகும், கலை நுட்பமும் பக்தர்களைக் கவர்ந்திழுப்பதாய் உள்ளது.

அம்பலவாணருக்கு அடுத்ததாக கூட்டுக் குடும்பம் போல நவக்கிரகங்களின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சனீஸ்வரனுக்காய் ஒவ்வொரு சனிக்கிழமையும், புரட்டாதி மாதத்தில் வரும் சனி வாரமும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தனியான குடும்பமாகவும் தத்துவப் பொருள் நிறைந்த கலைப் பொக்கிஷமாகவும் ஆலயத்தின் நவக்கிரக அமைப்பு காணப்படுகின்றது.

ஆலயத்தின் வசந்த மண்டபத்தில் எழுந்தருளி உள்ள வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான் தங்க நிறத்தில் காட்சிகொடுப்பதுடன் வார்த்த முகமும் சாத்திய திருவடிகளும் கையில் வேலும் என காணப்படுகின்றார். இந்தச் சிலையே வீதி உலா இடம்பெறும் போது எடுத்துச் செல்லப்படுகின்றது.

இவ்வாறு ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஒவ்வொரு திருவுருவச் சிலைகளும் சிறப்பாகக் காட்சி கொடுக்கின்றன.

இந்த ஆலயத்தின் வருடாந்த பெரும் திருவிழா ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் 12 தினங்கள் கொண்ட திருவிழாவாக இடம்பெறுகின்றது. சிறப்பான பூசைவழிபாடுகளும், நிகழ்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்ட காலங்களுக்கு ஏற்ப உரிய முறைகளில் பின்பற்றலுடன் கிரமமாக நடைபெற்று வருகின்றன.

இந்துக்களின் ஆலய வழிபாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தவதற்கு இது போன்ற ஆலயங்களின் தன்னிகரற்ற சேவை காரணமாக இருப்பதோடு இந்துக்களின் பண்பாடுகளும் இவை மூலம் பேணப்பட்டு வருகின்றன.

மானிப்பாய் நகரில் இந்துப் பண்பாடுகளை தலைமுறைகளுக்கு எடுத்தியம்பும் ஒப்பற்ற பணிகள் தடைகளற்று நிறைவேற்றப்படுவதற்கு மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் வேலன் கைகொடுப்பாராக.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இதுவரையில் இல்லை நட்டஈடு

## இழுத்தடித்தால் போராட்டம்தான் என ஒலுவில் மக்கள் எச்சரிக்கை

ஒலுவில்,மே15

ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்கென இரண்டாம் கட்டமாக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குரிய நட்டஈட்டுத் தொகை இதுவரை வழங்கப்படவில்லை என்று காணி உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் அக்கறையற்று மௌனிகளாகச் செயற்படுகிறார்கள் என்று மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். தமக்கான நட்டஈட்டுத் தொகையை விரைவில் பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு முஸ்லிம் அமைச்சர்களிடம் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், மாறாக இழுத்தடிக்கப்பட்டால் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப்படும் என்று காணி உரிமையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் இது தொடர்பாக அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஏ. எல்.எம்.அதாவுல்லா, றிஷாட் பதியுதீன் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்கென இரண்டாம் கட்டமாக 2008 ஆம் ஆண்டு 39 பேருக்கு சொந்தமான காணிகள் சட்டப்படி சுவீகரிக்கப்பட்டன. இந்தக் காணிகள் சுவீகரிக்கப்பட்டு விலை மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களின் மதிப்பீட்டின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. இது ஜனநாயகத்துக்கும் மனித நேயத்துக்கும் முரணானசெயலாகும்.

அரசு எமக்கான நட்டஈட்டுத் தொகையை விரைவில் வழங்குவதற்கு நடவ டிக்கை எடுக்குமாறு துறைமுக அதிகார சபைத்தலைவருக்கு பல தடவைகள் எழுத்து மூலம் தெரிவித்தும் கூட தற்போது 3 வருடங்கள் பூர்த்தியாகியும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த மதிப்பீட்டுத்தொகை அதி கூடியதனால் மீள் பரிசீலனை செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்கள உயர் அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தவுடன் நட்டஈடு வழங்குவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று துறைமுக அதிகார சபையின் அத்தியட்சகரினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டிருந்தது.

ஆனால் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டுத் தொகை சம்பந்தமாக பரீட்சித்துப் பார்த்ததன் பிற்பாடு மீள்பரீசிலனை செய்யப்பட மாட்டாது என்று குறித்த திணைக்கள உயர் அதிகாரியினால் காணி, காணி அபிவிருத்தி அமைச்சுக்கும் துறைமுக அதிகார சபைக்கும் மனு மூலம் தெரிவிக் கப்பட்டுள்ளது. ஆனால் இது வரையில் துறைமுக அதிகார சபையினால் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்காக 10000 ஏக்கர் தனியார் காணிகள் சுவீகரிக்கப்பட்டு அனைவரது நட்டஈடும் வழங்கப்பட்டு விட்டது. ஆனால் நாங்கள் சிறுபான்மையினர் என்பதனாலா இழுத் தடிப்புக்கள் நடைபெறுகின்றன என்று மீக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு சமூகத்தினரின் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்களுக்கு அநீதி இழைக் கப்படும்போது அவர்களின் பிரச்சினைகளை இனம் கண்டு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதே ஓர் உண்மையான அரசியல் வாதியின் தார்மீகக் கடமையாகும். இத்தன்மை எமது மறைந்த தலைவரிடம் நூறுவீதம் இருந்தது. அமைச்சுப் பதவிகளை தக்க வைத்துக் கொள்வதற்காக அவர் அநீதியைக் கண்டு ஒருபோதும் மௌனியாய் இருந்ததில்லை. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-31)

# தமிழர்களின் மாடுகள் நஞ்சூட்டிக் கொலை

## பண்ணை உரிமையாளர்கள் விசனம்

மட்டக்களப்பு,மே15

மட்டக்களப்பு எல்லைக் கிராமமான மங்களகம, கெவிலியமடு பகுதியில் மேய்ச்சலுக்குச் சென்ற தமிழர்களது மாடுகள் நஞ்சூட்டப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளன என்று பண்ணை உரிமையாளர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனிடம் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, 35ஆம் கிராமத்தைச் சேர்ந்த சுந்தரராசா ரஞ்சன் என்பவரது ஆறு மாடுகள் நஞ்சருந்தி உயிரிழந்துள்ளன. சாமித்தம்பி பாலபுத்தப்பிள்ளை என்பவரின் 75 பசுமாடுகள் காணாமற் போயுள்ளன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழர்களின் மேய்ச்சல் தரையில் அத்துமீறி குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாலேயே மேற்படி மாடுகள் கொல்லப்பட்டுள்ளன என்று பண்ணையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்துள்ளனர்.

பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் எனக் கூறும் அரசு மறு புறத்தில் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைகளில் குடியேற்றங்களை மேற்கொண்டு அவர்களது கால்நடைகளை வளர்க்க முடியாமல் தடை விதித்துள்ளது. கடந்த காலங்களிலும் இவ்வாறு பல மாடுகள் பெரும்பான்மை இனத்தவரால் சுட்டுக்கொல்லப்பட்டும், திருடப்பட்டும் உள்ளன என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

# நோயாளிக்கு அனுமதியில்லை

## மேல் மாகாண சுகாதார அமைச்சு விசாரணை

பிலியந்தலை,மே15

சிகிச்சைக்காக பிலியந்தலை வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாமை தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று மேல் மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளரை பாதுகாவலர் ஒருவர் இல்லாத காரணத்தினால் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு பிலியந்தலை வைத்தியசாலையின் ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்தனர். இதன் காரணமாக குறித்த நோயாளர் நேற்று முன்தினம் இரண்டு மணி வரை வைத்தியசாலையின் நுழைவாயில் அருகே விழுந்து கிடந்துள்ளார். பின்பே வைத்தியசாலையின் இரண்டு சிற்றூழியர்கள் குறித்த நோயாளரை வைத்தியசாலைக்குள் அழைத்துச் சென்றனர். அதிக நேரம் சிகிச்சை எதுவுமின்றி காத்திருந்ததால் பிலியந்தலை வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக தேசிய வைத்தியசாலைக்கு குறித்த நோயாளி மாற்றப்பட்டார்.

இந்த நோயாயளியின் தலைக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவருக்குச் சிகிச் சையளிக்கப்பட்டு வருவதாக தேசிய வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

# ஒருவர் வெட்டிக் கொலை

லிந்துலை,மே15

லிந்துலை - ஹென் போல்ட், வாழைமலை தோட் டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாக அக்கர பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். பாவா ஜெயனூர் (வயது-37) என்பரே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். சடலம் அக்கரபத்தனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அக்கரபத்தனை பொலிஸார் தெரிவித்தனர். (ச)



கல்முனை ஆதார வைத்தியசாலையில் சர்வதேச தாதியர்தினம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபர் , கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தாதியர் பட்டப்படிப்புத் துறையின் தலைவர் அருட்சகோதரி ஜோசவ்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 25 பேர் குளவி கொட்டி வைத்தியசாலையில்

பத்தனை,மே15

பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுனட் வேர்னன் தேயிலை தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் குளவித் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

குளவி தாக்குதலுக்குள்ளான சுமார் 25 பேர் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 7 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்றுக்கொள்வதுடன் ஏனையோர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களில் சிலர் அவசியம் ஏற்படுமிடத்து நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்படலாம் என்று கொட்டகலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

# பாடசாலை மாணவருக்கு பால்

நுவரெலியா,மே15

நுவரெலியா மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கு உணவாக பால் வழங்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்டச் செயலாளர் ஏ.டீ.ஜீ.குமாரசிறி தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கும் பொருட்டு அவர்களுக்கு பால் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை மாணவர்களுக்கு அவித்த முட்டையும் வழங்கப்படுவதாகத் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்புடன் இணைந்து மு.கா. போட்டியிடுவதே சிறந்தது

## உலமா கட்சித் தலைவர் வலியுறுத்து

மட்டக்களப்பு,மே15

கிழக்கு மாகாணசபை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஏனைய முஸ்லிம் கட்சிகளும் இணைந்து பொதுச் சின்னத்தில் போட்டியிடுவது அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவதே இன்றைய சூழலில் கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு நன்மையானது என்று உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-:

கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே சின்னத்தில் போட்டியிடுவதன் மூலம் கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவத்தையும் சக்தியையும் உலகறியச்செய்ய முடியும் என கூறினோம். ஆனால் இதனை ஏற்காத முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் ஏனைய முஸ்லிம் கட்சிகள் அரசுடனும் இணைந்து போட்டியிட்டன. நாமும் அரசுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டோம். பல மரண அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்தோம். இதன் காரணமாக மாகாண சபை உறுப்பினர்கள் நலன் பெற்றது தவிர வேறு எதையும் பெரிதாக கிழக்கில் எவராலும் சாதிக்க முடியவில்லை.

தற்போது அனைத்து முஸ்லிம் கட்சிகளும் அரசுடன் இணைந்துள்ளதால் அனைவரும் ஒன்றிணைந்து பெரும்பான்மை கட்சிகளை தவிர்த்து பொதுச் சின்னத்தில் போட்டியிடக்கூடிய நல்ல சூழல் உள்ளதை பயன்படுத்த முன் வரவேண்டும். அவ்வாறில்லாமல் உப்புச்சப்பற்ற ஒரு முதலமைச்சர் பதவிக்கோ அல்லது அமைச்சுப் பதவிக்கோ ஆசைப்பட்டு பெரும்பான்மை கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டால் இன்னும் பல காலத்துக்கு கிழக்கு முஸ்லிம்களும் முஸ்லிம் கட்சிகளும் அடிமைகளாக வாழ வேண்டி வரும். முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ஏனைய முஸ்லிம் கட்சியை சேர்ந்தவர்களும் கண்ணைத்திறந்து கொண்டே குழியில் விழுந்துள்ளோம் என தொடர்ந்தும் கூறவேண்டிய நிலை வரும்.

கிழக்குத் தேர்தலில் அனைத்து முஸ்லிம் கட்சிகளும் ஆளுங்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டாலும் இரண்டு அமைச் சுக்களே முஸ்லிம்களுக்குக்கிடைக்கும். அதேபோல் முதலமைச்சர் பதவி ஒரு முஸ்லிமுக்கு வழங்கப்பட் டால் ஒரே ஒரு முஸ்லிமுக்கே அமைச்சர் பதவி கிடைக்கும். இவ்விரண்டும் யாருக்கு என்பதில் மிகப் பெரிய போர் நடக்கும் சாத்தியக்கூறுகளே உள்ளன.

ஆகவே சமூகத்தின் பொது நலன் கருதி முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொதுச்சின்னத்தில் போட்டியிட முன் வர வேண்டும். அல்லது கிழக்கின் ஆட்சியை எப்படியாவது பிடிக்கத்தான் வேண்டும் என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவதே இன்றைய சூழலில் சிறந்ததாக இருக்கும். வேறு எந்த முடி வும் கிழக்கு மக்களுக்கு விமோசனத்தைத் தராது - என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** சற்று சோம்பல் நிலவியபோதும் சமாளித்துப் பணிகளைச் செய்து முடிப்பீர்கள். கல்வி, வேலை வாய்ப்பு வகையில் எதிர் பார்க்கும் தகவல்கள் கிடைக்கும். சில விடயங்களை பொறுமையோடும், பொறுப்போடும் செய்து முடிக்க வேண்டியிருக்கும். உறவினர்கள் உதவ முன்வருவர். தந்தை வழியில் மருத்துவச் செலவு உண்டு.

**இடபம்:** எந்தவொரு காரியத்திலும் எடுத்தோம், கவிழ்த்தோம் என்று உங்களின் செயற்பாடுகள் இருக்கும். சற்று யோசித்த செயற்பாடுகள் அதிருப்தியைத் தவிர்க்கும். பணம் வரும் என்ற நம்பிக்கையில் செலவுகளைத் தாராளமாக மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் கோபங்களுக்குக் குறைவிருக்காது.

**மிதுனம்:** மனதில் நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். பண வரவுகள் திருப்தி தரும். கடன்களில் ஒரு பகுதி அடைபடவும் செய்யும். உறவினர்கள், நண்பர்கள் வகையில் விருந்து, உபசரிப்புகள் உண்டு. குழந்தைகளுடன் சில விடயங்களில் மனக்கசப்பு ஏற்படலாம். மாலையில் உடல் ஆரோக்கியத்துக்காக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

**கடகம்:** சில முக்கிய பிரமுகர்கள் சந்திப்பால் காரியங்களை எளிதாகச்செய்து கொள்வீர்கள். கணவன், மனைவியரின் கருத்து வேறுபாடுகள் நீங்கும். உறவினர் ஒருவரின் செயற்பாடு அதிகம் யோசிக்க வைக்கும். அலுவலகப் பணிகளில் வழக்கத்துக்கு மாறாக சில செயற்பாடுகள் இருக்கும்.

**சிங்கம்:** மறதி, அசதி, தாமதம் என்று இருந்த போதும் அதையும் மீறிக் காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். எதிர்பார்க்கும் வெளிவட்டார உதவிகள் கிடைக்கக் கூடும். நண்பர்களின் பழக்க வழக்கங்களால் செலவுகள் கூடும். தொழில் மற்றும் வியாபாரத்தில் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்வீர்கள். புதிய ஒப்பந்தங்களுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** மரியாதை நிமித்தமாக சிலரின் சந்திப்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். சில பணிகளை மனதில் கொண்டு விரைவாகச் செயற்பட திட்டமிடுவீர்கள். ஓரளவுக்கு உங்களின் திட்டம் நிறைவேறும். பணி முடிந்தபோதும் பண வரவு சற்றுத் தாமதப்படும். குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக சில முன்னேற்பாடுகளை மேற்கொள்வீர்கள்.

## நாளை

வைகாசி 03 புதன்கிழமை 16.05.2012
திதி: ஏகாதசி மு.இ 10.31வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மரண பி.இ 03.21 வரை
சுபநேரம்: 04.23- 05.53 வரை
ராகு காலம்: 11.53- 01.23 வரை

**துலாம்:** உங்களின் வார்த்தைகளில் நகைச்சுவை அதிகரிக்கும். காரியங்களை உரிய நேரத்தில் செய்து முடிக்கத் திட்டமிட்டுச் செயற்படுவீர்கள். புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். உறவுகளால் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரின் நம்பிக்கையைப் பெறுவர்.

**விருச்சிகம்:** நீங்கள் விரும்பியோ, விரும்பாமலோ சில பொறுப்புகள் ஏற்படும். ஏற்றுக் கொண்ட பொறுப்புகளால் சிரமங்களை எதிர் கொள்ள நேரிடலாம். எதிலும் பொறுமையோடு செயற்படுங்கள். பேச்சுகளால் சில காரியங்களை எளிதாக முடிக்க வாய்ப்பு உண்டு. உறவினர் ஒருவரின் காரியம் பொருட்டு அலைச்சல் அதிகமாக இருக்கும்.

**தனுசு:** கவனக்குறைவான வார்த்தைகள், கண்மூடித்தனமான செலவுகள், அவசரப்பட்ட செயல்களால் அல்லற்பட நேரிடும்; கவனம். வீட்டிலும், வெளியிலும் வார்த்தைகளில் மென்மை கலந்து இருக்கட்டும். புதிய வேலை வாய்ப்புக்கான முயற்சி வெற்றி தரும். பயணங்கள் வெற்றி தரும்.

**மகரம்:** தெளிவாகத் திட்டமிட்டபோதும், என்னவோ சற்று தடுமாற்றத்துடனேயே செயற்படுவீர்கள். பல சிந்தனைகளை மனதில் போட்டு குழப்பிக் கொள்ளாமல், மனநிலையை ஒருநிலைப்படுத்தி செயற்படுங்கள். பண வரவுகள் பற்றாக்குறையாக இருந்தபோதும், தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமம் இருக்காது.

**கும்பம்:** உங்களின் யதார்த்தமான செயற்பாடுகள் பிறரால் பாராட்டப்படும். மனநிலையில் ஏற்படும் மாற்றம், சில பணிகளை விரைவாகச் செய்து முடிக்க முடியும். பணத்துக்காக அலைச்சல் இருக்கும். சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் செலவுகள் அதிகமாக ஏற்படும். நண்பர் ஒருவரின் உதவி மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

**மீனம்:** அடுத்தடுத்து பணிகள் இருந்த போதும், அதையெல்லாம் பொருள்படுத்தாமல் நண்பர் ஒருவரின் காரியத்திற்காக அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். கையில் உள்ள பணமும் கரையலாம். குடும்பம் சம்பந்தப்பட்ட பணிகளை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 9 | 8 | | | | 7 |
| 9 | | | | | 4 | 2 | | |
| | | 4 | | 6 | 2 | 9 | | |
| | 7 | | | | 9 | 6 | 4 | 5 |
| | 4 | | | 7 | | | 1 | |
| 6 | 2 | 5 | 8 | | | | 7 | |
| | | 7 | 5 | 2 | | 1 | | |
| | | 2 | 3 | | | | | 6 |
| 5 | | | | 1 | 8 | 7 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 6 | 3 | 1 | 8 | 2 | 9 | 7 |
| 8 | 9 | 3 | 2 | 6 | 7 | 1 | 5 | 4 |
| 7 | 2 | 1 | 5 | 9 | 4 | 6 | 8 | 3 |
| 9 | 1 | 5 | 4 | 8 | 6 | 3 | 7 | 2 |
| 6 | 8 | 7 | 1 | 2 | 3 | 9 | 4 | 5 |
| 3 | 4 | 2 | 7 | 5 | 9 | 8 | 6 | 1 |
| 2 | 7 | 9 | 6 | 4 | 1 | 5 | 3 | 8 |
| 1 | 3 | 8 | 9 | 7 | 5 | 4 | 2 | 6 |
| 5 | 6 | 4 | 8 | 3 | 2 | 7 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

இப்பொழுது வவுனியாவிலும்.....

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வவுனியா வாசகப் பெருமக்களே!

உங்கள் அபிமான தமிழ் நாளிதழ் உதயனின் பணிமனை இப்போது வவுனியாவிலும்

வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் அபிமானிகள் அனைவரினதும் நலன்நாடி





இல. 104, புதிய பஸ் நிலையக் கட்டடத்தில் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை கிளை அலுவலகம் இயங்குகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

உங்கள் திருப்தியே எங்கள் சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயிலில் மோதி முதியவர் சாவு

கொழும்பு,மே15

வெள்ளவத்தை - ஹாமர்ஸ் வீதியில் களுத்துறை தெற்கில் இருந்து மருதானை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரயில் பாதையில் நடந்து சென்று கொண்டிருந்த போதே நேற்றுமுன்தினம் மாலை இவர் ரயிலில் மோதுண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த மொஹமட் நிஸாம் மொஹமட் ரஸ்மி (வயது-64) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த நபரது சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)



அநுராதபுரம் மாவட்டதில் உள்ள கிராமங்களுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்தக் கிராம மக்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

## 11,800 மாணவருக்கு மஹாபொல

கொழும்பு,மே15

இந்த வருடத்துக்கான மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசிலை வழங்குவதற்கு மஹாபொல புலமைப் பரிசில் பொறுப்புச் சபை அனுமதி அளித்துள்ளது.

2010 - 2011 கல்வி ஆண்டுக்கு பல்கலைக்கழகம் செல்ல அனுமதி பெற்றுள்ள 10,300 மாணவர்கள் மற்றும் ஏனைய உயர் கல்விக்கு அனுமதி பெற்றுள்ள 1500 மாணவர்களுக்கும் மஹாபொல புலமைப் பரிசில் வழங்கப் படும் என்று நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலக ஆலோசனையின் படி ஆரம்பத்தில், உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், வணிகம், கலை உள்ளிட்ட துறைகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 25 மாணவர்களுக்கு மஹாபொல புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

ஏனைய மாணவர்களுக்கு மாவட்ட செயலாளர்கள் ஊடாக மஹாபொல புலமை பரிசில் வழங்கப்டும் என்று நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## ஆளும் கட்சியுடன் மட்டும் பேசி எந்தப் பயனுமில்லை

### கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் கலந்துகொள்ள அழைக்கிறார் பஸில்



கொழும்பு,மே15

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளோம். தற்போது ஆளும் கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பும் தனித்து பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு விவகாரம் மற்றும் ஆளும் கட்சிக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்களின் எதிர்காலம் என்பன குறித்து விவரிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வைக் காண்பதற்கு தனது அர்ப்பணிப்பை வெளிக் காட்டவேண்டும்.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்த செயற்பாடு தொடர்பில் இரண்டு கட்சிகள் பேச்சு நடத்தி தீர்வு காண்பது என்ற கோட்பாடு இனி ஏற்புடையதாக அமையாது. மாறாக அனைத்துக் கட்சிகளும் இணைந்து பேச்சு நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அரசு நியமித்துள்ள நிலையில் அதில் அங்கத்துவம் வகிப்பதே எதிர்க்கட்சிகள் தற்போது செய்ய வேண்டிய விடயமாகும்.

ஆளும் கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பும் ஏற்கனவே பல சுற்றுப் பேச்சுக்களை நடத்திவிட்டது. தீர்வு விடயம் குறித்த யோசனையும் முன்வைக்கப்பட்டது. எனவே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் விடயங்களை ஆராய்வதே அவசியமான விடயமாகும்.

அனைத்து முயற்சிகளின் ஊடாகவும் தீர்வை எட்டுவதற்கு தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்க வேண்டும். கூட்டமைப்பும் தீர்வு குறித்த தமது அர்ப்பணிப்பை வெளிக்காட்ட வேண்டும். மக்களிடம் வாக்குகளைப் பெற்றுள்ள அரசியல் கட்சி என்பதைக் கூட்டமைப்பு மறக்கக்கூடாது- என்றார். (ச)

## மனைவியை துப்பாக்கியால் சுட்ட கணவர்

கொழும்பு,மே15

கட்டுத்துவக்கின் மூலம் தனது மனைவி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட கணவர் கலேன் பந்துனுவெவ பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக கணவர் கோபமடைந்து மனைவி மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மனைவியின் கால் பகுதியில் துப்பாக்கிச் சூடுபட்டதில் அவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளார். (ச)

## காணாமற்போனோரின் விரத்தை உறவுகளுக்கு மட்டும் வெளியிடப்படுமாம்

கொழும்பு,மே15

போர் காலத்தில் காணாமற் போனவர்கள் மற்றும் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பான தகவல்களை வெளியிட இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. பாதுகாப்பு அமைச்சு இதற்கான தீர்மானத்தை நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பான தகவலை அவர்களது உறவினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் விவரங்கள் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய விவரங்களை அறியத்தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல கட்சிகளும் கோரிக்கை விடுத்திருந்தன.

போருக்குப் பின்னர் இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகள் பற்றிய விவரங்களும் வெளியிடப்பட வேண்டும் என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஒரு முக்கிய பரிந்துரையாகவும் தடுத்து வைக்கப்பட்டவர்களின் விவரங்களை அரசு வெளியிட வேண்டும் என்று இருந்துள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஹிலாரி கிளிண்டனைச் சந்திப்பதற்கு முன்னதாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 13ஆவது திருத்தத்தை உடன் இரத்துச் செய்க

### தொழில்சார் நிபுணர்கள் அமைப்பு கோருகிறது

கொழும்பு,மே15

இனப்பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பகிர்வை வலியுறுத்தும் வகையில் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை அடுத்துக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசு இரத்துச் செய்ய வேண்டும் என்று இலங் கையின் தொழில்சார் நிபுணர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை நாடாளுமன்றத்திற்கோ அல்லது இலங்கை மக்களுக்கோ தெரியாமல் இந்தியாவினால் வடி வமைக்கப்பட்டுள்ளது என்று இலங்கையின் தொழில்சார் நிபுணர்கள் அமைப்புகளின் கூட்டமைப்பின் தலைவர் திலின கிரிங்கொட தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை மீது திணிக்கப்பட்ட ஒன்று. அது இலங்கையில் பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது என்று என்று அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வானது இன ரீதியிலான அதிகாரப் பகிர்வு என்றும், ஒன்றுபட்ட இலங்கைக்கு அது பாதகமானது என்றும் அவர் கூறினார்.' (ச)

## 4 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு,மே15

பொலிஸ் தலைமையக அதிகாரிகள் மூவரும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவரும் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம்நேற்று திங்கட்கிழமை தெரிவித்துள்ளது. கடவத்த, உதுகம தலைமையகப் பொலிஸ் நிலையங்கள் மற்றும் களுத்துறை பொலிஸ் கல்லூரியைச் சேர்ந்த தலைமையக அதிகாரிகளே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலங்கை பொலிஸ் சேவையின் தேவை அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## தமிழ்க் குடும்பத்தைத் தடுத்து வைத்து கப்பம் கோரிய குழு மடக்கிப் பிடிப்பு

### கொட்டாஞ்சேனையில் பொலிஸார் அதிரடி

கொழும்பு,மே15

தாய், குழந்தை உட்பட குடும்ப அங்கத்தவர்கள் நால்வரை கொட்டாஞ்சேனை தங்குமிடம் ஒன்றில் தடுத்துவைத்து அவர்களிடம் 40 லட்சம் ரூபா கப்பம் பெற முயற்சித்த குழுவின் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவால் தடுத்து வைக்கப்பட்டிருந்த தாயையும் அவரது குழந்தைகள் மற்றும் உறவினர்களையும் கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

28 வயதுடைய தமிழ்த் தாய், அவருடைய 4 வயது குழந்தை, 8 வயது சகோதரர் மற்றும் அவரது மாமி முறையானவர் ஆகியோரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒருவரை கைதுசெய்ய கொட்டாஞ்சேனை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தக் குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த ஜனவரி மாதமே கொழும்புக்கு வருகைதந்து வசித்து வருகின்றனர்.

இந்தக் குடும்பத்தினரை பிரிட்டனுக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் அதற்கு 50 லட்சம் ரூபா செலவாகும் என்றும் கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த கைது செய்யப்பட்ட நபர் தெரிவித்துள்ளார். எனினும், போலி ஆவணங்களில் வெளிநாடு செல்ல தங்களுக்கு விருப்பம் இல்லை என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனால் கோபமடைந்த சந்தேகநபர் உள்ளிட்ட குழு குடும்பத்தினரை தங்குமிடத்தில் தடுத்து வைத்து 40 லட்சம் ரூபா கப்பம் கோரியுள்ளது. இரண்டு நாள்களுக்கு முன்னர் இந்தக் குடும்பம் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் அந்தக் குடும்பத்தின் ஒரு அங்கத்தவர் தப்பிச் சென்றுள்ளார். யாழ்ப்பாணத்திற்குச் சென்ற இவர் தனது குடும்பம் கொட்டாஞ்சேனையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். யாழ்.பொலிஸார் அவர்கள் இதுகுறித்து கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து உடன் செயற்பட்ட கொட்டாஞ்சேனை பொலிஸார் தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பத்தை மீட்டனர். இதன்போது அங்கிருந்த நபரையும் கைதுசெய்துள்ளனர். குறித்த குடும்பம் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அதற்குப் பாதுகாப்பு வழங்கிய இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

கொழும்பு வடக்கு வலயத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி பாலித சிறிவர்த்தனவின் ஆலோசனையின்படி கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சேனக ரத்வத்தையின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பாளர் கோசல நவரத்ன உள்ளிட்டோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழுந்து விற்பனைக்கு

தரமான உழுந்து மொத்தமாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 515 1761

## வேலையாள்கள் தேவை

வீடியோ எடிற்றிங், போட்டோ சொப் தெரிந்தவர்கள் தேவை. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: விஷ்ரா வீடியோ விசன்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். தொ.பே. 077 747 4498

## Vehicles for hire (Jaffna peninsula only)



Nissan car, 30 Seater Bus,
Prado Jeep, 12 Seater Van
Tilko Jaffna City Hotels (Pvt) Limited
#70/6 K.K.S Road, Jaffna.
Tel 021 2225969,
Mobile 0771064385, Fax 021 2227291

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## கடை வாடகைக்கு

A9வீதியில்
யாழ்.கச்சேரிக்கு
அருகில்
தளபாடங்களுடன்
கடை வாடகைக்கு
உண்டு

தொடர்பு:
077 6272190
021 2211006


*வாழ் நாள் சாதனையாளரும் எமது பீடாதிபதியுமான*

## பேராசிரியர் தி. வேல்நம்பி

*அவர்கள் நீடுழி வாழ்க.....*



கல்வியால் பாரில் உயர்ந்து
கலையால் புகழ் கடல் கடந்து
கரைதொட முடியாத எம் ஆசான்
புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பல்கலையில்
வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றார்.....
உயர்ந்த நற்பண்பும் உயரிய சிந்தனையும்
ஒருமித்த கருத்தும் கண்தூங்காப் பணியும்
அன்பான முகாமையும் அடக்கமான வழிநடத்தலும்
அவர்முகம் காண படம் தேவையில்லை அவனியே அறியும்
அவரை - மனிதருள் மாணிக்கம் எம் ஆசான்
சாதனையின் சிகரம் எமது ஆசான்
எமது பீடத்துக்கும் பல்கலைக்கழகத்துக்கும் அன்றி
இனத்துக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்து
ஊரும் உலகும் அறிந்த இவரை மேலும்பல
சாதனை புரிய வாழ்த்தி நிற்கிறோம் பணிவுடன்....

வாழ்த்தும்:
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர்களும்,
ஒன்றியமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


SEDCO

### உப கூலி ஒப்பந்தகாரரை பதிவுசெய்தல்

எமது நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும்.

கட்டுமான வேலைகளை மேற்கொள்வதற்கு கீழ்க்குறிப்பிடும் வேலைகளுக்குரிய உப கூலி ஒப்பந்தகாரர்கள் தேவையாக உள்ளது. விரும்பியவர்கள் எமது காரியாலயங்களில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அவற்றினைப் பூரணப்படுத்தி 2012.05.25 ஆம் திகதிக்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

வேலைவிபரம் வருமாறு
மேசன் வேலை, தச்சுவேலை, வெல்டிங்வேலை, பெயின்ரிங்வேலை, எலற்றிக்கல் பிளமிங்வேலை, அலுமினியம் பொருத்துதல்.

Sewa Economic Development Company

தலைமை அலுவலகம்
இல. 52, பலாலி வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்,
தொலைபேசி இல.021 222 8754

உப அலுவலகம்
432/A, 2 ஆவது மாடி, கொழும்புறோட்,
பொறலஸ்கமுவ, தொலைபேசி இல. 011 2545362


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை யோகநாதன்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகநாதன் (இளைப் பாறிய உப அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி) நேற்றுமுன்தினம் (13.05.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## காலத்தால் அழியாத ஆறு ஆண்டுகள்



நெஞ்சம் மகிழ
02.01.1987

நெஞ்சம் நெகிழ
15.05.2006

### செல்வி மாணிக்கம் லாவண்யா (யசோ)

(உயர்தர மாணவி)



ஆறாண்டுகள் கழிந்தனவே
ஆறவில்லையே எம் துயரம்
காலங்கள் கழிந்தனவே
கண்ணீர் தான் வற்றவில்லை
எம் ஆன்மா துடிதுடிக்கும் இந்நாள்
ஏன் வந்ததோ
கடைக்குட்டியே ஏன் சென்றாய்
கலங்கியே தவிக்கின்றோம் - நாம்

உன் நினைவுகளோடு:
குடும்பத்தினர்.

"லாவண்யம்"
614/3, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


## தங்கப் பவுணுக்கு அதிகூடிய பணம் தரும் வங்கி

24 கரட்
ரூ. 48,500/-

22 கரட்
ரூ. 44,500/-



NDB
பின்னம
அடகுச் சேவை

ரூ. 50,000/- அல்லது அதற்கு மேற்பட்ட சகல அடகுக் கொடுக்கல் வாங்கல்களுக்கும்* சுடுநீர் போத்தல் ஒன்று இலவசம்



இச்சலுகையை பின்வரும் NDB கிளைகளில் பெறமுடியும்

| | | | |
|---|---|---|---|
| அம்பலன்கொட | ஜா-எல | குலியாப்பிட்டிய | புத்தளம் |
| அம்பலன்தொட்ட | யாழ்ப்பாணம் | மாலபே | இரத்தினபுர |
| அம்பாறை | கல்முனை | மாத்தளை | திருகோணமலை |
| பதுளை | களுத்துறை | மாத்தறை | வவுனியா |
| பண்டாரவளை | கந்தான | மதுகம | வத்தளை |
| மட்டக்களப்பு | கண்டி | நீர்கொழும்பு | வென்னப்புவ |
| சிலாபம் | கேகாலை | நிட்டம்புவ | வாரியபொல |
| காலி | கொள்ளுப்பிட்டி | பிலிமதலாவ | அளுத்கம |
| ஹொரண | கொட்டாஞ்சேனை | பிலியந்தலை | எம்பிலிப்பிட்டிய |

அழையுங்கள் 011 2 44 88 88

இச்சலுகை 2012 மே 02 முதல் ஜுலை 02 வரை மட்டுமே

• நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
• இருப்பு உள்ளவரை மட்டுமே.

நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

PHOENIX O&M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐந்து மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## பயிற்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 15

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் இணைந்த கணித மாணவர்களுக்கான மூன்றாவது பயிற்சிப் பரீட்சை நாளை புதன் கிழமையும் வியாழக்கிழமையும் காலை 8.30 மணிக்கு வடமாகாணப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது. (ம-14)

# 'எனது உலகு' தொனிப்பொருளில் சிறுவர் புகைப்படக் கண்காட்சி

'எனது உலகு' என்னும் தொனிப்பொருளிலான சிறுவர்களின் புகைப்படக் கண்காட்சி இன்று நாளை, நாளை மறுதினம் ஆகிய மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்திலும் நாளையும் நாளை மறுதினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5மணிவரை யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற் றும் பயிற்சி நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

நாட்டில் கடந்த காலம் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் 1999ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த மறவன்புலோ மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து கடந்த ஆண்டு ஆவணி மாதம் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இந்தப் பிர தேசத்திலுள்ள சிறுவர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் தரம் 3-5 வரையான மறவன் புலோ சகலகலாவல்லி வித்தி யாலய மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடக வளங்கள்மற்றும் பயிற்சி மைய மாணவர்கள்பயிற்சிப்பட்டறையொன்றை மேற்கொண்டிருந்தனர்.



இதில் ஆர்வத்துடன் பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் புகைப்படங்கள் அவர்களால் எடுக்கப் பட்டு அந்தப் புகைப்படங்களில் அவர்களின் எதிர்பார்ப் புக்கள் மற்றும் எண்ணங்கள் வரை கலை செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரியரட்ணம், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய அதிபர் வை. ஜெயக்காந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-120)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே15

கைதடி ஸ்ரீ கற்பக விநா யகர் ஆலயத்தின் பெருந் திரு விழா கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற் றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (வ-14)

# நுளம்பு ஒழிப்பு சட்ட ஏற்பாடுகளை கடுமையாக நடைமுறைப்படுத்துக

### சுகாதார அமைச்சர் பணிப்பு

கொழும்பு, மே 15

நுளம்பு ஒழிப்புச் சட்ட ஏற்பாடுகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன் தினம் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் நேற்று 14 ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்த வாரத்தையொட்டி விடுத்த செய்தியின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முப்படை மற்றும் பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்புடன் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் நேற்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையும் நாடெங்கிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தின் பிரதான வைபவம் கொழும்பு, கிராண்ட்பாஸிலுள்ள பௌஸி தாய், சேய்நல மத்திய நிலைய வளாகத்தில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

அதில் நுளம்பு ஒழிப்பு தேசிய வாரம் தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதாவது:-

ஏப்ரல் மாதம் முதல் நாட்டில் மீண்டும் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதனை நுளம்புக் குடம்பிகள் தொடர்பான நிபுணர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்தோடு டெங்கு நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் டெங்குப் பாதிப்பிலிருந்து மக்களை விடுவிப்பதற்காகவே தேசிய நுளம்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நுளம்பு பெருகக் கூடிய சூழல் ஏதாவது நிறுவனத்திலோ, வீட்டிலோ காணப்படுமாயின் அதற்கு அந்த நிறுவனத்தினதோ, வீட்டினதோ உரிமையாளரே பொறுப்புக்குக் கூற வேண்டியவராவார். நுளம்பு ஒழிப்பு சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்தச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்படுபவர் ஐம்பதாயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்த வேண்டும். அத்துடன் ஆறு மாதங்கள்சிறைத்தண்டனை யையும் அனுபவிக்க நேரிடும். அதே நேரம் ஆஸ்பத்திரி வளாகத்தில் நுளம்பு பெருகக் கூடிய சூழல் காணப்படுமாயின் அதற்குரிய முழுப் பொறுப்பையும் ஆஸ்பத்திரிப் பணிப்பாளரே ஏற்க வேண்டியவராவார். பாடசாலைகள் நுளம்புகள் பெருகக் கூடிய வகையில் காணப்படுமாயின் அதற்கு அதிபர்களே பொறுப்பானவர்கள்.

ஆகவே தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தில் மாத்திரமல்லாமல் ஏனைய நாள்களிலும் சுற்றாடலை துப்புரவு செய்து நுளம்பு பெருக முடியாதபடி சுத்த மாக வைத்துக் கொள்ளுவதில் ஒவ் வொருவரும் விசேட கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (ந)

## 3 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

செல்வன் ஜசிந்தன்

HAPPY BIRTH DAY



யோகேஸ்வரன் - பகீரதி தம்பதியரின் தவப்புதல்வன் செல்வன் ஜசிந்தன் தனது 3ஆவது பிறந்த தினத்தை இன்று (15.05.2012) செவ்வாய்க்கிழமை தனது அப்பப்பாவின் இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, சித்தப்பாமார், மாமிமார், பாட்டி ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

கட்டுக்கொம்பரை, அல்வாய் கிழக்கு, அல்வாய்.
T.P : 021 2263048

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மே15

மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தினால் தொழில் நுட்ப தேசிய சான்றிதழ் முச்சக்கரவண்டி திருத்துனர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், வெளிஇணைப்பு இயந்திரம் திருத்துநர் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் உயர்தரக் கல்வியை தொடரமுடியாத மாணவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக இல. 375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குவிண்ணப்பங்களைஅனுப்பிவைக்கலாம். (வ-14)

IELTS
Knowledge Universe Sri Lanka
http://edu.kugroup.info/ielts
June/30th -Exam in Jaffna
KU's IELTS hotline : 0777302882
புதிய தனிப்பட்ட வகுப்புகள் ஆரம்பம்
Authorized IELTS registration & Training Centre
K.U Educaiton,No 75,Temple Road,Jaffna

## அறிவித்தல்

### ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தானம்

சங்கத்தானை சாவகச்சேரி

எமது நிர்வாக சபையின் 01.04.2012 ஆம் திகதியில் நடந்த நிர்வாக சபையின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என இத்தால் சகலருக்கும் அறிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி, சங்கத்தானை ஸ்ரீமீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தின் "ஆலய வரலாறு, ஆலய முன்னேற்றம், வேறு விடயங்கள் பற்றி அறிவித்தல் பிரசுரங்கள் வெளியிடுவதற்கு நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறப்படவேண்டும்."

செ. புவிபாலசிங்கம் — தலைவர்
பொ. உ ருத்திரன் — செயலாளர்

## காணி விற்பனைக்கு

மன்னார் கீரி ஐஸ் பக்ரரிக்கு அருகில் 125 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு. கடைகளும் கட்டலாம்
தொடர்புக்கு: 0755732271

## வாகனம் விற்பனைக்கு

"TATA SINGLE CAB" 207 DI Diesel Red Colour நல்ல நிலையில் உள்ள வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
0778350478, 0779050213

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர்-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 16.05.2012 விநியோகிக்கப்படும். விலை - 80/=
[illegible] நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

## முதியோர் இல்லம்

யாழில் முதியோர் இல்லம்
நோயாளர்
பராமரிக்கப்படுகின்றனர்.
Home Nursing சேவை
உண்டு.
தொடர்புகளுக்கு:- 0777126859,
0718234691

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிமோவின் புதுவருட சீட்டிழுப்பின் வெற்றியாளர்களுக்கு பென்ஸ் கார்கள்




டிமோவின் புதுவருட சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற வாடிக்கையாளர்கள் மெர்சிடிஸ்-பென்ஸ் புதிய ரகங்களான C- Class, E- Class, E-Coupe, E- Cabriolet, CLS-Class முதலிய வாகனங்களை டீமோவிடமிருந்து அண்மையில் பெற்றுக் கொண்டனர்.

2012 மார்ச் 1 - ஏப்ரல் 4 வரையான காலப்பகுதியில் டீமோவிடமிருந்து புத்தம் புதிய மெர்சிடிஸ் வாகனங்களைக் கொள்வனவுசெய்த வாடிக்கையாளர்களுக்கு இச்சீட்டிழுப்பில் பங்கு கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிட்டியது.

அதிக பெறுமதிவாய்ந்த ரகத்தைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களுக்கு வெற்றிவாய்ப்பும் அதிகமாயிருந்தது. இந்தப் போட்டியின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உரிய அரச நிறுவனங்களுடன் வேண்டிய பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ரஞ்சித் பண்டிதகே, "மூன்று பேர் மட்டுமே உங்களில் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டாலும், நீங்கள் அனைவரும் வெற்றி பெற்றவர்கள் என்றே நாம் கருதுகின்றோம். ஏனெனில், மெர்சிடிஸ்-பென்ஸ் கார் ரகங்களை உத்தியோகபூர்வ முகவரிடமிருந்து இறக்குமதி வரி அதிகரிக்கப்படுவதற்கு முன்னதாக நீங்கள் கொள்வனவு செய்துள்ளீர்கள்" என்றார்.

உலகின் மிகச்சிறந்த முன்னணி மோட்டார் கார் தயாரிப்பு நிறுவனமான மெர்சிடிஸ்-பென்ஸ், பெறுமதிவாய்ந்த ஐரோப்பிய வியாபார நாமமாகும்.

தனது தயாரிப்புகளில் தொடர்ச்சியாக புதுநுட்பங்களையும், முன்னேற்றங்களையும் அறிமுகப்படுத்தி வருகின்றது. பிராந்தியத்தில் நீண்டகால அனுபவம் கொண்ட உத்தியோகபூர்வ விநியோகஸ்தராக டீமோ நிறுவனம் விளங்குகின்றது.

# முகேஷ் அம்பானியின் மாத சம்பளம் 24 கோடி ரூபா



ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானியின் மாத சம்பளம் சுமார் 4 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது ரூ.24 கோடியை (இந்திய ரூபா) எட்டி உள்ளது. 2008-09ஆம் நிதியாண்டில் இருந்து தற்போது வரை முகேஷின் சம்பளம் ரூ.15 கோடியாகவே இருந்து வந்தது. 2012 மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டில் அவரது மாத சம்பளம் ரூ.23.82 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

பங்குதாரர்களின் ஒப்புதலுக்குப்பிறகு இந்த ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. ரூ.38.75 கோடி சம்பளம் வழங்க 2010-11ஆம் நிதியாண்டிலேயே பங்குதாரர்கள் ஒப்புதல் தெரிவித்திருந்தும், அவரது சம்பளம் ரூ.15 கோடியிலேயே இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (த)

# கொமர்ஷல் வங்கியின் புதிய அதிகாரிகள்

இலங்கையின் தலைசிறந்த தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி முகாமைத்துவப் பணிப்பாளராகவும், பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் ரவி டயஸூம், பிரதம செயற்பாட்டு அதிகாரியாகவும் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் ஜெகன் துரைரட்ணமும் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.





ரவி டயஸ் வங்கித் துறையில் நீண்ட கால தொழிற்சார் அனுபவம் கொண்டவர். இவற்றுள் 17 வருடங்கள் கூட்டாண்மை முகாத்துவ உறுப்பினராக இருந்துள்ளார். பெப்ரவரி 2008 முதல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார். 2012 பெப்ரவரி 27 முதல் வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவர் ஒரு சட்டத்துறை (LLB) பட்டதாரி. பட்டய வங்கியாளர். (லண்டன்) நிறுவனத்தின் முழுநேர உறுப்பினர். அத்தோடு வதியூபட் ஏச் ஹம்பரி முழுநேர உறுப்பினருமாவார். இவர் 2010 டிசெம்பரில் கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். 2008 முதல் 2011 வரையான காலப் பகுதியில் இலங்கை வர்த்தக சபையில் இலங்கை வங்கியாளர் அமைப்பின் பிரதி நிதியாக இருசந்துள்ளார். 2011 ஜூலை முதல் இலங்கை வர்த்தக சபையின் பொது நலன் குழுவில் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் 1982 இல் வங்கியில் இணைந்து கொண்டவர். வங்கித் துறையில் சர்வதேச வர்த்தகம், கடன் செயற்பாடுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என எல்லாத் துறைகளிலும் அனுபவம் கொண்டவர்.

கடந்த ஏழாண்டு காலமாக வங்கியின் கூட்டாண்மை முகாமைத்துவக் குழுவில் அங்கம் வகிக்கின்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான இவர் கொமர்ஷல் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர்- சர்வதேசப் பிரிவு மற்றும் இறக்குமதிப் பிரிவுகள் பொறுப்பதிசிரேஷ்ட முகாமைத்துவப் பொறுப்புக்களில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். (த)

# 10 ஆம் ஆண்டில் செலான் வங்கி யாழ்.கிளை

செலான் வங்கியானது தனது சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் 2002 இல் யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்து வைத்தது. யாழ் மக்களுக்கான தனது சேவையை ஆரம்பித்து இன்றுடன் 10 ஆண்டுகளை நிறைவு செய்கின்றது.

முதன் முதலில் யாழ்ப்பாண மக்களுக்கான தனது சேவையாக ஏ.ரி.எம் எனப்படும் தானியங்கி இயந்திரத்தை முதன்முதலில் யாழ்.மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்த பெருமை செலோன் வங்கிக்கு உரியது. மக்களின் தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யும் நிறுவமாக விளங்கியது.

செலான் வங்கியின் கீழ் இரண்டு பிரதான விரிவாக்கல் கிளை நிறுவனங்கள் சங்கானை மற்றும் மானிப்பாய் பிரதேசங்களில் தனது வங்கிச் சேவையைப் இப்பிரதேச மக்களுக்கு வழங்குவதுடன் மக்களின் நண்பனாக இருப்பது குறித்தும் பெருமையடைகிறது.

அதுமட்டுமன்றி இக்காலப் பகுதியில் யாழ்பபாண மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு குறிபாக கடன் வசதிகள், குத்தகை வசதிகளை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தையும் பிரதேசத்தின் முன்னேற்றத்தையும் செலான் வங்கி தக்கவைத்துள்ளது.

எதிர்காலத்திலும் யாழ்.மக்களுக்கு தனது சிறந்த சிறந்த சேவையை ஆற்றுவதற்கும் உறுதுணையாக அமையும். (த)

# மலிபனுக்கு சுகாதார விருது



சிறந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான சான்றிதழை இலங்கையின் பிஸ்கட் தயாரிப்பு நிறுவனமான மலிபன் பிஸ்கட் உற்பத்தி நிறுவனம் பெற்றுள்ளது. ஙீஏகுஅகு 18001:2007 சான்றிதழை இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் (Sri Lanka Standards Institution .ÐLSI ) பணிப்பாளர் நாயகம் கலாநிதி லலித் சேனவீர வழங்கினார்.

மலிபன் தலைவர் ரத்னபால சமரவீர, தமது ஊழியர்களின் ஆரோக்கியத்திலும் பாதுகாப்பிலும் மலிபன் எடுத்துக்கொண்ட அக்கறையையும் ஈடுபாட்டையும் உறுதிப்படுத்தும் சிறந்த நடைமுறைகளுக்காகத் தமக்கு இந்த OHSAS சான்றிதழ் கிடைத்த தாகக் குறிப்பிட்டார்.

இந்த நடைமுறை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து தொழில் நிலையத்தில் விபத்துகளும் மற்றும் ஆரோக்கியக் குறைபாடுகளும் குறைந்துள்ளதுடன், இந்த மாற்றம் ஊழியர்களின் மனநிலையிலும் சிறந்த முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவால் கடந்த நிதியாண்டில் நிறுவனத்தின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் 10 சதவீதத்தால் அதிகரித்தது எனக் கூறினார்.

மலிபன் பிஸ்கட் நிறுவனத்தின்நிறைவேற்றுப்பணிப்பாளர் டி.எல்.வீரசூரிய கூறுகையில், "எமது நிறுவனத்தின் மிகப்பெரும் சொத்தாக நாம் ஊழியர்களையே கருதுகின்றோம். சிறந்த சுகாதார நடைமுறைகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் உள்ள இடத்தில் மகிழ்ச் சியாகத் தமது பணியை எமது ஊழியர்கள் தொடரமுடியும் என்பதை இந்த OHSAS சான்றிதழ் அங்கீகரித்துள்ளது. இதுமட்டுமின்றி, மலிபன் சர்வதேச நியமனங்களுக்கேற்ப செயற்படுகின்றது என்ற செய்தியை எமது உள்ளூர் மற்றும் சர்வதேச வியாபாரப்பங்காளர்களுக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கும் எடுத்துச் செல்கின்றது " என்றார்.

மலிபனின் மனித வள மற்றும் நிர்வாக செயற்பாடுகளின் பொதுமுகாமையாளர் பந்துல பெரேரா 'OHSAS சான்றிதழ் எமக்குக் கிடைத்ததையிட்டு ஊழியர்களும் நிர்வாகத்தினரும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம். ஏம்முடைய ஊழியர்கள் மிகச்சிறந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் நிறைந்த இடத்தில் பணிபுரிகின்றார்கள் என்பதை இது உறுதிப்படுத்துகின்றது" - என்றார்.

# தம்புத்தேகமவில் கொமர்ஷல் வங்கியின் கருத்தரங்கு




சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர் பிரிவிலும், நுண் தொழில்முயற்சிப் பிரிவிலும் பணியாற்றும் தொழில்முயற்சியாளர்களுக்குத் தம்புத்தேகமவில் கொமர்ஷல் வங்கி அண்மையில் கருத்தரங்கொன்றை நடத்தியது.

மத்திய வங்கியின் பிராந்திய அலுவலக அதிகாரிகள், கொமர்ஷல் வங்கியின் வட மத்திய பிராந்திய பிரதிநிதிகள் மற்றும் சுமார் 60 தொழில் முயற்சியாளர்களும் இதில் பங்கேற்றனர்.

'கொமர்ஷல் மற்றும் மத்திய வங்கிகளின் கடன் அபிவிருத்திப் பிரிவு அதிகாரிகள் இங்கு விரிவுரைகளை நடத்தினர்.

வங்கிச் சேவைகள், சேமிப்பு, கடன் முகாமைத்துவம் என்பன பற்றியதாக இந்த விரிவுரைகள் அமைந்திருந்தன.

நாட்டின் பல பாகங்களிலும் நிதியியல் தொடர்பான அறிவை மேம்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களிலும் இது போன்ற செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் மத்தியில் நிதியியல் தொடர்பான கற்கைகளை மேம்படுத்துவதில் மத்திய வங்கியுடன் கை கோர்த்துள்ள முதலாவது தனியார் வங்கியாக கொமர்ஷல் வங்கி காணப்படுகிறது. (த)



இலங்கை வங்கி, கோப்பாய் கிளையில் 18 பிளஸ் கணக்கை பேணி வந்த வாடிக்கையாளர் ஒருவருக்கு திருமணப் பரிசாகத் தங்க நாணயம் ஒன்றைக் கிளை முகாமையாளர் மு.தனபாலன் வழங்குகிறார். அருகில் வங்கி உத்தியோகத்தர்கள். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் தடுப்பை முன்னிட்டு குறும்மேடை ஆக்கத் தொடர்

## மாணவர், ஆசிரியர் இடையே நடத்த ஏற்பாடு

வவுனியா,மே 15

போதைப்பொருள்தடுப்பை மையமாகக் கொண்டு அகில இலங்கை ரீதியில் குறும் மேடை ஆக்கப்போட்டித் தொடர் ஒன்று பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு இடையில் நடத்தப்படவுள்ளது.

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் ''போதைக்கு முற்றுப்புள்ளி'' எனும் திட்டத்துக்கு அமைய இந்த வருடம் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மூலம் போதைத் தவிர்ப்பு ஆக்கப் போட்டி அகில இலங்கை ரீதியாக நடத்தப்படவுள்ளது.

பாடசாலை மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கிடையில் இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையில் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் கனிஷ்ட பிரிவு (தரம் 6- தரம் 9 வரையான மாணவ மாணவிகள்) சிரேஷ்ட பிரிவு (தரம் 10 முதல் 13 வரையான மாணவ மாணவிகள்) என இரு பிரிவுகளாக போட்டி இடம்பெறவுள்ளது.

போதைப்பொருள், புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பயன்பாட்டின் உரிய பயன்கள், பல்தேசியக் கம்பனிகளின் வர்த்தக பிரசார வியூகங்கள்,போதைப் பொருள் பயன்பாட்டின் உண்மை நிலைமைகள், புகைத்தல், போதை மற்றும் போதைப்பொருள்பயன்படுத்தாதவர்கள் மற்றும் சமூக முன்னேற்றத்துக்காக ஏற்படக் கூடிய விளைவுகள் ஆகிய தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் குறும் மேடை நாடகம்தயாரிக்கப்படவேண்டும்.

இதில்பங்குபற்றி மாகாண, தேசிய மட்டங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு ரொக்கப் பணம், நினைவுப் படிவம் மற்றும்சான்றிதழ்கள்என்பவும் வழங்கப்படும். அத்துடன்சிறந்த நடிகன், சிறந்த நடிகை, சிறந்த திரையாக்கம் சிறந்த கதை யாக்கம் ஆகியனதெரிவு செய்யப்பட்டு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றவிரும்பும்வவுனியா தெற்குவலய ஆசிரிய, மாணவ மாணவியர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக கல்விப் பணிப்பாளர், பாட இணை வழிகாட்டல் ஆலோசனை மற்றும் சமாதானக் கல்விக் கிளை, கல்வி அமைச்சு, இசுறுபாய பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெற்குவலய கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா கேட்டுள்ளார். (ம-400)

### மலேரியா நோய் குறித்த விளக்கமளிப்பு

குருநகர், மே15

மலேரியா தினத்தையொட்டி குருநகர் பகுதியில் யாழ். மாநகர சபையால் மலேரியா தொடர்பான விளக்கங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. குருநகர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற மேற்படி விளக்கக் கலந்துரையாடல் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஞானசோதி தலைமையில் நடைபெற்றது. குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜோ. ராஜா மலேரியா தொடர்பான விழிப்புணர்வு உரையை நிகழ்த்தினார். (வ-51)



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழாவில் சுவாமி தேரில் வலம் வருகிறார்.(ம-17)

### பனை தென்னை அபிவிருத்தி சங்க 40 ஆவது நிறைவை முன்னிட்டு நூல் வெளியீடு

தென்மராட்சி, மே 15

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ''40 ஆண்டுகளில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்'' எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் 19 சங்கங்களின் 40 ஆவது வருட சேவைகள் தொடர்பான விவரங்களை உள்ளடங்கியதாக இந்த நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. (வ-16-9)

# சுழல் காற்றினால் முறிந்தன வாழைகள்

யாழ்ப்பாணம், மே 15

கடந்த வாரம் திடீரென வீசிய சுழல் காற்றினால் குடாநாட்டு வாழைத் தோட்டங்களில் வாழை மரங்கள் முறிந்து விழுந்தன. குலைகளுடன் நின்ற வாழைகளே காற்றினால் முறிந்து விழுந்து சேதமடைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக உரும்பிராய், நீர்வேலி, கோப்பாய், அச்சுவேலி ஆகிய பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களில் இருந்த வாழை மரங்களே பெருமளவில் குலைகளுடன் முறிந்து விழுந்ததாகவும் இதனால் தமக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

பயன்தரக்கூடிய நிலையில் இருந்த வாழைகளே பெருமளவில் முறிந்து சேதமுற்றதாகக் கூறப்படு கின்றது.

காற்றினால் முறிந்து விழுந்த வாழைக்குலைகள் தற்போது சந்தைகளுக்கு அதிக அள்வில் எடுத்து வரப்படுவதால் வாழைப் பழத்தின்விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கதலிப் பழம் ஒரு கிலோ 10 ரூபாவாகவும் இதரைப் பழம் ஒரு கிலோ 20 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (த-17)

## பச்சிலைப்பள்ளியில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மே 15

பொதுமக்களுக்கான நடமாடும் சேவை நாளை மறுதினம் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பன பச்சிலைப்பள்ளிப் பிரதேச சேவையில் கொழும்பிலிருந்து ஆள்பதிவு திணைக்கள மற்றும் பதிவாளர் திணைக்களத்திலிருந்தும் அதிகாரிகள் வருகை தரவுள்ளனர்.

எனவே பொதுமக்கள் பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டைகள், தொலைந்த அடையாள அட்டைகள், பொலிஸ் அறிக்கை ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் காலங்கடந்த பிறப்புக்களைப் பதிவு செய்தல் போன்ற சேவைகளை பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ங-16)

## வீதி திருத்தம்

அளவெட்டி,மே15

சுன்னாகம் கந்தரோடை வீதியில் மாகியப்பிட்டி சந்தி வரையான பகுதி தார்க் கலவை மூலம் திருத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் காணப்பட்ட பெரியளவான குழிகளும் மூடப்பட்டு போக்குவரத்துக்கு உகந்த வகையில் திருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-36)

# வடமராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

யாழ்ப்பாணம், மே15

டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் வடமராட்சி பருத்தித்துறை சுகாதார பரிசோதகர் பகுதிகளில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்துக்கு அமைவாக சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அலுவலர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து வீடு வீடாகச் சென்று பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், டெங்கு நுளம்பு பெருகும் சூழலைக் கொண்டிருக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராககுற்றப்பணமும்அறவிடப்பட்டு வருகின்றன. அத்துடன் கைவிடப்பட்ட காணிகள், மற்றும் பொது இடங்களை துப்புரவு செய்யுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்படுகின்றன. இந்தச் செயற்றிட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நடைபெறும்.

# விடுதிகளில் தங்கியிருப்போர் விவரங்கள் பார்வைக்கு

## சாவகச்சேரி வைத்தியசாலையில் நடைமுறைக்கு வந்தது

தென்மராட்சி, மே 15

இலங்கை வைத்தியசாலை வரலாற்றில் முதன் முறையாக விடுதிகளில் தங்கியிருப்போரின் பெயர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இந்த நடைமுறை முதல் தடவையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் வழிகாட்டலில் தூர இடங்களிலிருந்து வரும் பார்வையாளர்களின் நலன்கருதி விடுதியில் தங்கியுள்ளோரின் பெயர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களின் பெயர்களும் தனியாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு விடுதியில் உள்ளவர்களின் பெயர்கள் வெளிநோயாளர் பிரிவில் காட்சிப் படுத்தப்படுவது தமக்கு அலைச்சலை ஏற்படுத்தாது என்று பார்வையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (ம-9)

### ஓமந்தை முதல் தெல்லிப்பழை வரையான

# ரயில் நிலையங்களின் திருத்தப் பணிகள் துரிதம்

வட பகுதியில் உள்ள ரயில் நிலையங்களை விரைவில் புனரமைப்புச் செய்வதற்கு மத்திய ரயில்வேத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஓமந்தையில் இருந்து தெல்லிப்பழைவரையுமாக உள்ள சிறிய ரயில் நிலையங்களை ரயில்வேத் திணைக்களத்தின் உதவியுடன் புனரமைப்பு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். ரயில் நிலையம் இலங்கை வங்கியின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் நாவற்குழி ரயில் நிலையமும் சாலை வசதியுடனும் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த ரயில் நிலையத்தில் இருந்து வெளியிடங்களுக்கான உணவுப் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளது.

நாவற்குழியில் அரச உணவு களஞ்சியம் மற்றும் கடலுணவு பதப்படுத்தும் உற்பத்தி நிலையம் போன்றவை உள்ளன. இதனை அடுத்து இந்த ரயில் நிலையம் உணவுப் பொருள்களை ஏற்றி இறக்கும் தளமாகவும் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ரயில் நிலையம் சாலைவசதிகளையும்கொண்ட நிலையமாகவும் மாற்றியமைக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறினார். (ம-17)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் இலங்கையர் உட்பட 5 பேர் கைது

ஹெரோயின் போதைப் பொருள் தொகை ஒன்றுடன் ஒரு இலங்கையர் உட்பட 5 பேர் இந்தியாவின் சென்னை நகரில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். சர்வதேச சந்தையின் இந்திய விலை பிரகாரம் 100 மில்லியன் பெறுமதியான 6.6 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளை சந்தேகநபர்களிடம் இருந்து பொலிஸார் கைப்பற்றி யுள்ளனர்.

சென்னை மத்திய ரயில் நிலையத்துக்குச் சென்றிருந்த இரண்டு பெண்கள் உட்பட 5 பேரின் பயணப் பொதிகளைச் சோதனையிட்ட பொலிஸார், இந்த போதைப்பொருள்தொகையை கைப்பற்றி யுள்ளனர். இவை பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்டிருந்தன. இந்த போதைப் பொருளை பெற்றுக்கொள்வதற்காக சென்றிருந்த இலங்கையர் ஒருவரையும் இந்திய வருமான வரித்துறையின் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ)

# அதிகாலையில் ஆஸ்பத்திரியில் சேர்ந்த திருடர்கள் காலையில் தப்பியோட்டம்

தென்மராட்சி, மே 15

அதிகாலையில் அடிகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்ந்த இருவர் விடிந்த பின் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலையில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

நுணாவில் மேற்கு மணங்குணாய் பகுதியில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்தின் போது தாக்கப்பட்டுக் காயமடைந்தவர்களே இவ்வாறு தப்பியோடியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் நுணாவில் மேற்கு மணங்குணாய் பகுதியில் உள்ள வீடொன்றின் மின் விளக்குகளை அணைத்துவிட்டு திருட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்த வேளையில் வீட்டில் இருந்த பெண் கூக்குரலிட்டுள்ளார்.

அருகில் ஆலயமொன்றில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த இவரது இரண்டு மகன்களும் ஓடி வந்தபோது கையில் அகப்பட்ட பொருள்களுடன் திருடர் ஓடித் தப்பினர்.

அங்கு வந்த இருவரும் மின் விளக்குகளை இயக்கி விட்டு தேடிப் பார்த்துவிட்டு [illegible] சென்றனர்.

திரும்பவும் மின் விளக்குகள் அணைந்ததை அவதானித்து மகன்மார் இருவரும் ஓடி வந்தபோது இருவர் ஓடியதை அவதானித்து அவர்களைத் துரத்திச் சென்று பிடித்துத் தாக்கியுள்ளனர். பின்னர் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுத்தனர். பொலிஸார் வராததால் ஏ-9 வீதியூடாக அவர்களை அழைத்துச் சென்றனர்.

அங்கு [illegible] உள்ள [illegible] இருந்து வந்த படையினர் என்ன நடந்தது என விசாரித்தபோது குறித்த திருடர்கள் இருவரும் சிங்களத்தில் ஏதோ சொல்ல படையினர் மற்றைய இருவரையும் தாக்கியுள்ளனர்.

காயமடைந்த சகோதரர்கள் நுணாவிலில் உள்ள பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சம்பவத்தைக் கூறிய போது வைத்தியசாலைக்குச் சென்று முறைப்பாடு தெரிவிக்குமாறு கூறியுள்ளனர்.

இதனையடுத்து கந்தசாமி மகிழ்ராஜ்- (வயது-21) என்பவர் வைத்தியசாலைக்கு அதிகாலை 1.05 மணிக்கு சென்றார். மற்றவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

திருடர்கள் எனச் சந்தேகிக்கப்படும் எம்.பி.பிரதீப் ருந்துகுமார (வயது-23) ரூபன் நந்தன (வயது-20) ஆகிய இருவரும் அதிகாலை 1.30 மணிக்கு வைத்தியசாலையில் சேர்ந்தனர்.

இந்த இருவருமே காலையில் வைத்தியசாலையில் இருந்து தப்பியோடி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் சம்பியன்



வலி. வடக்கு, மே 15
யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணி யாழ் மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

கடந்த பல வருடங்களாக தெல்லிப்பழை பிரதேச செயலக அணி யாழ். மாவட்ட மட்டத்தில் ஹொக்கிப் போட்டியில் மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு வந்தபோதிலும் இந்த ஆண்டு முதல் தடவையாக உடுவில் பிரதேசச் செயலக அணி ஹொக்கி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

போட்டியில் இரு அணிகளும் ஒரு அணி மற்றைய அணிக்கு சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபக்கும் வகையில் மோதிக் கொண்டபோதிலும் உடுவில் பிரதேச செயலக அணி தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டது.

முதல் பாதி ஆட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த சாயிராம் ஒரு கோலைப் பெற்றுக் கொண்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மைதானத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதினார்கள்.

ஆனாலும் மீண்டும் உடுவில் பிரதேச செயலக அணி வீரர் மதனகோபன் தனக்குக் கிடைத்த பந்தை அடித்து மீண்டும் ஒரு கோலை கடும் எதிர்ப்பின் மத்தியில் பெற்றுக் கொண்டார்.

போட்டி மிகவும் விறுவிறுப்படைந்தபோதிலும் இரு அணிகளும் சளைக்காது மோதிக்கொண்ட நிலையில் மேலும் கோல் பெறும் வாய்ப்பு அற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் பிரதேச செயலக அணி 02:00 என்ற கோல கணக்கில் தெல்லிப்பளை பரதெுச செயலக அணியை வெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (த-86)

## பந்து வீச்சு, களத்தடுப்பில் கலக்கி ஜொனியன்ஸை வென்றது ஸ்ரான்லி



யாழ்ப்பாணம், மே 15
ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தின் நுட்பமான பந்து வீச்சு திறமையான களத்தடுப்பு ஆகியவற்றுக்கு ஈடு கொடுக்க முடியாது 99 ஓட்டங்களுக்குள் சுருண்டது. ஜொனியன் விளையாட்டுக் கழக அணி யாழ். சென்றலைஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் டொனால்ட் கணேச குமார் வெற்றிக் கிண்ணத்திற்காக 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 45.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 232 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றனர்.

இதில் குணதாஸ் 59 ஓட்டங்களையும், கஜதீபன், 28 ஓட்டங்களையும், அனோஷன் 18 ஓட்டங்களையும், கமல்ராஜ் 17 ஓட்டங்களையும் லெனின்குமார், 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

உதிரிகளாக 59 ஒட்டங்கள் கிடைக்கப்பட்டது. பந்து வீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக றதீஸ்குமார் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 3 இலக்கினையும், காண்டீபன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 41 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும் விதுஷன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 50 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும் வீழ்த்தினர்.

232 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 28.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 99 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் லவேந்திரா 25 ஓட்டங்களையும், அன்புஜன் பிரிந்தாபன் ஆகியோர் முறை 12 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி சார்பாக துசியந்தன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 3இலக்கினையும், சுரேஸ்ஷன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும் றஜீவ் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி வீரன் குணதாஸ் தெரிவு செய்யப்பட்டார். (த-23)

## அனல் பறந்த ஆட்டம் வென்றது செட்டிகுளம்

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியின் 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் கடுமையான போட்டியின் மத்தியில் செட்டிகுளம் மகாவித்தியாலயம் 3:0 என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் வவுனியா தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் செட்டிகுளம் மகாவித்தியாலயமும், முதலியார்குளம் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தில் செட்டிகுளம் மகாவித்தியாலயம் 25:21 25:23 25:18 என்ற புள்ளிகளைப் பெற்று 3:0 என்ற நேர் செற்கணக்கில் வென்று சம்பியனாகியது.

இந்தப் போட்டியில் மூன்றாமிடத்தை பரக்கும் மகாவித்தியாலயம், அதனை எதிர்த்து விளையாடிய புதுக்குளம் மகாவித்தியாலயத்தினை 25:12 25:16 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் 3:0 என்ற நேர் செற்றில் வென்று மூன்றாமிடத்தினைப் பெற்றுக் கொண்டது.

(த-400)

## சமநிலையில் முடிந்தது ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 15
மட்டக்களப்பு மாநகரசபை உதைபந்தாட்ட அணிக்கும் யாழ். மாநகர சபை உதைபந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

முதல்பாதி ஆட்டம் ஆரம்பமாகியது முதல் இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு ஆட்டத்தினை வேகப்படுத்தி எதிர் அணியினரைவிட கோல்பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். இதன் போது மட்டக்களப்பு மாநகர சபை உதைபந்தாட்ட அணியினர் தமது அணிக்கான முதலாவது கோலினை அடிக்க ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

யாழ்.மாநகர சபை உதைபந்தாட்ட அணியினர் கோல்கள் அடிப்பதற்கான பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவர்களால் எதுவித கோல்களையும் பெறமுடியவில்லை. இதனால் மட்டக்களப்பு மாநகர சபை அணி 1:0 என்ற கோல்கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு தங்களது ஆட்டத்தினை வேகப்படுத்தினர்.

யாழ்.மாநகர சபை அணியினர் தமது அணிக்கான முதலாவது கோலினை பெற்றுக்கொண்டன.

இரண்டு அணியினரும் மேலும் தமது அணிக்காக கோல்களைப் பெறவேண்டும் என பல முயற் சிகளை மேற்கொண்டு எதிர் அணி யினர் கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

இதன்போது கோல் பெறுவதற்கான பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் இரண்டு அணியினரும் கோல்கள் எதனையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

(த-23-86)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் அண்மையில் புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகத்தின் திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது.

புதிய ஆண்டிற்கான நிர்வாகிகள் தெரிவு நிகழ்வில் தலைவராக ப.சதீஸ்வரன், செயலாளர் பாக்கியநாதன் பார்த்தீபன், பொருளாளராக கே.துவாரகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகராக க.சிவராசா, சுந்தர், சிவபாலசுந்தரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதேவேளையில்மேற்படி விளையாட்டுக் கழகத்தினால் எதிர்வரும் 19.05.2012 அன்று மாபெரும் விளையாட்டு விழா ஒன்று நடத்தப்படவுள்ளது.

(த-421)

## வவுனியா ஸ்ரீ சுமண, கிடாச்சூரி ம.வி. கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

வவுனியா, மே 15
வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்டமட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 15 வயதினருக்கான ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த ஸ்ரீசுமண மகாவித்தியாலயமும் பெண்கள் பிரிவில் வவுனியா வடக்கு வலய கிடாச்சூரி மகாவித்தியாலயமும் சம்பியனாகின.

இப்போட்டிகளின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான போட்டியில் தெற்கு வலயத்தைச் சேர்ந்த ஸ்ரீசுமண மகாவித்தியாலயமும், பரக்கும் மகாவித்தியாலயமும் மோதின மூன்று சுற்றுக்களைக் கொண்ட இவ் இறுதி யாட்டத்தில் 25:20 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஸ்ரீசுமண மகாவித்தியாலயம் 2:0 என்ற நேர்செற்களில் பரக்கும் மகாவித்தியாலயத்தினை வென்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்துக்கான போட்டியில் வடக்கு வலயத்தைச் சேர்ந்த கிடாச்சூரி மகாவித்தியாலயமும், தெற்கு வலயத்தைச் சேர்ந்த தமிழ் மத்திய மகாவித்தியாலயமும் மோதின. இதில் கிடாச்சூரி மகாவித்தியாலயம் 23:25 25:23 25:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்ற அடிப்படையில் வென்று மூன்றாமிடத்தினைப் பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த கிடாச்சூரி மகாவித்தியாலயமும் தெற்கு வலயத்தைச் சேர்ந்த தர்மபால மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் கிடாச்சூரி மகாவித்தியாலயம் 25:10 25:18 என்ற புள்ளி அடிப்படையில் 2:0 என்ற நேர் செற்களில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது.

அப்போட்டியில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சின்னடம்பன் மகாவித்தியாலயம் வவுனியா இறம்பைக் குளம் மகாவித்தியாலயத்தை 2:0 என்ற நேர் செற்களில் வென்று மூன்றாமிடத்தினைப் பெற்றுக் கொண்டது. (த-400)



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும் பல்கலைக்கழக மேசைப்பந்தாட்ட அணியும் இணைந்து நடத்திய பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற பல் கலைக்கழக அணி பிரதம விருந்தினர் தோல் வைத்திய [illegible], பல் கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் கே.கணேசநாதன் விரிவுரையாளர் செல்வி எஸ்.சுரேந்தினி மற்றும் பயிற்றுவிப்பாளர் கே.மோகன் ஆகியோருடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பதி ராயுடு அதிரடி பெங்களூர் சரணாகதி

அம்பதி ராயுடு - பொலார்ட் இணையின் அதிரடிக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடியாமல் சொந்த மண்ணிலே மும்பையிடம் தோற்றுப் போனது பெங்களூர்.

ஐந்தாவது ஐ.பி.எல். தொடரின் 62 ஆவது போட்டி பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நேற்று பகல் இரவு ஆட்டமாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ஹர்பஜன்சிங் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

பெங்களூர் அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக சிக்ஸர் மன்னன் கிறிஸ் கெய்லும் டில்சானுடம் களமிறங்கினர். வந்த வேகத்திலேயே சிக்ஸர் ஒன்றை அடித்து எதிர்பார்ப்பை கிளப்பிய கெய்ல் புஸ்வாணமாகி 8 ஓட்டங்களுடன் சரிந்தார். கெய்லின் இடத்தை நிரப்ப வந்த அணித் தலைவர் விராட் ஹோக்லி முதல் பந்தை பவுண்டரிக்குத் தட்டிவிட்டு மூன்று ஓட்டங்களைச் சேகரித்து விட்டு நான்காவது ஓட்டத்துக்கும் ஆசைப்பட்ட போது ரன் அவுட்டாகி வெளியேறினார். மறுமுனையில் டில்சான் நிலைத்து நின்று ஆட அவருக்கு திவாரி மறு முனையில் ஒத்துழைப்புக் கொடுத்தார். இரண்டு சிக்ஸர்களை விளாசி 21 ஓட்டங்களைக் குவித்த திவாரி ஹர்பஜன்சிங் வீசிய பந்தை அடித்தாட முற்பட்டு தனது இலக்கை தானே தகர்த்து 'ஹிட் விக்கெட்' முறையில் ஆட்டமிழந்தார். கடந்த போட்டிகளில் அதிரடியில் கலக்கிய டிவில்லியர்ஸ் 14 ஓட்டங்களுடன் பொலார்டின் பந்தில் மலிங்கவிடம் பிடி கொடுத்து மண்டியிட்டார். தொடர்ந்து களமிறங்கினார் அகர்வால். இலக்குகள் ஒரு புறம் சரிந்து கொண்டிருந்தபோது மறுமுனையில் தாக்குப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்த டில்சான் அரைச்சதம் பெறும் வாய்ப்பைத் தவற விட்டு 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆரம்பத்தில் அடக்கி வாசித்த அகர்வால் டில்சானின் வீழ்ச்சிக்குப் பின்னர் சரவெடியாய் வெடித்தார். நான்கு சிக்ஸர்களையும் 6 பவுண்டரிகளையும் பறக்க விட்ட அகர்வால் 30 பந்துகளில் 64 ஓட்டங்களைக் குவித்து பெங்களூர் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற வழிவகுத்தார். மும்பை அணியின் முனாப் பட்டேல், ஹர்பஜன்சிங், ஆர்.பி.சிங் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினை கைப்பற்றினர்.

172 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை துரத்தத் தொடங்கிய மும்பை அணிக்கு சகீர்கான் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். முதலாவது பந்துப் பரிமாற்றத்தின் 5 ஆவது பந்தில் சத நாயகன் சச்சின் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் ஹேர்சல கிப்ஸ் ரன் அவுட்டாக மும்பையின் நிலை பரிதாபமாக மாறத் தொடங்கியது. கடந்த போட்டியில் சதமடித்துக் கலக்கிய ரோகித் சர்மா 5 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப நிலைமை இன்னும் சிக்கலானது. தொடர்ந்து களமிறங்கிய தினேஸ் கார்த்திக் முரளிதரனின் சுழலில் 16 ஓட்டங்களுடன் சுருண்டார். பட்டேலின் பந்தில் டுவைன் ஸ்மித்தும் 6 ஓட்டங்களுடன் அடங்கிப் போனார். அம்பதி ராயுடும் பொலார்டும் இணைந்து அணியைத் தூக்கி நிறுத்த முற்பட்டனர். இருவரும் பெங்களூர் அணியின் பந்துவீச்சாளர்களை பதம் பார்த்து இணைப்பாட்டமாக 122 ஓட்டங்களைப் பெற்றனர். இதனால் 19.4 பந்துப் பரிமாற்றங்களில் மும்பை அணி 173 ஓட்டங்களைப் பெற்று 5 இலக்குகள் வித்தியாசத்தில் பெங்களூரை அதன் சொந்த மண்ணில் தோற்கடித்தது. அம்பதி ராயுடு ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களையும், பொலார்ட் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும் எடுத்தனர். வெற்றிக்கு வழிசமைத்த அம்பதி ராயுடு ஆட்டநாயகனானார். (ந)







# டெக்கானைத் துரத்தி அடித்தது பஞ்சாப்




டேவிட் ஹசியின் அதிரடி ஆட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் மீண்டும் ஒரு தோல்வியைச் சந்தித்தது சங்காவின் டெக்கான் சார்ஜஸ்.

ஐ.பி.எல். ஐந்தாவது பருவத்தின் 61.ஆவது போட்டி நேற்றுமுன்தினம் மொஹாலியில் நடைபெற்றது. டெக்கான் சார்ஜஸ் அணியும் பஞ்சாப் கிங்ஸ் லெவென் அணியும் இதில் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் அணித் தலைவர் குமார் சங்ககார முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இந்த வருட ஐ.பி.எல் தொடரில் கடைசி நிலையில் இருக்கும் டெக்கான் அணி அண்மைக்காலமாக தொடர் தோல்விகளால் தவித்து வந்தது. இந்த நிலையில் வாங்கியதையெல்லாம் வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுக்கும் வெறியுடன் டெக்கான் துடுப்பாட்ட வீரர்கள் களத்தில் ஆக்ரோசத்துடன் இறங்கினார்கள். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான தவானும், பட்டேலும் பட்டையைக் கிளப்பினார்கள். இருவரும் இணைந்து 47 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றபோது அசார் மொஹமட்டின் பந்தில் பட்டேல் பறந்தார். தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் சங்ககார வழமைபோல ஒரு ஓட்டத்துடன் அவன்னாவின் பந்தில் சங்காரமானார். பின்னர் வந்த கமரூன் வைட்டும், தவானும் இணைந்து பஞ்சாப் அணியின் பந்து வீச்சை பதம் பார்த்தனர். இருவரும் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 145 ஆக இருந்த போது பிரவீன் குமாரின் பந்தில் தவான்(71) வீழ்ந்தார்.

[illegible] களமிறங்கிய டானியல் [illegible]பேயாட்டம் ஆடினார். பத்துப் பந்துகளில் 24 ஓட்டங்களை அவர் விளாசினார். இதில் 2 சிக்ஸர்களும் அடங்கும். ஆட்ட நிறைவில் டெக்கான் அணி நான்கு இலக்குகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. கமரூன் வைட் ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களை டெக்கானுக்குப் பெற்றுக் கொடுத்தார். பஞ்சாப் அணி சார்பில் அசார் மொஹமட் இரண்டு இலக்குகளை வீழ்த்தியிருந்தார்.


190 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை பஞ்சாப் அணி துரத்தத் தொடங்கியது. எனினும் அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சைனி 3 ஓட்டங்களுடன் வெளியேறினார். மன்டீப் சிங் 28 ஓட்டங்களை விளாசினார். மார்ஸ் 11 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். பந்து வீச்சில் கலக்கிய அசார் மொஹமட் துடுப்பாட்டத்திலும் வெளுத்து வாங்கினார். ஒரு சிக்ஸர் அடங்கலாக 31 ஓட்டங்களை எடுத்து பஞ்சாப் அணிக்கு நம்பிக்கை ஊட்டினார். அவரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இணைந்து கொண்ட அணித் தலைவர் டேவிட் ஹசியும் சிட்னிஸும் அணியை தூக்கி நிறுத்த முற்பட்டனர். ஹசியின் துடுப்பில் பட்ட பந்துகள் எல்லைக் கோட்டுக்கு அடிக்கடி பறந்தன. எனினும் சிட்னிஸும், சாவ்லாவும் அடுத்தடுத்து ஸ்ரெய்னின் பந்தில் சரணாகதி அடைய பஞ்சாப்பின் நிலை சிக்கலானது. எனினும் ஒரு புறத்தில் ஹசி புயலாக மாறி போராடிக் கொண்டிருந்தார்.

கடைசி நேரத்தில் ஹசியுடன் கை கோர்த்த குர்கீரட் சிங்கும் அதிரடியில் கலக்க 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 194 ஓட்டங்களை எடுத்து 4 இலக்குகளால் டெக்கானை பஞ்சாப் அணி வீழ்த்தியது. இந்த வெற்றி மூலம் அடுத்த சுற்றுக்குள் நுழைவதற்கான வாய்ப்பை பஞ்சாப் அணி தக்கவைத்துக் கொண்டது. அணியின் வெற்றிக்கு மூலகர்த்தாவான டேவிட் ஹசி ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

(ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்ரிட் பகிரங்க டென்னிஸ் பெடரர், செரீனா சம்பியன்



கடந்த வருடம் ஆட்டத்திறன் பாதிப்புற்றதால் தொடர்ச்சியாகத் தோல்விகளைச் சந்தித்து வந்த ரோஜர் பெடரர் தரவரிசைப் பட்டியலில் 3 வருடங்களாகத் தன்வசம் வைத்திருந்த முதலிடத்தையும் இழந்தார். தொடர்ந்தும் சறுக்கிய அவர், மூன்றாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டார். எனினும் இந்த வருடம் பழையபடி எழுச்சி பெற்ற பெடரர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். அத்துடன் தரவரிசையிலும் புள்ளிகளைக் குவித்து மீண்டும் முதலிடத்தைக் குறி வைத்து முன்னேறி வருகிறார்.



மட்ரிட் பகிரங்க டென்னிஸ் சுற்றுத்தொடரில் உலகின் முன்னாள் முதற்தர வீரரான ரோஜர் பெடரர் சம்பியனானார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தோமஸ் பேர்டிக்ஸைத் தோற்கடித்ததன் மூலமே பெடரர் சம்பியன் பட்டத்தை வென்றார். அத்தோடு டென்னிஸ் தரப்படுத்தலில் இரண்டாமிடத்தையும் அவர் பெற்றுக் கொண்டார்.

ஸ்பெய்னில் இடம்பெற்று வந்த இத்தொடரில் உலகின் மூன்றாம் நிலை வீரரான ரோஜர் பெடரர், உலகின் 7ஆம் நிலை வீரரான செக் குடியரசின் தோமஸ் பேர்டிக்ஸை கடுமையான போட்டியின் பின்னர் தோற்கடித்தார். முதலாவது செற்றை 3-6 என்ற கணக்கில் இழந்த பெடரர், கடுமையாகப் போராட வேண்டிய தேவை ஏற்பட்டது. எனினும் அடுத்த இரண்டு செற்களையும் அவர் தலா 7:5 என்ற கணக்கில் வெற்றிகண்டு சம்பியன் பட்டத்தை வெற்றிகொண்டார்.

இந்தச் சம்பியன் பட்டம் மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடரில் ரோஜர் பெடரர் பெற்றுகொள்ளும் 3ஆவது சம்பியன் பட்டம் ஆகும். இந்த வெற்றியின் மூலம் தனது பரம வைரியான ரபேல் நடாலிடமிருந்து தரவரிசைப் பட்டியலில் இரண்டாமிடத்தைப் பறித்துக் கொண்டார் ரோஜர் பெடரர். முதலாமிடத்தில் தொடர்ந்தும் நோவக் ஜெகோவிச் காணப்படுகிறார்.

இந்த வெற்றியின் பின்னர் கருத்துத் தெரிவித்த ரோஜர் பெடரர், மிகவும் கடுமையான போட்டியாக அமைந்ததாகவும், வெற்றிபெற்றமை தொடர்பாக மிகவும் சிறப்பாக உணர்வதாகவும் தெரிவித்தார். தான் சிறப்பாக விளையாடிக் கொண்டிருப்பதாக உணர்வதாகத் தெரிவித்த ரோஜர் பெடரர், வெற்றி பெற்றமை குறித்து மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தொடரில் பெண்களுக்கான தனிநபர் டென்னிஸ் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சம்பியனானார். உலகின் முதற்தர வீராங்கனையான பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த விக்டோரியா அஷெரங்காவை வெற்றி கொண்டே அவர் இதனைச் சாதித்தார். இறுதிப்போட்டியில் செரீனா வில்லியம்ஸ் உலகின் முதற்தர வீராங்கனையை 6:1, 6:3 என்ற கணக்கில் இலகுவாக வீழ்த்தினார். (ங)

# இங்கிலாந்து பிரிமியர் லீக் கிண்ணம்: மன்செஸ்டர் சிட்டி வசம்

இங்கிலாந்து பிரிமியர் லீக் சம்பியனாக மன்செஸ்டர் சிட்டி கழகம் தெரிவாகியுள்ளது. நேற்றுமுன்தினம் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் கழகத்திற்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் கடைசி நேரத்தில் அடித்த இரண்டு கோல்களின் காரணமாக அந்த அணி 3:2 என்ற அடிப்படையில் வெற்றியைப் பெற்றுக்கொண்டதோடு, பிரிமியர் லீக் சம்பியன்களாகவும் மாறிக்கொண்டது.

எத்திஹட் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் போட்டியின் பெரும்பான்மையான நேரத்தில் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் கழகம் முழு ஆதிக்கத்தைக் கொண்டிருந்தபோதும் போட்டி முடிவடையும் நேரத்தில் அந்த அணி பெற்றுக்கொண்ட இரண்டு கோல்கள் போட்டியை மாத்திரமன்றி, சம்பியன் பட்டத்தையும் அவர்கள் வசம் கொண்டு சேர்த்தது.

போட்டி ஆரம்பித்த 39 நிமிடங்களில் மன்செஸ்டர் சிட்டி சார்பாக ஷபலெட்டா முதலாவது கோலை அடிக்க மன்செஸ்டர் சிட்டிக் கழகம் முதற்பாதியில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. எனினும் இரண்டாம் பாதியில் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் கழகம் சார்பாக இரண்டு கோல்கள் குறைந்த நேர இடைவெளியில் அடுத்தடுத்து அடிக்கப்பட்டன.

போட்டியின் 48ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்கப்பட கோல் எண்ணிக்கை 1:1 என்ற கணக்கில் சமப்படுத்தப்பட்டது. எனினும் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணியின் தலைவர் ஜோய் பார்ட்டன் மன்செஸ்டர் சிட்டியின் கார்லொஸ் ரெவெஸ்ஸை முழங்கையால் தாக்கியதன் காரணமாக சிவப்பு அட்டை காட்டி 55ஆவது நிமிடத்தில் வெளியேற்றப்பட்டார். அதன் பின்னர் மன்செஸ்டர் சிட்டி கழகம் 10 பேர் கொண்ட குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணியை சற்று இலகுவாக எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் 10 பேர் கொண்ட குயீன்ஸ் ரேஞ்சர்ஸ் கழகம் மேலும் ஆக்ரோஷமாக ஆடி போட்டியின் 66ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலை அடித்து 2:1 என்ற முன்னிலையைப் பெற்றது. அதன் பின்னர் இரு அணிகளும் தொடர்ந்தும் கோல்களைப் பெற முயற்சித்த போதிலும் அந்த முயற்சிகள் வெற்றி அளிக்கத் தவறின. எனினும் போட்டி முடிவடையும் தருணத்தில் மன்செஸ்டர் சிட்டி சார்பாக ஷேக்கோ கோலொன்றை அடிக்க மன்செஸ்டர் சிட்டி அணியிடம் நம்பிக்கை பிறந்தது. அதன் 94ஆவது




நிமிடத்தில் அகுரோ கோலொன்றை அடித்து மன்செஸ்டர் சிட்டிக் கழகத்திற்கு பிரிமியர் லீக் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இன்னுமொரு போட்டியில் புள்ளிகளின் பட்டியலில் இரண்டாமிடத்தில் காணப்படும் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் சதர்லான்ட் அணிக்கெதிராக 1:0 என்ற அடிப்படையில் வெற்றியைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங)

தகவல் தொழிநுட்பமாணி பட்டம்
BIT கொழும்புப் பல்கலைக்கழகம் BIT
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 10 வருடங்கள் மாணவர்களைத் தயார்படுத்துகின்றோம். Call Us: 0718474239 , 0776577359
A/L இல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் நேரடியாக விண்ணப்பிக்கலாம். ஏனையவர்கள் FIT சித்தியடைவதன் மூலம் விண்ணப்பிக்கலாம். MIS Open Source College
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கம் (வ-து)
வட்டுக்கோட்டை
விசேட அறிவித்தல்
மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதற்குரிய வைப்புப் புத்தகம், தேசிய அடையாள அட்டை போன்ற சான்றாதாரங்களுடனும் உரித்தாளருடனும் சித்தங் கேணியில் உள்ள வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு எதிர்ப்புறம் அமைந்துள்ள வீட்டிற்கு மே 16, 17, 18, 19, 20 ஆகிய திகதிகளில் முற்பகல் 9.00 - பிற்பகல் 4.00 மணிவரை நேரில் வரவும்.
நிர்வாகி

தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கை நெறி
கொழும்பு பல்கலைக்கழகம்.
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். O/L பயின்றோரும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்பக் கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலம் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். விரிவுரைகள் வார. வாரஇறுதி ஞாயிறு மட்டும் என 3 பிரிவுகளாக நடைபெறும். இம்மாணவர்களிற்கு கணினிப்பொறியியலாளர் கற்கைநெறிகளிற்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மேலதிக விவரங்களை இல.324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்: -இணைப்பாளர், BIT கற்கை நெறி
MCS தகவல் தொழில் நுட்ப வளாகம் ☎0212226373, 0772395895ம்.
BIT சிறந்த பெறுபேற்றுக்காக சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்
Send sms <Name>,<Address>,<Course>to772395895&get scholarship
Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.